உதயன்
விலை ரூபா 15.00
www.uthayan.com
சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 30 ஞாயிற்றுக்கிழமை (15.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 262

வவுனியா வந்த நல்லிணக்க ஆணைக்குழு முன்

# பெண்கள் தேம்பித் தேம்பி அழுது உறவுகளைத் தேடித்தர வேண்டுதல்!

## கைது, கடத்தல்களால் பாதிக்கப்பட்டவர்கள்

வவுனியா,ஒகஸ்ட் 15

நேற்று வவுனியாவுக்கு விசாரணை நடத்த வந்த கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க மற்றும் ஆணைக்குழு முன் - கைதான, கடத்தப்பட்ட, சரணடைந்த தமது இரத்த உறவுகளைப் பிரிந்து வாழ்க்கையில் விரக்தி அடைந்த பெண்களில் எழுவரும் - தேம்பித் தேம்பி அழுது, கண்ணீர் மல்கி அவர்களை மீட்டுத்தருமாறு வேண்டினார்கள். தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருவதற்கு உதவுமாறு கெஞ்சிக் கேட்டனர்.

வன்னியில் நடைபெற்ற யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் வெள்ளை வானில் கடத்தப்பட்டுக் காணாமல்போனோர், யுத்தத்தின் பின்னர் படையினரிடம் சரண் அடைந்தவர்கள் மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் ஆகியோர் தொடர்பான தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை என்று அழுதவாறு பெண்கள் எழுவரும் விண்ணப்பித்தனர்.

அவர்களைக் கண்டுபிடித்து தம்மிடம் ஒப்படைத்துத் தமது வாழ்வைச் சீராக்க உதவுங்கள் என்று ஆணைக் குழு உறுப்பினர்களிடம் தளதளத்த குரலில் விண்ணப்பித்தனர்.

வவுனியா செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஆணைக்குழு அமர்வில் மொத்தம் பத்துப் பேர் சாட்சியம் அளித்தனர். அவர்களில் எழுவர் அபலைகளாகிவிட்ட பெண்கள். சோகமே உருவாகக் காணப்பட்ட அவர்கள் கவலை ததும்ப, தேம்பித் தேம்பி அழுதவாறு சாட்சியம் அளித்தனர். (28ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளவத்தையில் தமிழர் விலைக்கே வீடுகளை வாங்கி வாழ்கிறார்கள் ஆனால் வன்னியிலோ காணிகளை அபகரித்துச் சிங்களவர் குடியேற்றம்

## வவுனியாவில் நல்லிணக்க ஆணைக்குழு முன் நகரசபை உறுப்பினர் லிங்கநாதன் சாட்சியம்

வவுனியா,ஒக.15

வெள்ளவத்தையில் தமிழர்கள் பணம் கொடுத்து விலைக்கு வீடுகள் வாங்கி வாழ்கிறார்கள். அதபோல் நாட்டில் எந்தப் பகுதியிலும் சிங்கள மக்களும் வாழலாம் என்று கூறுவது நியாயம்தான். எந்த மக்களும் எங்கும் வாழலாம் என்பதை ஏற்கலாம்.

வெள்ளவத்தையில் தமிழ்மக்கள் அரசின் செலவில் குடியேறவில்லை. ஆனால் கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அரசின் தூண்டுதலில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதுதான் நியாயமற்ற விடயமாகும்.

வவுனியா நகரசபையின் முன்னாள் தலைவரும் தற்போதைய அங்கத்தவரும் நெடுங்கேணியைச் சேர்ந்தவருமான ஜி. (28ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



யாழ்ப்பாணம்,ஒக.15

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லைக் கந்தன் பெருந்திருவிழா இன்று முற்பகல் 10மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 25 நாள்கள் இடம் பெறும் இப்பெருந்திருவிழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் இம்முறை கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

புலம்பெயர்ந்தவர்கள், தெற்கில் வசிக்கும் தமிழர்கள், தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையினர் என பெரும் எண்ணிக்கையானவர்கள் உற்சவத்தில் பங்குபற்றுவர் என்பதால் (28ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குச் சமீபமாக

## வைமன் வீதியில் நேற்று நள்ளிரவு வீடு புகுந்து நகைகள், பணம் கொள்ளை

### வாள்களுடன் வந்த எண்மர் கைவரிசை

யாழ்ப்பாணம், ஒக. 15

நல்லூர், வைமன் வீதியில் நேற்று நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் வீடு புகுந்த ஆயுதக்குழு ஒன்று அங்கிருந்த பெண்களை வாளால் வெட்டிவிட்டு நகை, பணம் ஆகியவற்றைக் கொள்ளை அடித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளது.

இந்தத் திகிலூட்டும் கொள்ளைச் சம்பவம் மக்கள் மிகுதியாக - நெருக்கமாக வாழும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கையில் படுகாய மடைந்த நிலையில் கே.பரமேஸ்வரி (வயது 60) என்பவரும் மற்றும் எஸ்.சுரேணுகா (வயது 24) ஆகிய இருவரும் நேற்று அதிகாலை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

(28ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ நீதிமன்றத்திற்கு ஜனாதிபதி அங்கீகாரம்

# சரத் பொன்சேகாவின் ஜெனரல் பதவி தரங்கள், பதக்கங்கள் அனைத்தும் ரத்து!

கொழும்பு,ஒக.15


முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான முதலாவது இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சரத் பொன்சேகா இது வரை இராணுவத்தில் வகித்து வந்த ஜெனரல் பதவி உட்பட தரங்கள் மற்றும் பதக்கங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

சரத் பொன்சேகா இனிமேல் சாதாரண பொதுமகனாகவே கருதப்படுவார்.

இராணுவத்தில் சேவையாற்றிய போது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சரத் பொன்சேகாவுக்கு எதிராக முதலாவது இராணுவ நீதிமன்றம் (28ஆம் பக்கம் பார்க்க)


உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!
நல்லைக் கந்தனின்
உற்சவக் காலத் திருக்காட்சிகள்
தினமும் உங்கள் உதயனின்
வலைத் தளத்திலும்....
www.uthayan.com

இறக்குமதி வரி நீக்கம்..
சிங்கர்
பொருட்களின் விலை குறைப்பு..
(011) 5 400 400 www.singersl.com

SL-SF40RCN
முன்னர் ரூ. 8999/-
இப்பொழுது ரூ. 7999/-
SINGERPlus

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கிளிநொச்சி புலமைப் பரிசில் மாணவர்களுக்கான சுட்டெண்

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான சுட்டெண்களை வழங்க எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் தத்தமது பாடசாலைகளில் அதிபர்கள் சமுகமளிக்க வேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார். காலை 8 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடையில் சுட்டெண்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் பரீட்சார்த்திகளை கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-ஐ)



## முத்துமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதி வல்லுனர்.

**ஸ்ரீராம சாஸ்திரி**
*0775183681, 0775183109*

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விவரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கைரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவர் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்து சாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்டநஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத் திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்து தரப்படும்.

இவற்றினைத் தெரிந்துகொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்துப் பயன் பெறுங்கள்

**K.R.V.INN**
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோயில் முன்பாக)

*கைரேகை பார்க்கும் நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்.*

## உச்ச பயனாளிகளுக்கு மிக உயர்ந்த பதவிகள்

### தொழில் எதிர்பார்ப்பு உத்தரவாதப்படுத்தப்பட்டவை

பரந்த சந்தை வாய்ப்பை உடையதும் தீவு முழுவதும் முதன்மை பெற்றுள்ளதுமான செலுலர் தொலைபேசி மற்றும் ஸ்கை ரெலிபோன் சிஸ்ரம் (CCTV) கமராக்கள் அவற்றிற்கான உபகரணங்கள் என்பவற்றின் விநியோகஸ்தர்களாகிய நாங்கள் எங்களது தொழிலை விரிவுபடுத்த எண்ணியுள்ளோம். அதற்காக நாங்கள் இளமை, சுறுசுறுப்பு, ஊக்கம், உயர்ந்த குணம் உடையவர்கள் மேலும் தங்களை வளர்த்துக் கொள்வதற்கு எங்களுடன் சேர்ந்து எங்களையும் உங்களையும் வளமாக்கிக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி யாழ்ப்பாணம், மானிப்பாய், சங்கானை, நெல்லியடி, கிளிநொச்சி, பருத்தித்துறை, மன்னார், பேசாலை, தலைமன்னார், செட்டிக்குளம், மாங்குளம், முருங்கன் ஆகிய இடங்களில் விற்பனை நிறைவேற்று அதிகாரியும் காட்சி அறை விற்பனை அதிகாரியாகவும் இணைந்து கொள்வதற்கு நேர்முகப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் நடைபெறும்.

**ஓகஸ்ட் 20 ஆம் திகதி**
**அபான்ஸ் காட்சியறை**
*160, கே.கே.எஸ். வீதி, சுன்னாகத்திலும்*

**ஓகஸ்ட் 21 ஆம் திகதி**
**அபான்ஸ் காட்சியறை**
*106, கிராண்ட் Bazaar*
மன்னாரிலும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

**தகைமைகள்**
★ 35 வயதிற்கு குறைந்தவர்கள்
★ மேற்கூறப்பட்ட இடங்களில் உள்ளவர்கள்
★ குறைந்தது க.பொ.த (சா.த) கல்வித் தகைமை
★ விற்பனையில் முன் அனுபவத்திற்கு முன்னுரிமை
★ மேற்குறிப்பிடப்பட்ட திகதிகளில் நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்கத் தவறியவர்கள் தங்களது சுயவிவரக் கோவையை கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் மூலம் தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கவும்.

Human Resources Division
**Abans Office Automation (Pvt) Ltd.,**
498, Galle Road, Colombo 3.
Telephone : 0112565265/6
Fax: 011 2565693
hrd@abans.lk

**Abans**
Office Automation (Pvt) Ltd.
Genuine Products. Genuine Service.

## SHAMROCK ஈச்சமோட்டை

* A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன் GIT ஆங்கிலம்
* Gr 1 முதல் O/L வரை
* O/L REPEAT
* ENG. MED. 6TO 11
* ENG LIT 10,11
* புலமைப்பரிசில் ⑤
* சிங்களம் I.C.T

## வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பெரிய கோயிலுக்கு அண்மையில் 4 அறைகளைக் கொண்ட ஒரு பரப்புடன் கூடிய வீடும், பாண்டியந்தாழ்வு, கொழும்புத்துறை வீதியில் நல்லதண்ணீர்க் கிணற்றுடன் கூடிய 3 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
*தொடர்பு:* 0772479356, 0212228234

## வெளிநாட்டு விசா

MALAYSIA, AUSTRALIA STUDENT VISA. வேலை வாய்ப்புடன் EMPLOYMENT WORK VISA. உங்கள் தகுதிக்கு ஏற்றவாறு வேலை ஏற்பாடுகள் செய்து தரப்படும். தம்பதிகளாகவும் புறப்படலாம்.

தொடர்பு:
(சி-569823) **0771328907**

## காணி விற்பனைக்கு

1. சுதுமலை அம்மன் கோயிலுக்கு எதிரில் 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 4/6 பரப்பு துண்டுகளாக விற்கப்படும்.
2. நீர்வேலி அரசகேசரி விநாயகர் கோயிலுக்கு அருகாமையில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
3. நீர்வேலி தச்சன் மடத்துக்கு அருகாமையில் நடு ஒழுங்கையில் 15 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:* T.P.: 0112583499
0722242805
*(102037)*

## வீடும் காணியும் விற்பனை

6 பரப்புக் காணியும் வீடும் தொல்புரம் வழக்கம்பரை அம்மன் வீதி முன்பாக பிரதான வீதிக்கு அண்மையில் விற்பனைக்குண்டு

தொடர்பு:
**சி.ரோகினி**
*(102040)* *0716867209*

## மணமகள் தேவை

கௌரவ குடும்பம் R.C மதத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியா P.R உடைய மென்பொருள் பொறியியலாளர் பட்டம்பெற்ற 28 வயது நிரம்பிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.
**தொடர்பு:- 0775151548**

## வீடு விற்பனைக்கு

கண்டி றோட், 678/11, முள்ளி வீதி, அரியாலை என்னும் முகவரியில் ஒரு பரப்பும் 2 குளியும் கூடிய காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0213006263
நாவலர் றோட், ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்பாக,
(லயன்ஸ் பான்சி ஹவுஸ்)

## வீடு, காணி விற்பனைக்கு

சகல வசதிகளுடன் கூடிய 5 அறை கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
**ST Johns, Chundukuli Girls.**
**பாடசாலைகளுக்கு அருகில்.**
தொடர்புகளுக்கு *T.P:* 077 2900033
E.mail. smariyan@hotmail.com

## இலகு ஆங்கில பயிற்சி நெறி

அடிப்படையிலிருந்து ஆங்கிலம் மிக நவீன ஒலி ஒளி மூலமான கற்பித்தல் முறையில், உங்கள் கல்வி நிலைக்கு ஏற்ப கற்பிக்கப்படும். விபரங்கள் நேரில் இலவச நேரடி கலந்துரையாடலுக்கு உடன் அழையுங்கள் 021-3208342 0777-302882

நொலேஜ் யூனிவேர்ஸ்
**KNOWLEDGE UNIVERSE®**
No 75, Temple Road, Jaffna

## ஸ்ரீ கற்பக விநாயகர் தளபாட நிலையம்



மொறட்டுவவில் இருந்து விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட அலுமாரிகள், கதிரைகள், அலுவலக மேசைகள், கணனி மேசைகள், மெத்தைகள், கட்டில்கள் போன்ற அனைத்துத் தளபாடங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: 20,000/- ரூபாய்க்கு மேல் பொருள்கள் பெற்றுக் கொள்பவர்களுக்கு அன்பளிப்புப்பொருள்கள் வழங்கப்படும்.

தவணை முறையில் பொருள்கள் வழங்கப்படும்.

**ஸ்ரீ கற்பக விநாயகர் தளபாட நிலையம்**
512, கே.கே.எஸ்.வீதி, மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 0214922941

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கேசவநாதன் பாக்கியலட்சுமி



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கேசவநாதன் பாக்கியலட்சுமி நேற்று (14.08.2010) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா கேசவநாதனின் அன்பு மனைவியும் முருகதாஸ், கேமதாஸ் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் பராசக்தி (சுவிஸ்), தேவராசா (ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்), காலஞ்சென்ற நகுலேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நகுலாம்பிகை, சின்னராசா மற்றும் நாகம்மா (ஓய்வுபெற்ற அதிபர்), குலசிங்கம் (J.P), பரமநாதர், சறோஜினி தேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மயூரி, மதுசான, தேனுஜா, தனுசன் (நோர்வே), டிவ்வியா (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32/2, பிரப்பங்குளம் வீதி,*
*வண்ணார்பண்ணை.*
T.P. : 0212221817,
0779024365 *(102036)*

தகவல் :
**கே.முருகதாஸ்**
*(மகன்)*

### செல்லத்துரை துரைராசா

ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை துரைராசா நேற்று (14.08.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய செல்லத்துரை-நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களாகிய கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் செல்வரஞ்சிதத்தின் (ராசாத்தி) பாசமிகு கணவரும், சுதர்சனின் (தம்பன்) பாசமிகு தந்தையும் ஜெயரஞ்சினியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**மனைவி** *(ராசாத்தி),*
**மகன்** *(தம்பன்).*

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.* *(102039)*

### P.சண்முகலிங்கம்

**(ஓய்வுபெற்ற D.O.A., நீர்ப்பாசன இலாகா, நாடகக்கலைஞர்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கிருலப்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா - சண்முகலிங்கம் கடந்த (13.08.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியினரின் மகனும், வியாழேஸ்வரி (சந்திரா, ஓய்வுபெற்ற படம் வரைஞர்) அவர்களின் அன்புக் கணவரும், பிரியந்தி (வைத்திய கலாநிதி, புத்தளம்), ருக்மன் (H.S.B.C.வங்கி, உதவி முகாமையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் டரனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொரளை ஜெயரெட்ண மலர்ச்சாலையில் நாளை (16.08.2010) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிருலப்பனை,*
*கொழும்பு.* *(102028)*

தகவல் :
**மனைவி, மக்கள்.**

## திருமுருகன் கொம் ஒன்ஜ்

DHL WORLDWIDE EXPRESS

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

**உலக நாடுகளுக்கு ஆகாய கடல் வழி மார்க்க பொதிகள் சேவை**

DHL விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை DHL

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

*நாட வேண்டிய முகவரி*
259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

**TCN EXPRESS**
2B, Nelsan Place, Colombo -06

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி
5, திருநகர் வீதி, கிளிநொச்சி
44, மில் றோட், வவுனியா

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம் பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களைத் திறந்தபடி குழியில் விழுந்தது ஐ.தே.க.

# மஹிந்தவின் வலையில் சிக்கித் தவிக்கிறார் ரணில்

*'லங்காதீப' சிங்கள நாளிதழில் பிரதி வியாழக்கிழமை தோறும் வெளிவரும் 'வியாழன் அலசல்' கட்டுரைத் தொடரில் கடந்த 12 ஆம் திகதி வெளியான கட்டுரையின் தமிழ் வடிவம் இது*

ஒரு மனிதன் இருட்டில் தடுமாறி விழுந்த குழியில் ஒருபோதும் பகல் வேளையில் விழுந்துவிட மாட்டான் என்றொரு பழமொழி வழக்கில் உள்ளது.

ஆனால் ஐ.தே.கட்சியோ தான் இரவில், இருட்டில் தடுமாறி விழுந்த குழியைப் பகல்பொழுதிலும் தேடிக் கண்டுபிடித்து அக்குழியில் விழுந்துவிட்டுள்ளமை கர்ப்பிணிப் பெண்களுக்கு எற்படும் மசக்கை ஆசை போன்ற புதுமையானதொரு ஆசையினால் ஆகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தியவன்னா ஓயாவில் தூண்டில் போட்டு ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவராவது தூண்டிலில் அகப்படுவார்களா என முயன்று பார்க்கும் பொறுப்பை பஸில் ராஜ



பக்ஷவிடமும் நாமல் ராஜபக்ஷவிடமும் ஒப்படைத்துவிட்டு ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோதே அது ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரச பக்கம் இழுப்பதற்கான திட்டமே என்பதை விரல் சூப்பும் வயதுடைய சிறுபிள்ளையும் நன்கறியும்.

இதேபோன்றுதான் கடந்த 2006ஆம் ஆண்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்கவைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்ததன்மூலம் ஐ.தே. கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேரை அரசின் பக்கம் இழுத்துக்கொண்டார். அதனை ஐ.தே.கட்சி, நடு இரவில் போக்குவரத்து நெரிசலையும் புரிந்துகொள்ளாமல் பயணித்து படுகுழியில் வீழ்ந்ததாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் இந்தத் தடவையோ அன்று நடு இரவில் போக்குவரத்து நெரிசலையும் தெரிந்துகொள்ளாமல் பயணித்து குழியில் விழுந்தது போலல்லாது, நேரத்தக்க ஆபத்துக் குறித்து நன்கு தெரிந்துகொண்டே ஐ.தே.கட்சி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்றுள்ளது.

*சிங்கள மூலம்*

**உபுல் யோசெப் பெர்னாண்டோ**

நிலைமை குறித்துத் தெளிவாகத் தெரிந்துகொண்டே இந்நாட்டின் மாபெரும் கட்சியொன்றான ஐ.தே.கட்சியை ஒரு சதத்துக்குக்கூடப் பெறுமதியற்றதாக்கி விட்டு ஐ.தே. கட்சியின் தலைமைத்துவம் கண்ணைத் திறந்துகொண்டே குழியில் வீழ்ந்துள்ளது.

குழி முன்னாலுள்ளது என்பதனைத் தெரிந்துகொண்டே குழியில் பாய விரும்பினால் பாய்ந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.தே.கட்சியின் தலைமைத்துவத்துக்குக் குழியைக் காட்டிய அதே சமயம் தியவன்னா ஓயாவில் தாம் இட்ட தூண்டிலில் மாட்டிக்கொண்ட இரு ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பஸில் ராஜபக்ஷவும் நாமல் ராஜபக்ஷவும் அலரி மாளிகைக்கு அழைத்து வந்திருந்தனர்.

**பாவம் ரணில்**

இப்படி நடக்கும் என்பதைத் தெரிந்துகொண்டும் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளச் சென்றதன் மூலம் ஜனாதிபதி தோண்டிவைத்த குழியில் வீழ்ந்து விட்டார். தாம் மட்டுமே அவ்விதம் ஜனாதிபதியின் குழியில் வீழ்ந்திருந்தால் பரவாயில்லை. ரணில் தமது தலைமைத்துவத்தின் கீழ் செயற்படும் ஐ.தே.கட்சியுடனல்லவா ஜனாதிபதி தோண்டிவைத்த குழியில் வீழ்ந்துவிட்டார்.

மாபெரும் கட்சியான ஐ.தே.கட்சி இவ்விதம் மற்றொரு தரப்பு தோண்டி வைத்த குழியில் வீழ்வதென்பது இதுதான் முதற்தடவையோ இரண்டாவது தடவையோ அல்ல. சந்திரிகாவின் காலமுதற்தொட்டு ஐ.தே.கட்சி இவ்விதம் பள்ளத்தில் வீழ்ந்து வீழ்ந்து எழ நேர்ந்துள்ளது.


ஐ.தே.கட்சி இவ்விதம் குழியில் இடறிவிழ வேண்டியதொரு கட்சிதானா?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரு பாதங்களுக்கு அருகில் இத்தகைய விதத்தில் இடறிவிழும் விதத்தில் ஐ.தே.கட்சி செய்தபாவம் யாதென்ன?

**1977இல் சு.கவுக்கு நேர்ந்த கதி**

1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் பெரும் தோல்வியைச் சந்தித்த சுதந்திரக்கட்சியால் எதிர்க்கட்சியின் தலைமைத்துவத்தைக்கூட ஈட்டிக்கொள்ள இயலவில்லை. விரல்விட்டு எண்ணக்கூடிய அளவு சிறு எண்ணிக்கையினரான சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே அந்தத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தனர். ஆணைப்

## அலரி மாளிகையில் உண்டு மகிழும் பச்சைக் கட்சிக்கார்



பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மட்டுமே ஆக்க இயலாததைத் தவிர ஏனைய அனைத்தையும் நிறைவேற்றத்தக்க, நாடாளுமன்றத்தின் ஆறில் ஐந்து மடங்கு பெரும்பான்மைப் பலத்தை அத்தேர்தலில் ஐ.தே.கட்சித் தலைவர் ஜே.ஆர். ஈட்டியிருந்தார்.


தமது அத்தகைய அதீத பலத்தைப் பயன்படுத்தி ஜே.ஆர்., சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோவின் குடியுரிமையைப் பறித்து அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையையும் இழக்க வைத்தார்.

1977ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தலில் பெருவெற்றியீட்டி அரசமைப்பைப் புதிதாக உருவாக்கி, அதன்மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகி, 1982ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வென்று பல ஆண்டுகளுக்குத் தமது ஜனாதிபதிப் பதவியைப் பாதுகாத்துக் கொள்ளவும், பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தி நாடாளுமன்றத்தின் ஆயுள் காலத்தை நீடிக்க வழிசெய்தது நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து மடங்கு பெரும்பான்மைப் பலத்தை நாடாளுமன்றத்தில் ஸ்திரப்படுத்திக் கொண்ட ஜே.ஆருக்கு 1983ஆம் ஆண்டின் ஜூலை கலவரம் பெரும் அரசியல் சவாலாக அமைந்தது.

**ஜே.ஆருக்கு இந்தியா அழுத்தம்**

அந்த ஜூலைக் கலவரத்தையடுத்து உருவான யுத்தத்தை நிறுத்துவதற்கு சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டுமாறு இந்தியா, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தது.

அதுமட்டுமல்லாது குறிப்பிட்ட அந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு சுதந்திரக் கட்சிக்கும் அழைப்பு



விடுக்குமாறும் இந்திய அரசு ஜே.ஆருக்கு அழுத்தம் கொடுத்தது.

இந்தியாவின் அழுத்தம் காரணமாக சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்குமாறு ஜே.ஆர்., சுதந்திரக் கட்சிக்கு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்புக் கிடைத்ததும் சுதந்திரக் கட்சியின் தலைவியான சிறிமாவோ, கட்சியின் அரசியற் செயற்குழுவைக் கூட்டினார்.

சுதந்திரக் கட்சிக்கும், கட்சி ஆதரவாளர்களுக்கும், இந்த நாட்டுக்கும் ஜே.ஆர் இழைத்த நியாயவீனங்கள் காரணமாக நான் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்க விரும்பவில்லை என சிறிமாவோ, கட்சியின் அரசியற் செயற்குழுவுக்குத் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்தார்.

**சு.கவின் நிபந்தனை**

''தாங்கள் எவ்வாறு அம் மாநாட்டில் பங்கேற்க முடியும்? தங்களது குடியியல் உரிமையைப் பறித்தவர்களல்லவா அவர்கள்? எமது கட்சியின் பிரதிநிதிகள் குழுவொன்று ஜே.ஆரைச் சந்தித்து சுதந்திரக் கட்சி அம்மாநாட்டில் பங்கேற்க வேண்டுமானால் எமது கட்சித் தலைவியின் பறிக்கப்பட்ட குடியியல் உரிமை மீண்டும் வழங்கப்பட வேண்டுமென நிபந்தனை விதிப்போம்'' என்ற முடிவைச் சுதந்திரக் கட்சியின் அரசியற் செயற்குழு எடுத்தது. அத்தீர்மானத்தின்படி கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான கே.பி.ரத்நாயக்க தலைமையில் அனுரா பண்டாரநாயக்க மற்றும் கட்சியின் செயலாளர் ரத்னசிறி விக்கிரமநாயக்க உட்பட மூவர் கொண்ட குழு ஜனாதிபதி ஜே.ஆரைச் சந்தித்தது.

குறிப்பிட்ட அக்குழு முன்வைத்த நிபந்தனை காரணமாக ஜே.ஆர். சிரமத்துக்கு உள்ளாகியது மட்டுமல்லாது கடும் கோபத்துக்கும் உள்ளானார். அக்குழுவைச் சந்தித்த அடுத்தநாள் பொதுக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய வேளையில் சிறிமாவோவையும் சுதந்திரக் கட்சியையும் ஜே.ஆர். கடுமையாக விமர்சித்து உரையாற்றினார். அவரது அந்த உரை பத்திரிகைகளில் பிரசுரமான தினத்தன்றே சுதந்திரக் கட்சியும் ஜே.ஆருடனான சந்திப்புக் குறித்து அறிக்கையொன்றை விடுத்திருந்தது.

அந்த அறிக்கையில், சுதந்திரக்கட்சியின் பிரதிநிதிகள் குழுவைச் சந்தித்த சமயம் ஜே.ஆர். தாம் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியைத் திருப்திப்படுத்துவதற்காகவே சர்வகட்சி பிரதிநிதிகள் மாநாட்டை கூட்டுவதாகவேயொழிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் அம்மாநாட்டைக் கூட்டவில்லை எனத் தெரிவித்ததாகக் குறிப்பிடப் பட்டிருந்தது.

**இந்தியாவின் தந்திரம்**

இதன் காரணமாக இந்தியாவின் - அழுத்தம் மேன்மேலும் இறுக்கம் கண்டது. அதனால் ஜே.ஆர். கடும் சிரமத்துக்கு உள்ளானார். ஜே.ஆர். தம்மை ஏமாற்ற முயல்வதாகக் கூறி இந்திய அரசு ஈழத்தமிழ்ப் போராளிகளுக்கு மேலும் உதவி, ஒத்தாசைகளை வழங்க ஆரம்பித்தது.

ஜே.ஆரின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசால் சிரமங்களை எதிர்நோக்கி நலிவு கண்டிருந்த சுதந்திரக் கட்சி அந்த வேளையில் ஜே.ஆருக்குப் பாடம் கற்பிக்கும் விதத்தில், ஜே.ஆரால் நாட்டை நிர்வகிக்க இயலாதெனக் குற்றம் சாட்டி விமர்சிக்கத் தலைப்பட்டது.

அன்று ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்ற இயலாத ஒன்றைத் தவிர மற்றெதனையும் தம்மால் செய்ய இயலுமென நினைத்த ஜே.ஆருக்கு - ஐ.தே.கட்சி அரசுக்கு, கடும் நலிவு நிலையை, சிரமத்தை ஏற்படுத்த, அரசியலில் பெரும் பின்னடைவைச் சந்தித்திருந்த சுதந்திரக் கட்சி முதுகை நிமிர்த்திச் செயற்பட்டது இதேவிதத்திலாகும்.

அன்று சுதந்திரக்கட்சி உட்பட்டிருந்த கடும் நலிவு நிலையை விடப் பெருமளவில் குறிப்பிட்டுக் கூறத்தக்க பலத்துடன் இன்று செயற்பட்டுவரும் ஐ.தே. கட்சியால் முதுகை நிமிர்த்தி



இன்று செயற்பட முடியாமற்போனதேன்?

உண்மையில் சொல்லப் போனால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பையேற்று அவருடன் பேச்சுவார்த்தைக்குச் சென்ற சகல சந்தர்ப்பங்களிலும் ஐ.தே.கட்சி தானே தனது முதுகை வளைத்துக்கொண்டது; கூனிக்குறுக நேர்ந்துவிட்டது.

*தமிழில்*

**வீயெஸ்ரீ**

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று ஜெனரல் சரத் பொன்சேகாவைச் சிறையில் அடைத்துவிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்கவைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தவேளையில், ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகைக்குச் சென்ற வேளையிலேயே ஐ.தே.கட்சியினுடையது மட்டுமல்லாது எதிர்க்கட்சித் தரப்புக்களினதும் அரச விரோத பொது மக்களது முதுகெலும்புகளும் முறிந்துபோய்விட்டன.

(27ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
1942.04.28

மறைவு:
2010.07.16

மறுபிறவி மானுட
உண்மையெனில்
மறுபடியும் பிறந்திடுங்கள்
எங்கள் உறவாய்!



## அமரர் சின்னவன் அரியகுட்டி

(சாரதி, ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி)

இன்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை மதியம் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாவடி வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினரும்,
மருமகன்மாரும்



# மரண அறிவித்தல்

## திருமதி வேலுப்பிள்ளை அன்னலக்சுமி



மாதகலைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை அன்னலக்சுமி 06.08.2010வெள்ளிக்கிழமைலண்டனில்காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-ராமாசி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் இராமலிங்கம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் விமலநாதனின் அன்புத் தாயாரும்திருமதி சிந்தியாவின் அன்பு மாமியாரும், முரளிதரன், தேவமயூரன், அனித்தா, நிருபா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

இ.வேலுப்பிள்ளை (கணவர்), லண்டன். தொ.பே: 00442089250406

இ.தம்பிப்பிள்ளை
காஞ்சிபுரம், மாதகல்



# 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் கந்தசாமி பொன்னம்மா

(தங்கோடை, காரைநகர்)



தோற்றம்: *1927.02.21*

மறைவு: *2010.07.24*

எல்லோருக்கும் அன்னையாய்
எம் தாயே நீரிருந்தீர்!
பேதமொன்று நாமறியோம்!
உணவோடு அறிவுரையும்
ஊட்டியெமை வளர்த்தீர்
கரிகாலக் காலனவன்
உம் கணக்கை முடித்து வைக்க
வானுலகு சென்றனையோ
உமதாத்மா சாந்திபெற எந்நாளும்
நாமுமக்காய் வேண்டுகின்றோம்
அரனடியில் நீர்பெறுக சாந்தி!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது தாய் கடந்த *24.07.2010* சனிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தியினைக் கேள்வியுற்று தொலைபேசி, தந்தி, தபால் மூலமும் நேரிலும் அன்னாரின் துக்கத்தினை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் *25.07.2010* ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் *13.08.2010* அன்று நடைபெற்ற அந்தியேட்டி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் இன்று *(15.08.2010)* ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிரியை நிகழ்வில் கலந்துகொள்பவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் எமது அன்புத் தெய்வத்தின் இழப்பினைக் கேள்வியுற்றது முதல் இன்றுவரை அனைத்து வழிகளிலும் எம்முடன் தோளோடு தோள் நின்று சகலவிதமான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
தங்கோடை, காரைநகர்.



# FINANCIAL SPONSORSHIP

ஐரோப்பிய நாடுகளில் கல்வி கற்பதற்கு SPONSORSHIP பிரச்சினையா ? உடன் தொடர்புகொள்ளுங்கள்:

**0714 550055**

**COLOMBO BUSINESS COLLEGE**
79-1/5 (1st Floor) Galle Road, Wellawatte, Colombo-06
Tel: 0114-518580, 011-2362052



விற்பனைக்கு

JAC, CHINA LORRY, LUMALA சிறிய BIKE வடமராட்சியிலும், WASHING MACHINE கொழும்பிலும் உடன் விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு: 0776560149, 0714856888


## மஞ்சவனப்பதி முருகன் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 15

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு அபிஷேகமும் மு.ப. 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)


# Hatton National Bank

## அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 20.06.2009 இற்கு முன்னர் அடகு வைத்து இது வரை மீட்கப்படாத , காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 21.08.2010 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால் ....

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினைப் பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஹற்றன் நஷனல் வங்கி.**



# DANISH DEMINING GROUP

Danish Demining Group (DDG) has been in operation in Sri Lanka since 2003. Presently the work force consists of 600 personnel which is expected to increase to 700, including deminers, administrative staff and a Management group, mainly built upon national capacity supported by expatriate Programme Manager, Operations Manager and Technical Advisors. DDG presently operates in Jaffna, Vavuniya, Killinochchi districts.

DDG is an active participant in the global effort to reduce the effects of landmines. The objective of DDG is to contribute towards the goals and objectives of the National Mine Action Programme in Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas. The Demining project in Sri Lanka is scheduled to run upto December 2010, with the possibility of extension upto 2011, depending on funding.

## VACANCIES ( 2 Positions)

## GEOGRAPHICAL INFORMATION SYSTEMS (GIS) OFFICER ( Base - Vavuniya)

**Qualifications**
He should be a Sri Lankan National.
Graduated in Geography / planning / a degree or diploma having GIS as subject
Proven computer skills including the use of: *Microsoft Word*
Ability to work proactively and with initiative.
Team approach.
Good interpersonal skills.
Flexible, reliable and trustworthy.
Good level of English (verbal and written)
Good level of Tamil (verbal and written)
Understanding of Sinhala
2 Years Work Experience

**Basic Functions**
-Responsible for data acquisition in the minefield
-Responsible for updating the IMSMA data base.
-Assist the FOO with Survey of new tasking folders
-assist FOO with survey on completion
-Assist Vavuniya office with IMSMA/GIS
-Responsible for the EOD GIS log
-Responsible for the GIS in Survey
-Responsible for training of Survey teams in GPS, Compass and maps

**COMMUNICATIONS ASSISTANT - (Base - Jaffna)**

**Qualifications**
He should be a Sri Lankan National
Completed High School Education.
Proven computer skills including the use of: *Microsoft Word*
Ability to work proactively and with initiative.
Team approach.
Good interpersonal skills.

**Basic Functions**
Communicate with all field teams daily.
Communicate with all Technical Advisors/Field Operations Officers daily.
Update Operations Map Board daily.
The point of contact for any CASEVAC incident in all DDG areas of operations.
IT
Produce and update Communications/Net Diagrams for the DDG Operation.
Produce and Update contact lists for the DDG operation.

**How to Apply**
Applications for all positions should submit a letter to DDG, stating why and how they fit the selection criteria and attach a copy of CV with contact details and names of two non-related referees to the following address.

**Closing Date:** 21.08 . 2010 ( For both positions)
Only candidates who meet all the above requirements will be invited for an interview/test. The Job description could be obtained on request.

**DANISH DEMINING GROUP**

1. *Apply for vavuniya based position*
By E-mail: vavofficemgr@ddg.lk
By Post: Office Manager, 178 A, Poonthoddam, Vavuniya

2. *Apply for Jaffna based position*
By E-mail : jafofficemgr@ddg.lk
By Post: Office Manager, 456, Main Street, Chundukuli, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் உலா வரும் கள்ள நோட்டுக்கள்

சனக்கூட்டத்தால் திணறிக் கொண்டிருந்தது வங்கி. இயந்திர கதியில் அலுவலர்கள் தமது பணிகளில் மூழ்கியிருந்தார்கள். தோளில் துவாயோடு பாமரத்தனமான முகத்தோடு பணத்தை வைப்பிலிட நீண்ட வரிசையில் காத்திருக்கிறார் ஒரு முதியவர். உரம் ஏறிய கைகள். இம்முறை தோட்டத்தில் கிடைத்த வருமானத்தை மகளின் பெயரில் வைப்பிலிடுவதற்காக வந்திருக்கிறார். வரிசை நகர்ந்து நகர்ந்து அவருடைய முறை வருகிறது. மகளின் கணக்கில் பெருந் தொகைப்பணம் வைப்பிலிடப் போவதையும், அந்த மகளின் திருமணக்காட்சியையும் மனதில் எண்ணியவாறே கைநிறையக் கொண்டுவந்திருந்த பணத்தை அலுவலரிடம் கொடுக்கிறார். அலுவலரும் முதியவரின் பணத்தை வாங்கி , பெறுமதிக்கேற்ப ஒழுங்குபடுத்தி பணத்தை எண்ணும் இயந்திரத்துக்குள் திணிக்கிறார். இயந்திரம் தன்னியங்கியாகத் தாள்களை எண்ணத்தொடங்குகிறது. திடீரென அவ்வாறு எண்ணப்பட்ட தாள்களில் சிலவற்றை வெளியே தூக்கி வீசியது இயந்திரம். இயந்திரம் எண்ணிமுடித்த தாள்களை மட்டும் கணக்கிட்டு முதியவரின் மகளின் பெயரில் வைப்பிலிடுகிறார் வங்கி அலுவலர். இயந்திரத்தால் நிராகரிக்கப்பட்ட தாள்களை மீளவும் முதியவரிடம் ஒப்படைக்கிறார். முதியருக்கு ஒன்றும் புரியவில்லை.

''ஐயா! இந்தக் காசையும் என்ர பிள்ளையின்ர பெயரில போட்டுவிடுங்கோ'' என்று அலுவலரிடம் வேண்டினார்.

''உந்தக்காசு போடேலாது'' என்று ஒற்றைச் சொல்லில் பதில் சொன்னார் அலுவலர்.


''ஏன் போடேலாது?'' மீண்டும் முதியவரின் கேள்விக்கணை.

## விழிப்போடு இருக்காவிட்டால் நாமெல்லாம் ஏமாறவேண்டிவரும்

''உது செல்லாத காசு. கள்ள நோட்டு. உங்களை யாரோ ஏமாத்தித் தந்துபோட்டாங்கள். இந்த நோட்டுக்களை 'எக்கவுண்டில' போடமுடியாதய்யா'' என்று சொல்லிவிட்டு அடுத்த வாடிக்கையாளரைக் கவனிக்கத்தொடங்கினார் வங்கியாளர். தன்னுடைய கனவுகள் எல்லாமே கரைந்து போன சோகத்தோடு போலி நோட்டுக்களை கையில் சுமந்தவாறு தன்னை ஏமாற்றிவிட்ட கண்ணுக்குத்தெரியாத பிரகிருதிகளைத் திட்டியவாறு வெளியே செல்வதைத் தவிர அந்த முதியவருக்கு வேறு வழி எதுவும் இருக்கவில்லை.

இத்தகைய கண்ணீர்க் கதைகள் யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகளில் அடிக்கடி நிகழ்வதாகச் சொல்லப்படுகின்றது. அண்மைக்காலமாக கள்ள நோட்டுகளின் புழக்கம் யாழ்ப்பாணத்து பணச்சுற்றோட்டத்தில் அதிகரித்திருப்பதாக வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் பலர் வைப்பிலிடக் கொண்டுவரும் நாணயத்தாள்கள் செல்லுபடியற்றவையெனத் திருப்பிவிடப்படுகின்றன. குறிப்பாக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் உருவப்படம் பொறித்த, நீல நிறமான புதிய ஆயிரம் ரூபாத்தாளே இவ்வாறு கள்ள நோட்டுகளாக அதிகம் புழக்கத்துக்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. வங்கிகளில் பணத்தை துரித கதியில் எண்ணுவதற்காகப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களில் கள்ள நோட்டுக்களைக் கண்டுபிடிக்கும் வசதியும் இருப்பதாலேயே பெருமளவான போலி நாணயத்தாள்களை இனம்காண முடிந்திருக்கிறது. ஆனால் இயந்திரங்களின் பேச்சைக்கேட்டு, எவ்வித காரணங்களும் சொல்லப்படாமல் தாம் கொண்டுசெல்லும் பணம் போலியானது எனக் கூறி திருப்பிவிடப்படுவதாகவும், சில வேளைகளில் இயந்திரம் தவறாகக் கூட குறித்த தாளை போலியானது எனக் கணித்திருக்கக்கூடும் எனவும் வாடிக்கையாளர்கள் சிலர் குறைபட்டுக்கொள்கிறார்கள்.

ஆயினும் வங்கித் தகவல்கள் வாடிக்கையாளர்களின் இத்தகைய சந்தேகங்கள் தேவையற்றவை என்றே சொல்கின்றன. ''வங்கிகளில் பணத்தை எண்ணுவதற்குப் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் இயந்திரத்தில் நாணயத்தாள்களை இடும்போது இத்தகைய சட்டவிரோதமான போலிநாணயத்தாள்களை தானாகவே பிரித்தறிந்து நிராகரித்துவிடும். சில வேளைகளில் ஒரு நாணயத்தாள் போலியானது என்ற சந்தேகம் எமக்கு



எழுந்தால், பணத்தை எண்ணும் இயந்திரத்தில் உள்ள 'அல்ட்ரா' ஒளியில் அந்த நோட்டைப் பிடித்தால் பச்சை வர்ணத்தில் நாணயத்தாளில் அதன் பெறுமதி புலப்படும். இதைவைத்தே அந்த நாணயத்தாள் போலியானது என்பதை உறுதிப்படுத்திக் கொள்கின்றோம் '' என்று வங்கி அதிகாரி ஒருவர் இது குறித்துத் தெரிவித்தார்.

**- ஓளண்யன் -**

இயந்திரத்தில் ஒரே வகையான நோட்டு களை இடும்போது அதில் வேறொரு வகையான அல்லது வித்தியாசமான பெறுமதி கொண்ட நாணயத்தாள் ஒன்று இருந்தால் அதனை குறித்த இயந்திரம் வெளித்தள்ளிவிடும். உதாரணமாக ஆயிரம் ரூபா தாள்களோடு ஒரு ஐநூறு ரூபாத் தாளும் கலந்தபடியே இந்த இயந்திரத்துக்குள் இடப்படுமானால் ஐநூறு ரூபாத்தாளை அந்த இயந்திரம் நிராகரித்து வெளித்தள்ளிவிடும். பின்னர் அந்தத்தாளை தனியாகவோ அல்லது ஏனைய ஐநூறு ரூபா நோட்டுகளோடு சேர்த்து இயந்திரத்தில் இட்டால் அதனை இலத்திரனியல் இயந்திரம் ஏற்றுக்கொள்ளும். இதில் இன்னொரு வேடிக்கை நிகழ்வதாகவும் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அதாவது பழைய ஆயிரம் ரூபாய்த் தாள்களோடு ஜனாதிபதியின் படம் பொறித்த (நல்ல) புதிய ஆயிரம் ரூபாத் தாளினை கலந்து இந்த இயந்திரத்தில் இட்டால் புதிய ஆயிரம் ரூபாய்த்தாளை இயந்திரம் நிராகரித்துவிடுகிறதாம். பின்னர் அதனை புதிய ஆயிரம் ரூபா தாள் களோடு இணைத்து எண்ணும் போது அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே வங்கிகளில் உள்ள இயந்திரங்கள் எந்தவொரு சட்டபூர்வமான நாணயத்தாளையும் போலி நாணயத்தாளென நிராகரிப்பதற்கு சந்தர்ப்பமே இல்லை என்றும் அந்த அதிகாரி அடித்துக் கூறுகின்றார்.



ஆகவே இயந்திரங்கள் தவறு செய்யவில்லையெனில் அதிகளவான போலி நாணயத்தாள்கள் நம்மிடையே புழக்கத்திற்கு வந்துவிட்டதையும் சில பிரகிருதிகளால் இந்த நாணயத்தாள்கள் நம்மிடம் புகுத்தப்பட்டு நாம் ஏமாற்றப்படுவதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இந்த போலி நாணயத்தாள்கள் எவ்வாறு உள்நுழைகின்றன என்பதும் இதுவரை மர்மமாகவே இருக்கின்றது. எனினும் மதுபானக் கடைகள், சந்தைகள், சில்லறைக்கடைகள், மற்றும் ஆளரவம் கூடிய விற்பனை நிலையங்கள் என்பவற்றிலேயே இத்தகைய போலி நாணயத்தாள்கள் மக்களுக்கு - அவர்களுக்குத் தெரியாமலேயே - விநியோகிக்கப்பட்டு விடுகின்றன. பொருள்களுக்குரிய மீதிப்பணமாகவோ அல்லது கொள்வனவுக்குரிய பணமாகவோ வெகு சாமர்த்தியமாக இந்தக் கள்ளநோட்டுக்கள் பரிமாற்றப்பட்டு விடுகின்றன. அதிலும் மதுபானக் கடைகள் எப்போதுமே 'மப்பும் மந்தாரமும்' நிறைந்தவர்கள் கூடியிருக்கும் இடம் என்பதாலும் அவர்களில் பெரும்பாலானோருக்கு உலகம் தலைகீழாக மாறியிருப்பதாலும் கள்ள நோட்டு எது? நல்ல நோட்டு எது? என்று பரிசீலிக்கும் அளவுக்கு அவர்களது நிலை தடுமாறியிருப்பதை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அவர்கள் ஊடாக இத்தகைய கள்ள நோட்டுப் பரிமாற்றத்தை மேற்கொள்கிறார்கள் சில விஷமிகள். அத்துடன் கடைகள், சந்தைகள் என்பவற்றில் எப்போதுமே காலில் பம்பரம் கட்டிக்கொள்ளாத குறையாக அவசரத்தோடுதான் பொருள்களை வாங்குவதற்கு மக்கள் கூடுவார்கள். நவீன வாழ்வியல் முறை இத்தகைய அவசரத்தனத்தையும் நேரப் பற்றாக்குறையையும் நம்மிடையே ஏற்படுத்திவிட்டது. இதனால் மிகுதிக் காசைக்கூட எண்ணிப்பார்க்காமல் வாங்கிச் செல்பவர்களே அதிகம். இவர்களும் மிகுதிப் பணத்தோடு கள்ள நோட்டுக்களை தாம் அறியாமலே எடுத்துச் சென்று விடுகின்றார். இவர்களுக்கு பணத்தை கொடுத்த கடைக்காரர்களுக்குக் கூட அது கள்ள நோட்டு என்பது தெரிவதில்லை. இவ்வாறு எங்கோ ஓர் இடத்தில் இருந்து மெல்ல மெல்ல நம்முடைய பணப்புழக்கச் சுற்றோட்டத்துக்குள் ஊடுருவிவிடும் கள்ள நோட்டுக்கள் கடைசியாக ஒன்றுமறியா அப்பாவி களின் வயிற்றில் தான் அடிக்கின்றன.

பொதுவாகவே யாழ்ப்பாணத்தவர்கள் சிக்கனக் காரர்கள். எறும்பு மாரிகாலத்துக்காக கோடையிலேயே உணவைச் சேகரித்து வைப்பதைப் போல தம்முடைய உழைப்பு முழுவதையும் கரைந்துவிடாமல் வட்டிக்குக் கொடுத்தோ அல்லது வங்கிகளில் இட்டோ பத்திரப்படுத்தியே பழகிக் கொண்டவர்கள். இதனால் தான் இப்போது வரிசையாய் புதிய வங்கிக் கிளைகள் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டு வருகின்றன. சிறு சிறு கிராமங்களில் கூட தனிக் கிளை திறக்கும் அளவுக்கு வங்கிகளின் எண்ணிக்கை குடாநாட்டில் பெருகி விட்டன. ஆனாலும் இப்போது மக்களின் உழைப்புக்கு கிடைக்கும் பணத்தில் கள்ள நோட்டும் இணைந்து விட்டதால் வெகு ஜாக்கிரதையாகவே வாடிக்கையாளர் கொண்டு வரும் பணத்தை வங்கிகள் கையாள்கின்றன. ஒவ்வொரு நோட்டும் வெகு கவனமாக பரிசீலிக்கப்பட்ட பின்னரே உள்ளெடுக்கப்படுகின்றன. இதனூடாக தொடர்ந்தும் கள்ள நோட்டுக்களின் பரிமாற்றம் நிகழ்வது தடுக்கப்படுகின்றது. ஆயினும் தமக்கு யார் கள்ள நோட்டைத் தந்தார்கள் என்பது தெரியாமலேயே மக்கள் தொடர்ந்தும் ஏமாற வேண்டியிருக்கிறது. இதற்கு கள்ள நோட்டை இனங்காணும் வழிமுறைகள் குறித்து மக்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட வேண்டும். புதிய கிளைகளைத் திறப்பதிலும் புதிய வைப்புகளைப்



பெறுவதிலும் ஆர்வம் காட்டும் வங்கிகள் அதே போன்று போலி நாணயத்தாள்களை இனங்காணும் வழிமுறைகளையும் ஆர்வத்தோடு வழங்கினால் கள்ள நோட்டுப் புழக்கத்தைக் கட்டுப்படுத் தலாம் அல்லவா? அத்தோடு எங்கிருந்து பணம் கிடைத்தாலும் சிறிது நேரம் ஒதுக்கி அதனைப் பரீசிலித்த பின்னரே வாங்குகின்ற வழக்கத்தையும் நாம் ஏற்படுத்திக் கொண்டால் கள்ள நோட்டைப் புகுத்தி இனியும் நமது தலையில் எவரும் 'சம்பல்' அரைக்க முடியாது. ஏமாறுபவன் இருக்கும் மட்டும் தான் ஏமாற்றுபவனும் இருக்க முடியும். அதை விடுத்து தொடர்ந்தும் அலட்சியமாகவே இருப்போமானால் கள்ள நோட்டுக்களின் ராஜாங்கம் நீடிக்கவே செய்யும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி விடுமுறைகால வகுப்புகள் ஆரம்பம்

**Course Details**

| | | | |
|---|---|---|---|
| Ms Office | - | 1 month | - 2000/= |
| DTP | - | 1 month | - 3000/= |
| Accounting Package | - | 2 month | - 3000/= |
| Web Design | - | 1 month | - 3000/= |
| Graphic Design | - | 1 month | - 3000/= |
| Internet & E-mail | - | 2 Weeks | - 1200/= |

162, Main Street, Jaffna.
TP:0212221417
Sky Computers(pvt)Ltd.

## காணி விற்பனைக்கு

கொக்குவில் தேவாலய எதிர் ஒழுங்கை, முதலி கோயிலடி அருகில் 2 பரப்பு, 3 ½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொ.பே. 0778893655, மாலை 6 -9 மணி
நேரில் சந்திப்பு - ஞாயிறு, திங்கள்

## G.C.E. (A/L) 2011 பரீட்சை

எதிர்பார்க்கை வினாக்கள் இம்முறை உயிரியல் பரீட்சையில் இடம்பெற்று டலானது. இப்போது Biology Exam Guide மற்றும் CHEMISTRY Back - up உங்கள் வீடு வந்து யாழ்ப்பாணம் வடமராட்சியில் கற்பித்தல். பாடம் படிப்பிக்க பலருடன் பரீட்சைக்கு படிப்பிக்க ஒரே ஒருவர்தான். அழையுங்கள் வித்யா சுழற்றுங்கள் 0777730838, 0717730838

## வேலையாள்கள் தேவை

கோழிப்பண்ணைப் பராமரிப்பிற்கு பொறுப்புக் களற்ற தங்கி வேலை செய்யக் கூடியவர்கள் ஆண்/பெண் உடன் தேவை.தொ.பே.0777700716

## மணி விழா நாயகியை வாழ்த்துகின்றோம்

திருமதி பாக்கியராணி இராமநாதன்
15.08.2010
(மனைப் பொருளியல் ஆசிரியை, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)



அன்பிலும், பண்பிலும், புன்னகையிலும் ஆளுமையிலும் எம் உள்ளங்களைக் கவர்ந்த எமது ஆசிரியை சகல செல்வங்களுடனும் நீடூழிவாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

## Lecturers, Instructors, Administrative Staff
## "CINEC Jaffna"

Colombo International Nautical and Engineering College (CINEC) is an institute of education certified for quality, safety, health and environment, situated in the picturesque suburb of Malabe

The organization is also a recipient of the prestigious national quality award

CINEC Maritime Campus
Millennium Drive, IT Park, Malabe.

Tel: +94(011) 241 3500
Fax: +94(011) 241 3505
jobs@cinec.edu

CINEC Maritime Campus wishes to recruit suitably qualified candidates for the newly opened CINEC Jaffna.

Currently there are following vacancies:

- Lecturer in Electrical Technology
- Lecturer in English Language
- Instructors/demonstrators in
  - Welding and Aluminium Fabrication
  - Electrical Technology
- Centre Manager
- Centre coordinator/Marketing Assistant

Qualifications:
Relevant academic and professional qualifications from a recognised institution of learning and appropriate job experience.

*Applicants who are fluent in all three languages (Tamil/English/Sinhala) and who are domiciled in Jaffna or in any of its suburbs will be given the preference.*

WORLD CLASS EXCELLENCE IN EDUCATION AND TRAINING... WWW.CINEC.EDU

## முகாமையாளர் யாழ்ப்பாண அலுவலகம்

செல்வேந்திரா அன் கோ பட்டயக்கணக்காளர்களாகிய எமது யாழ் அலுவலக முகாமையாளர் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள் -

- யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டிருத்தல்.
- கணக்காய்வு கணக்கியல்துறையில் முன்னனுபவமும் தகைமைகளும் கொண்டிருத்தல்.
- உள்நாட்டு இறைவரி சம்பந்தமான முன்னனுபவம்.
- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தொடர்பாடல் சம்பந்தமான முன்னனுபவம்.
- ஆங்கிலத்துடன் தமிழிலும் கணக்காய்வு மற்றும் கணக்குகள் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.
- சுதந்திரமாக செயலாற்றவும், கொழும்பு அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் ஆளுமை.
- உடன் பணிபுரியும் கணக்காய்வு உதவியாளர்களை அரவணைத்து நிர்வகிக்கும் ஆளுமை.
- அனுபவம் தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**உங்களது விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

Partner / Human Resource Manager
**Selvendra & Co.**
Chartered Accountants,
50/2, Sir James Peiris Mawatha, Colombo 02.
E-mail: selvendracoja@sltnet.lk

## நீங்கள் ஏமாற வேண்டாம்.!!

நீங்கள் வாங்கும் நீர் குழாய்களிலும் பொருத்துக்களிலும் எஸ் லோன் இலட்சினை இல்லையெனில் அவை எஸ் லோன் அல்ல.




எஸ் லோன் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளதா என்று சரி பார்த்து வாங்குங்கள்

S-lon

என்றும் முன்னணியில்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
148, வொக்சோல் வீதி, கொழும்பு 02.

## German Swiss மொழி வகுப்புகள்

தமிழ்மொழிபெயர்ப்புடன் A 1 புத்தகம் மற்றும் CD விளக்கத்துடனும் நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு: German Institute,
10, Palaly Road, Jaffna.
T.P. 0771604823. Kajenthini

## விற்பனைக்கு

ஒரு மாதம் பாவித்த Sanyo குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸோகுமார் ஸ்ரோர்ஸ், பூநாறி மரச் சந்தி, கே.கே.எஸ். றோட், கொக்குவில். தொ.பே. 0772195483

## கோழிக்குஞ்சு விநியோகம்

30 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய NO- 1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 18.08.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
★ **ராஜீவ்,** நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே. 121 222 2867, 0776090926

## மணமகள் தேவை

74 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 7 பாவமுடைய இத்தாலி பிரஜா உரிமை பெற்ற விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

75 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 1¼ பாவமுடைய Computer Engineer கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

75 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 34 பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்ற எலற்றோணிக்கல் இஞ்சினியருக்கு படித்த அழகான மணமகள் தேவை.

**கமலக்கண்ணன் திருமண சேவை**
இல. 171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி, நல்லூர். தொ.பே. 0214920266


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுக்கு வந்தது 'சன் சீ' விவகாரம்

கடந்த மூன்று மாதங்களாகச் சர்வதேச கடற்பரப்பில் சஞ்சரித்துப் பல நாடுகளின் கடற்படைகளுக்கும் பாதுகாப்புத் தரப்புகளுக்கும் தலையிடியைக் கொடுத்து வந்த 'சன் சீ' என்ற பெயருடைய கப்பல் விவகாரம் இப்போது முடிவுக்கு வந்திருக்கிறது. இதனால் பல நாடுகள் இப்போது நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றன. ஆயினும் கனடாவுக்குத் தான் இப்போது தலையிடி. காரணம் அந்தக் கப்பல் கனடாவின் விக்ரோரியா மாநிலத்திற்கு அண்மையில் உள்ள எஸ்கியூமோல்ட் துறைமுகத்தை கனடா நேரப்படி சரியாக நேற்று முன்தினம் வெள்ளி காலை 6 மணிக்கு சென்றடைந்திருக் கிறது.



இந்தக் கப்பலில் 490 தமிழ் அகதிகள் கனடாவின் விக்டோரியா நகரத்தை வந்தடைந்துள்ளனர். நகரத்தின் அண்மையிலிருக்கும் கனேடிய இராணுவ முகாம் ஒன்றில் அனைவரும் தரையிறக்கப்பட்டுள்ளனர்.

உடல் நலப் பரிசோதனையைத் தொடர்ந்து 9 பேர் விக்ரோரியா மாநில பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். கப்பலில் இருந்தவர்களில் 45 சிறுவர்களும், இரு கர்ப்பிணிகள் உட்பட 90 பெண்களும் உள்ளனர் என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

உடனடிச் சோதனைகள் முடிந்தபின் அனேகமாக நாளை திங்கட்கிழமை அனைவரும் வெவ்வேறு தடுப்பு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப் படுவார்கள் என நம்பப்படுகிறது.

குழந்தைகள் மற்றும் பெண்கள், ஆண்களின் தடுப்பு முகாம்களில் அல்லாது தனிப்பட்ட வேறு தடுப்பு முகாம்களுக்குக் கொண்டு செல்லப் படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 490 இலங்கை அகதிகளை ஏற்றிய இந்தக் கப்பல் கனடாவின் எஸ்கியூமோல்ட் துறைமுகத்தை அடைந்ததைக் கனேடிய பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் விக் ரோவிஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தக் கப்பல் வெள்ளி அதிகாலை அந்த நாட்டில் கடற்படையினர் மற்றும் கரையோர பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்



பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், கப்பலில் உள்ள ஒருவர் மாத்திரம் கடும் சுகவீன முற்றுள்ளதாகவும் முன்னர் வெளியான தகவலைப் போன்று எவரும் மரணமாகவில்லை என்றும் கனேடிய எல்லைப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 'சன் சீ' கப்பல் அகதிகளுக்கு சட்ட மற்றும் மனிதாபி மான உதவிகளை வழங்குவதற்காகக் கனேடிய தமிழர் பேரவை ஒழுங்கு களைக் செய்துள்ளது.

இதற்காகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் வன்கூவருக்கு சென்றுள்ளனர்.

இந்தநிலையில் ஆர்வமுள்ள உறவுகள் கனேடியத் தமிழர் பேரவை யுடன் தொடர்பு கொண்டு மனித நேயப் பணிகளில் ஈடுபடலாம் என தமிழர் பேரவை அறிவித்துள்ளது.

அகதிகளை ஏற்றுக் கொண்டதற்காகக் கனேடிய அரசுக்கு நன்றி கூறிக் கொள்ளும் அதேவேளை, சர்வதேச மற்றும் கனேடிய சட்டங்களுக்குட்பட ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பரிசீலிக்கப்பட்டு தகுந்த உரிமைகள் வழங்கப்பட வேண்டுமெனக் கனேடியத் தமிழர் பேரவை நேற்றுக் காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு அகதிகளின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பன குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. அகதிகளாக வந்திருப்போருக்கு உரிய முறையில் உதவ மொழி பெயர்ப்பா

## கனடாவைச் சென்றடைந்துள்ள தமிழ் அகதிகளின் நிலை என்னவாகும்?

ளர்கள், சட்ட ஆலோசகர்கள், வைத்தியர் கள், குழந்தைப் பராமரிப்பாளர்கள் ஆகியோர் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளார்கள் எனக் கனேடியத் தமிழர் பேரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

கனேடிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவினருடனும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையகத்துடனும் பேரவை தொடர் பில் இருந்து வருகின்றது.

இந்தக் கப்பல் கடந்த மூன்று மாதங்களின் பின்னர் இவ்வாறு கனடாவுக்குச் சென்று சேர்ந்துள்ளது. கனடாவை சென்றடைந்துள்ள இரண்டாவது ஈழத்தமிழ் அகதிகள் கப்பல் இதுவாகும். அதிகூடிய அகதிகளுடன் கனடாவுக்குள் கப்பல் ஒன்று நுழைந்தது இதுவே முதல் தடவை எனக் கனேடிய கடற்படைப் பேச்சாளர் ஜான் டி பூக்கா தெரிவித்துள்ளார்.

**- அதிரன் -**

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் 'ஓஷன் லேடி' என்ற கப்பல் 76 ஈழத்தமிழ் அகதிகளுடன் கனடாவின் ஓடன் பொயின்ட் துறைமுகத்தைச் சென்றடைந்திருந்தது. இந்தக் கப்பலில் சென்ற அகதிகளில் 25 இற்கும் மேற்பட்டோருக்கு கனடா அரசு அகதி அந்தஸ்து வழங்கியுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் தற்போது ரொறன்ரோ நகரில் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் 490 அகதிகளுடன் 'சன் சீ' கப்பல் கனடாவைச் சென்றடைந்திருக்கிறது. இந்தக் கப்பல் தொடர்பாக அண்மைக் காலமாக பல்வேறு தகவல்கள் வெளியிடப்பட்டு வந்தன. கப்பலில் பயணிப்பவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் எனவும், இந்தக் கப்பல் முன்னர் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கடத்தலுக்குப் பயன்படுத்தப் பட்டது எனவும் தகவல்கள் வெளியாகி யிருந்தன. அவுஸ்திரேலியா நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்த இந்தக் கப்பல் பின்னர் தனது அந்த இலக்கைக் கைவிட்டு பின்னர் வட அமெரிக்கா நோக்கித் திரும்பியது. வட அமெரிக்க நாடு ஒன்றை இந்தக் கப்பல் சென்றடையும் என்று கடந்த இரண்டு மாதங்களாகக் கூறப்பட்டு வந்தது. அமெரிக்கக் கடற்படையினரும், கனடா கடற்படையினரும் இந்தக் கப்பலில் நடமாட்டத்தைக் கடந்த மூன்று மாதங்களாகச் சர்வதேசக் கடற்பரப்பில் அவதானித்து வந்தனர். ஆயினும் அதனைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட வில்லை. இந்தக் கப்பல் தொடர்பாக அமெரிக்கா உரிய வேளையில் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கருத்து வெளியிட்டு இரண்டு வாரங்கள் கழிந்த நிலையில் கப்பல் கனடாவைச் சென்றடைந்துள்ளது. இரண்டு தினங்களுக்கு முன்னர் தனது கடற்பரப்புக்குள் கப்பல் நுழைந்துள்ளது என்பதைக் கனடா அரசு உறுதிப்படுத் தியது. அதன் பின்னர் நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை கனடா கடற்படையினர் அந்தக் கப்பலைத் தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து கரையை நோக்கி வழிநடத்தினார்கள். அது விக்ரோறியா மாநிலத்தின் அருகில் எஸ்கியூமோல்ட் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.



அந்தக் கப்பலில் உள்ள அகதிகளைத் தரையிறக்கித் தங்க வைப்பதற்கான கூடாரங்களைக் கனடா அரசு ஏற்கனவே அமைத்துள்ளதுடன் அவர்களுக்கான மருத்துவ உதவிகள், ஏனைய உதவிகள் ஆகியவற்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் கப்பலில் பயணித்துள்ள அகதிகளின் பெயர் விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. அவை வெளியிடப்பட்டால் தான் அதில் பயணித்தவர்கள் யார் என்ற தகவல் புலப்படும். அத்துடன் அந்தக் கப்பலை கனடா நோக்கி செலுத்திச் சென்ற மாலுமிகள் யார்? அவர்கள் எந்த நாட்டவர்கள்? கப்பல் யாருக்குச் சொந்தமானது? தமிழ் அகதிகள் அதில் எவ்வாறு ஏறிக் கொண்டார்கள்? அதனை ஏற்பாடு செய்தவர்கள் யார்? போன்ற பல்வேறு கேள்விகளுக்கு இனிமேல் தான் விடை கிடைக்கப்போகிறது. கனடாவின் புலனாய்வுத்துறையினர் இந்த நடவடிக்கையில் இப்போது இறங்கியிருக்கிறார்கள்.

கனடாவின் பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் விக் டோவ்ஸ், சன் சீ கப்பல் நங்கூரமிட்ட மையை உறுதிப்படுத்தினார்.

இவர்கள் அனைவரும் அகதிகளாக இருக்கலாம் என அறிவிக்கப்பட்டுள் ளதாக தெரிவித்த அவர் எனினும் இதில் கனடாவில் தடை செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் இருக்கிறார்களா? என்பது குறித்து விசாரணை நடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

கனேடிய தமிழ் காங்கிரஸின் சட்டத்தரணியான ஹரி ஆனந்தசங்கரி இந்த கப்பல் தரித்துள்ள இடத்திற்குச் சென்றுள்ள நிலையில் 50 மீற்றர் நீளத்தை, கொண்ட இந்தக் கப்பலில் இந்தளவு எண்ணிக்கையான மக்கள் பயணம் செய்தமையை நம்பமுடியாமல் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலில் பல சிறுவர்கள் உள் ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து 490 அகதிகள் கனடாவின் வன்கூவர் நோக்கி வந்துள்ள நிலையில் கனேடிய விக்டோரிய மாநிலத்தின் பொது மக்கள் ஆத்திரமடைந்துள்ளதாக கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கெயித் மார்ட்டின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பல் பல்வேறு முறைப் பாட்டுத் தொலைபேசி அழைப்புகள் தமக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அதிக அளவிலான தொலைபேசி அழைப்புகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் தற்போது காரியாலய தொலை பேசிகளை குரல் பதிவு (வொய்ஸ் மெயில்) முறையில் செயற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் கனடாவுக்கு வருவதை யிட்டு விக்டோரியா மாநில மக்கள் விருப்பம் கொள்ளவில்லை எனவும், ஏற்கனவே சிக்கல்களை எதிர் நோக்கியுள்ள நிலையில் தமிழர்களுக்கு அரசாங்கத்தினால் பொதுச் சேவைகள் வழங்கப்படுவது தமக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என விக்டோரியா மாநில மக்கள் கருதுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தொடர்பில் ஒரேயடியாக நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் அவர்களில் பலரை வந்த வழியிலேயே திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் கப்பலில் வந்துள்ள இலங்கையர்களை விசாரணை செய்யும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகும் என கனடா பாதுகாப்பு அமைச்சர் விக் டோவ்ஸ் தெரிவித்துள்ளார். அடுத்த ஒரு வார காலத்துக்குள் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் உரிய காரணங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ள அவர் ஏனையோர் நாடு கடத்தப்படுவார்கள் எனவும் கூறியுள்ளார்.


இந்தக் கப்பலில் பயணித்த அகதிகளுக்குக் கனடாவில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டால் கனேடிய குடிவரவுக் கொள்கையில் பெரும் தொய்வு ஏற்படும் என பல்வேறு தரப்புகளிடம் இருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் கனடா அரசு இந்த விவகாரத்தை எவ்வாறு கையாளப்போகிறது என்பது அடுத்து வரும் சில தினங்களில் தெரிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாணவத் தாரகைகள்



**யோ.பைரவி,** தரம் -6,
யாழ்ப்பாணக் கல்லூரி.



**கி.கிரிசங்கர்,** தரம் -7,
யா/வட்டு திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்




**தெ.ஆதித்தியன்,** தரம் -2A,
யா/சங்கானை சிவப்பிரகாச ம. வித்தி.





**க. அலோபன்,** தரம் -9C,
யாழ். இந்துக் கல்லூரி.




**சி.பானுயன்,** தரம் 4B,
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.



**க.சுபாங்கி,** தரம் -4,
யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்.



**தெ.அனந்தகோபன்,** தரம் -6A,
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.



**பி.ஜெரோம் றோஜிதரன்,** தரம் -8C,
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி.

## விடுகதைகளும் விடைகளும்

01. அவனுக்கு விடு மற்றவர்களுக்கு வலை அது என்ன?
02. கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளி தருவான் அவன் யார்?
03. ஆட்டுவித்தால் ஆடாமல் இருக்காது அது என்ன?
04. வால் நீண்ட குருவி, வாயுண்டு வயிறில்லை அது என்ன?
05. வாழ்க்கை முழுக்க வாயை மூடாதவன். அவன் யார்?

01. சிலந்தி
02. மெழுகுதிரி
03. ஊஞ்சல்
04. அகப்பை
05. தபாற்பெட்டி

தி. கோபிராஜா, -தரம் 4
யா/ உடுவில் மகளிர் கல்லூரி

## புள்ளி மயிலே ஆடு!

புள்ளிப் புள்ளித் தோகை மயிலே
துள்ளித் துள்ளி ஆடு!
பள்ளிச் சிறுவர் நாங்கள் பார்க்கப்
பச்சை மயிலே ஆடு!

வானும், மண்ணும் இருண்டு -தென்றல்
வந்து குளிரும் நேரம்
சோனைத் தோகை தூக்கி விரித்துச்
சுழன்று, சுற்றி ஆடு!

பேடை மயில் உன் பக்கம் நின்று
பெருமை கொள்ளும் போது
ஆட இன்னும் என்ன வேண்டும்?
ஆண்மை மஞ்ஞை ஆடு!

செட்டை இரண்டும் விரிதிறங்கிச்
'சிர்சிர்' என்றே இரையப்
பட்டுத் தோகை வண்ணப் புள்ளி
பளபளக்க ஆடு!



பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்,
கனடா

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..........................................................
தரம் :-..........................................................
பாடசாலை :-..........................................................
..........................................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

# சிறுவர் கதிர்

### உங்களுக்கும் பரிசில்கள்
### விடை தெரியுமா? 69

1. அண்மையில் இலங்கை கல்வி அமைச்சினால் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலை எது?
2. கருங்கடலுக்கு அடியில் ஆறு ஓடுவதை கண்டுபிடித்தவர்கள் எந்தப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்?
3. இரண்டாம் உலக யுத்தத்தின் போது இரண்டாவது முறையாக யப்பானின் எந்த நகரில் அணுகுண்டு வீசப்பட்டது?
4. சன்.சீ.கப்பல் எந்த நாட்டை நோக்கிச் சென்றுள்ளது?
5. அன்னை தெரேசாவின் நினைவு தினம் எப்போது?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 25.08.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடை தெரியுமா?**
**67 இற்கான சரியான விடைகள்**

1. 6 மொழிகள்
2. டேவிட் கெமரூன்
3. 800 விக்கெட்டுக்கள்
4. நவநீதம் பிள்ளை
5. நுவரேலியா

**பரிசுபெறுவோர் விவரம்**

1. ஜெ. துவாரகா, தரம் 04, யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
2. புவித்தா, தரம் 8A, யா/மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
3. யோ.சிவரஞ்சினி, தரம் 04, யா/மட்டுவில் கமலாசனி கனிஷ்ட மகாவித்தியாலயம்
4. சூ. பிரியதக்ஷி, தரம் 6A, யா/ இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட மகா வித்தி.
5. ந.சங்கவி, தரம் 4B, யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

## காகமும் முயலும்

ஓர் ஊரிலே காகமும் முயலும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. அவர்களுக்கு உதவியாக ஒட்டகம், கிளி, மான், நரி போன்றவையும் இருந்தன. காகமும், கிளியும் இரைதேடச் சென்றுவிடும். ஒட்டகமும், மானும் புல்களைத் தின்றுபின் முயலுக்கும் கொண்டு வந்து கொடுக்கும்.



இவ்வாறு இவர்கள் வாழ்க்கை கழிந்தது. ஒரு நாள் ஆறு பேரும் ஒன்றாக இரை தேடச் சென்றார்கள். திடீரென முயலைக் காணவில்லை. எல்லோரும் அங்கும் இங்கும் தேடினர். எங்குமே காணவில்லை. கவலையோடு திரும்பி வந்தார்கள். மரத்திற்கு மேலே ஒரு பருந்து முயலை தூக்கி வைத்திருந்தது. அதிர்ச்சியடைந்த ஐவரும் பருந்திடம் அந்த முயலை விடும்படி கேட்டது. பருந்தோ எனது இரையை விடமுடியாது எனக் கூறியது. பருந்திடம் எவ்வளவோ கேட்டும் கொடுக்காமல் பருந்து முயலைத் தூக்கிக் கொண்டு சென்றது. கவலையுற்ற நரி யானையாரிடம் அறிவுரை கேட்டது. யானை கூறியபடி நரி கழுகைத்தேடி ஒரு தீப்பந்தத்துடன் சென்றது. முயலை விட்டு விடு இல்லையெனில் உன்னையும் உன் கூட்டையும் எரித்து விடுவேன் எனக் கூறியது. நரியின் பேச்சைக்கேட்டு பயந்து போன பருந்து முயலைக் கீழே விட்டது. சந்தோஷமாக யானைக்கு நன்றி கூறிச் சென்றனர் நரியாரும் முயலாரும்.

சி.நேருஜா, யாழ். இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் அவலத்தைப் போக்கிய இதய நோய் சிகிச்சைப் பிரிவின் சேவை யாழ். மக்களுக்கு பெரும் வரப்பிரசாதம்

**இதய நோய் நிபுணர் சங்கத்தின் 10 ஆவது வருடாந்த விஞ்ஞான மாநாடு கொழும்பு சினமன்ஸ் கார்டின் ஹோட்டலில் கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்றது. அம் மாநாட்டில் "யாழ்ப்பாணத்தில் இதய நோய் சிகிச்சையும் எதிர்நோக்கும் சவால்களும்" என்ற தலைப்பில் டாக்டர் ஜீ.ஆர். ஹன்டி ஞாபகார்த்தப் பேருரையை யாழ்.போதனா வைத்தி யசாலை இதய நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் P. லக்ஸ்மன் நிகழ்த்தினார். அவரது அந்த ஞாபகார்த்தப் பேருரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.**

## டாக்டர் ஜீ.ஆர். ஹன்டி ஞாபகார்த்தப் பேருரை 02


**2002** ஆம் ஆண்டு யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து 1200 கட்டில்களைக் கொண்ட இலங்கையின் பெரிய வைத்தியசாலைகளில் ஒன்றான யாழ். வைத்தியசாலை மெல்ல மெல்ல வழமைக்குத் திரும்பியது. புற்றுநோய் சிகிச்சை, என்பு முறிவு சிகிச்சை, இதயசிகிச்சை என்பன இக் காலப் பகுதியில் தான் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வைத்தியக் கலாநிதி மனோகரன் யாழ். வைத்தியசாலையில் முதலாவது இதய சிகிச்சை நிபுணராக நியமனம் பெற்று 2004 டிசெம்பர் மாதம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். அதன் பின்னர் ஹன்டி ஞாபகார்த்த நிதியத்தின் தாராள மான நன் கொடையான 24 மில்லியன் நிதி உதவியுடன் 7 கட்டில்




களுடனும் எக்கோ வசதியுடனும் இதயச்சிகிச்சை (Coronary care unit) பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில்




Ambulatory Blood pressure Monitoring

இதய நோய்களைக் கண்டறிவதற்கான உபகரணங்கள் (Exercise tread mill and holter monitoring equipments) சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டன. ஏற்கனவே உள்ள நோய் கண்டறிவதற்கான பரிசோதனைகளுடன் குருதி அமுக்கத்தை 24 மணிநேரம் பரிசோதிப்பதற்கான முறையும் அண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதய நோயைக் கண்டறிவதற்கான அடிப்படையான பரிசோதனைகளைச் செய்வதற்கான ஏது நிலையை இவை சாத்தியமாக்கின. 2006 ஒகஸ்ட்டில் மீண்டும் போர் ஏற்பட்ட போது அடுத்த சுற்றுச் சிரமங்கள் ஆரம்பித்தன. கப்பல் சேவை ஒழுங்கீனம் காரணமாக அடிக்கடி மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. 2006 ஒக்ரோபர் மாதம் வரை நோயாளருக்கான பயணம் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. ICRC, நோயாளர்களது பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன் வந்த போதும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் பயணத்திற்கான பொறுப்பை அது ஏற்கவில்லை. இத்தகைய நோயாளர்கள் சிலர் விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டனர். 2009 நவம்பர் மாதம் A9 பாதை மீண்டும் திறக்கப்படும் வரை இதே நிலை நீடித்தது.

மேற்குறிப்பிட்ட விவரங்கள் இனங்காணப்பட்ட நோயாளர்களின் ஒரு பகுதியினர் பற்றியவையே ஆகும். தாமதங்களை தவிர்ப்பதற்காக இன்னும் பல நோயாளர்கள் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலைகளுக்குச் சென்றனர். ஆனால் பெரும்பான்மையானோர் பல்வேறு காரணங்களால் கொழும்புக்கு செல்ல இயலாதவர்களாக இருந்தனர். அவர்களின் துன்ப நிலை எவராலும் அறியப்படவில்லை.

மேலதிக பரிசோதனைகளுக்காகவும் மேலதிக சிகிச்சைக்காகவுமே பல நோயாளர்கள் கொழும்புக்கு அனுப்பப் படுகின்றனர். கதீற்றர் ஆய்வுகூட வசதி யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுத்தப்பட்டால் இவை இங்கேயே மேற்கொள்ளப்பட வாய்ப்பு ஏற்படும் என்பதால் இதற்கான முயற்சிகள், அதாவது இத்தகைய ஆய்வுகூடம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.







வைத்திய கலாநிதி P.லக்ஸ்மன்
இதயநோய் சிகிச்சை நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை

IMHO (2.4 million), UNDP (3.9 million) ஆகியவற்றின் நிதியுதவியுடன் கதீற்றர் ஆய்வு கூடத்திற்கான கட்டடம் அமைக்கப்பட்டதன் மூலம் இதற்கான முயற்சிகள் ஓரளவுக்கு கைகூடியது எனலாம். இக்கட்டடம் கனேடிய உயர் ஸ்தானிகரால் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் உத்தியோகபூர்வமாக 2010 பெப்ரவரி 08 ஆம் திகதியன்று கையளிக்கப்பட் டது.

கதீற்றர் ஆய்வுகூடத்துக்கான உபகரணங்கள் சுகாதார அமைச்சால் வழங்கப்படவுள்ளது. இவை பிரான்ஸ் அரசாங்கம் வழங்கும் இலகு கடனுதவி மூலம் கொள்வனவு செய்யப்பட வுள்ளது. இந்த வருட முடிவுக்குள் கதீற்றர் ஆய்வுகூடம் செயற்படத் தொடங்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.




இதய சிகிச்சைப் பிரிவு (ccu) அமைக்கப் பட்டதன் பின் இங்கு சிகிச் சையளிக்கப் படுகின்ற நோயாளர்கள் ஆபத்தான கட்டத்தைக் கடந்ததும் மருத்துவ விடு திகளுக்கு மாற் றப்படுகின்றனர். இது நோயாளர் களுக்கும் மருத்துவ நிபு ணர்களுக்கும் பெரும் சிரம மான ஒன்றாக இருந்தது. உயர் சார்பு அல்லது உயர் தங்கு நிலைப் பிரிவு (High Dependency unit) ஒன்று அமைக்கப்பட்டமை மேற்படி குறைபாட்டை நிவர்த்தி செய்வதாய் அமைந்தது. இந்தக் கட்டடத்துக்கான நிதியுதவியை யாழ்.அரச அதிபர் வழங்கினார். இக்கட்டடம் மீள வடிவமைக்கப்படுவதற்கும் தேவையான மருத்துவ உபகரணங் களைக் கொள்வனவு செய்யவும் (IMHO USA (2.4 million), அரிமா கழகம் (2.2 million), இலங்கை வங்கி (3 million) என்பன உதவிகளை வழங்கின. இப்பிரிவு, நோயாளர் களுக்கான15 கட்டில்களைக் கொண்ட தாக அமைந்துள்ளது. இப்பிரிவு 2008 மே மாதத்தில் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

2008 ஓகஸ்ட் 8 ஆம் திகதியன்று மாற்றுமொரு முக்கியமான கட்டத்தை நாம் அடைந்தோம். குறிப்பிட்ட அத்தினத்தன்று தான் முதலாவது நிரந்தர இதய இயக்கி எமது வைத்தியசாலையில் நோயாளர் ஒருவருக்குப் பொருத்தப்பட்டது. என்பு வைத்திய நிபுணரால் பயன்படுத்தப்படுகின்ற ('c' armfluoroscopy) இயந்திரம் இதன்போது பயன்படுத்தப்பட்டது. இதுவரை 39 நிரந்தர இதய இயக்கிகளே பொருத்தப்பட்டுள்ளன. ஏனெனில் இவை சாதாரண சத்திர சிகிச்சை கூடத்தில் சத்திரசிகிச்சைப் பிரிவினரின் மிக நெருக்கடியான வேலைப்பளுவின் இடையே ஒரு கிழமையில் எமக்காக ஒதுக்கப்பட்ட 2 மணி நேரத்தைப் பயன்படுத்தியே பொருத்தப்பட்டன. இங்கு தனி அறை (single chamber) நிரந்தர இதய இயக்கிகள் மட்டுமே பொருத்தப்பட்டன. இரண்டு/ இரட்டை அறை (Dual chamber) நிரந்தர இதய இயக்கிகள் தேவைப் படுகின்ற இளம் வயதினர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இதய சிகிச்சைப் பிரிவின் உருவாக்கத்தின் பின்னர் தற்காலிக இதய இயக்கி (Temporary pace maker) பொருத்துதலும் எமக்கு சாத்தியம் ஆனது. இதற்கு முன்பு இத்தகைய நோயாளர்கள் கொழும்புக்கு அனுப்பப் பட்டனர். போக்குவரத்து வசதிகள் இல்லாத காலங்களில் நோயாளர்கள் தம் தலைவிதியைத் தாமே சந்திக்க வேண்டியவர்களானார்கள். ஆனால் இப்போதோ இத்தகைய சிகிச்சைக்காக வவுனியாவில் இருந்தும் நோயாளர்கள் இங்கு அனுப்பப்படுகின்றனர். வோவரின் (warfarin) என்ற மருந்தைப் பயன்படுத்தும் குறிப்பிட்ட இதய நோயாளர்களுக்காகத் தனியான கிளினிக் நடத்தப்படுகின்றது. இத்தகைய கிளினிக் உண்மையில் Hematologist ஒருவரால் நடத்தப்பட வேண்டும். அத்தகைய நிபுணர் இங்கு இல்லாததனால் இதய சிகிச்சை பிரிவு இந்தச் சுமையை தாங்க வேண்டியுள்ளது.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## ஓகஸ்ட் 15 முதல் ஓகஸ்ட் 21 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் எதிர்பார்த்த பணவரவுகள் வரலாம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். இழுபறி காரியங்கள் முடிவுக்கு வரும். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்கள் பேச்சை கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படலாம். உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம். உத்தியோகம், விவசாயம், வர்த்தகம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். வழக்கு விவகாரங்கள் சாதகமாகலாம். சிக்கலான பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி தீர்த்துக் கொள்வீர்கள். கடனாக வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்கலாம் அல்லது கடனுக்கு அடைமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். சகோதரர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தீரும். உத்தி யோகத்தர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டுகளைப் பெறலாம். நிலம், பூமி வாங்க விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும். எப்போதும், பரபரப்பாக செயற்படும் சூழ்நிலை உருவாகலாம். தந்தையின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடை யலாம். பயணங்கள், உறவுப் பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பாராத செலவுகள் நேரும். குழப்பங்கள், தடுமாற் றங்கள், எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். பணவரவு உண்டு. உறவுகளால் நன்மை அடையலாம்.

### இடபம்

இந்த வாரம் குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். ஆசைப்பட்ட சில விஷயங்கள் நடக்கலாம். எதிர்ப்புகள், போட்டிகள் இல்லாமல் காரியம் சாதிப்பீர்கள். அரசு காரியங்கள் தங்கு தடையின்றி நடக்கும். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வங்கிகளில் கடனுதவி பெற வாய்ப்பு உருவாகலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வகையிலும் அனுகூலம் உண்டு. நீண்ட நாள்களாக பார்க்காத உறவினர்கள் சிலரைப் பார்ப்பதன் மூலம் சந்தோஷம் அடைவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நட்பு கிடைக்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். அதேநேரத்தில், புத்தி ஸ்தானமான ஐந்தாம் இடத்தில் சனியும், அதனுடன் செவ்வாயும் சேர்ந்திருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம், நிலம், பூமி விவகாரங்கள் போன்றவற்றில் பிரச்சினைகள், குழப்பங்களைச் சந்திக்கலாம். அதனால், மன அமைதி பாதிக்கப்படலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். மற்றவர்கள் வேலைக்காக அலையலாம். பிள்ளைகள் வழியில் செலவு நேரும்.

### மிதுனம்

இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். சிலருடன் கருத்து மோதல் ஏற்படலாம். திட்டமிட்ட காரியங்களைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம். சோர்வு, சோம்பல், உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். தொழில் ரீதியான விடயங்களிலும், மற்ற விடயங்களிலும் எச்சரிக்கையாக நடந்து கொள்வது அவசியம். தாயின்உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். அடுக்கடுக்காக குவியும் வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம். உங்களின் எதிர்பார்ப்பற்கு ஏற்றாற்போல அல்லது உங்களின் வேகத்திற்கு மற்றவர்கள் செயற்படாமல் போவதால் எரிச்சல் அடையலாம். சிலர் கடன் பிரச்சினைகளால் அவ்வப்போது கலக்கம் அடையலாம். கடுமையான பேச்சுவார்த்தைகளை முடிந்த வரை தவிர்க்க வேண்டும். பண விவகாரங்களில் கணவன் மனைவிக்குள் மனஸ்தாபம் ஏற்படலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்களும் சாதகமாக இல்லை. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் சிரமங்கள், உபத்திரவங்களே அதிகம். தெம்பு, தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். உறவுகளால் தொல்லையுண்டு. வீண் செலவு நேரும்.

### கடகம்

இந்த வாரம் ஒன்றுக்கு இரு மடங்காக செலவு, வீண் அலைச்சல்களை சந்திக்கலாம். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். சிலருடன் மோதல்கள், பனிப்போர் உருவாகும். பெண்கள் வழியில் உதவி கிடைக்கும். ஆபத்தான பொருள்களை கையாளும் போது எச்சரிக்கை அவசியம். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றமான நிலைமை காணப்படும். நெடுநாள்களாக வராமல் இழுத்தடித்த கடன் மிகுதிகள் வரலாம். வேலையாள்கள் உதவிகரமாக இருப்பர். ஓய்வின்றி பரபரப்பாகச் செயற்பட்டு லாபத்தை அதிகரிப்பீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுது போக்குவிடயங்கள், விருந்து, உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். கலைஞர்கள் எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெறலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும். பிள்ளைகளின் கல்வி முயற்சிகளில் முன்னேற்றமான திருப்பங்களைக் காணலாம். சிறிய விஷயங்களுக்கு கூட சிலரிடம் பெரிய அளவில் கோபம் கொள்ளலாம். எரிந்து விழலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். வெளியூர் பயணங்கள் செல்லலாம். பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம்.

### சிங்கம்

இந்த வாரம் ஆதாயமான பணவரவுகளைப் பெறலாம். உங்களுக்காக மற்றவர்கள் செலவு செய்யலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்லலாம். மருத்துவம் தொடர்பான விடயங்களுக்காக அலையலாம். சாதகமற்ற நிலையில் இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வகையில் சிரமங்கள், இடர்பாடுகள் உருவாகலாம். அவர்களை நம்பி எந்த காரியத்திலும் இறங்க வேண்டாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். மருத்துவ ரீதியாக செலவுகள் உருவாகலாம். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். வீட்டிலும், வெளியிலும் குதர்க்கமாகப் பேசி மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். எவ்வளவுதான் பணம் வந்தாலும், போதவில்லை என்ற நிலைமையே காணப்படும். ஏதாவது செலவுகளைச் செய்ய நேரிடலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்களும், சகோதர உறவுகளும் திருப்தி தரும் வகையில் அமையாது. மாற்று மதத்தினர் மற்றும் மாற்று மொழிபேசுவோரால் அனுகூலம் பெறலாம். பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம். உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் நேரும்.

### கன்னி

இந்த வாரம் திட்டமிட்ட காரியங்கள் சரியான வகையில் நடக்கும். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ சில ஆதாயங்களைப் பெறலாம். நல்ல செய்தி கேட்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். அடைமானமாக வைத்த பொருள்ளை மீட்கலாம். விருந்து, விசேடங்களால் மகிழ்ச்சி அடைவீர்கள். சிரமம் இல்லாமல் எளிதாக வேலைகள் முடிவுக்கு வரும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகள் சந்திப்பால், அவர்கள் மூலம் வேலைகளை முடிப்பதால், மகிழ்ச்சி அடைவீர்கள். உங்களின் முயற்சிகளுக்கு தந்தை வழியில் ஆதரவு கிடைக்கும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். தொழில் விஸ்தரிப்பு விடயங்களுக்காகவும், தொழில் ரீதியான பயணங்களுக்காகவும் செலவு செய்யலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் கவன மாக இருக்க வேண்டும். தொழில் செய்வோர் சரியான வேலையாள்கள் கிடைக்காமல், சிரமப் படலாம். வழக்கு விவகாரங்களில் சிக்கல்கள் உருவாகுமே அன்றி, தீர்வு கிடைக்க வாய்ப்பு இல்லை. கடன் பிரச்சினைகளாலும் அவ்வப்போது கலக்கம் அடையலாம். தேவையற்ற விமர்சனங் களுக்கும் அவ்வப்போது ஆளாகலாம். பெண்களால் நன்மையுண்டு. செலவு, அலைச்சல் களுக்கு ஆள்படலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். பணவரவுகளைப் பெறலாம்.

### துலாம்

இந்த வாரம் கலகலப்பான அனுபவங்களை பெறலாம். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். விருந்து, விசேஷங்களால் சந்தோஷம் அடைவீர்கள். எண்ணிய காரியங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். எதிர்பார்த்த பண வரவுகள் கைக்கு கிடைக்கும். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த இடங்களுக்கு செல்வீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தந்தை, அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரி கள் தொடர்பான வகையில் அனுகூலம், ஆதாயம் பெறலாம். அரசு தொடர்பான காரியங்கள் சிலரின் உதவியுடன் முடிவடையும் வாய்ப்பு உண்டு. தந்தை வழியில் உதவிகள் கிடைக்கலாம். அவரின் கோரிக்கையை நீங்களும் நிறைவேற்றி வைப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். பெண்கள், சகோதரி கள், சகோதரர்கள் வழியில் எதிர்பாராத செலவுகள் நேரும். இவர்களுக்காக நீங்கள் உங்களின் கைப் பணத்தை செலவிடலாம். நிலம், பூமி விவகாரங்களில் எதிர்பாராத சிக்கல்கள் உருவாகலாம். தொழில், வியாபார ரீதியான விடயங்கள் விரும்பும் வகையில் இல்லாமல் ஏட்டிக்குப் போட்டியாக அமைய லாம். தடை, தாமதங்களுக்கு பன்னரே காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஆதாயகரமான பணவர வுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். உதவிகள் கிடைக்கும். செலவு, அலைச்சல், திரிச்சல் உண்டு.

### விருச்சிகம்

இந்த வாரம் எதிலும் பொறுமை, நிதானமாக செயற்பட வேண்டும். சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். புதிய அனுபவங்களைப் பெறலாம். கேளிக்கை, பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். தெய்வ வழிபாடுகள் மூலம் திருப்தி காண்பீர்கள். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றமான திருப்பங்களைக் காணலாம். வழக்கு விவகாரங் களில் வெற்றி கிடைக்கும். இயந்திரங்களை வைத்து தொழில் செய்வோர் கூடுதல் ஆதாயம் பெறுவர். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் உருவான பரச்னைகள் தீர்ந்து நிம்மதி பெறுவீர்கள். கடன் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காணப்படும். உறவுப் பெண்கள் சந்திப்பு, இனிய பயணங்கள், மனதிற்கு சந்தோஷம் தரும் பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் ஆறுதல் உண்டு. பணப்புழக்கம் விரும்பும் விதத்தில் அமையும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக் கும். அவர்க ளின் கோரிக்கையை நீங்களும் நிறைவேற்றி வைக்கலாம். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். தந்தையிடம் வாக்குவாதம் தவிர்க்கவும். குடும்பத் தில் குதூகலம் அதிகரிக்கும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். பணவரவுகளைப் பெறலாம். கடன் கள் வசூலாகும்.

### தனுசு

இந்த வாரம் ஊக்கம், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பால் பெருமை அடைவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிட்டும். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். நினைத்தபடி காரியங்கள் நடக்காமல் தடைபடுவதால், எரிச்சல் அடையலாம். மறதியால் அவதியுண்டு. ஓய்வாக உட்காரக் கூட நேரமில்லாமல் பரபரப்பாகவும், கடுமையாகவும் பணியாற்றலாம். ஒரு வேலையை முடிக்கும் முன்னரே அடுத்த வேலைகள் வந்து விடும். உங்களைப் போல சிறப்பாக இந்த வேலையை யாரும் செய்ய முடியாது என, பாராட்டிப் பேசியே மற்றவர்கள் உங்களின் தலையில் பொறுப்புகளை சுமத்தி விடலாம். உடல் நலத்தில் பாதிப்புகள் வராமல் இருக்க கடும் அலைச்சல்களை தவிர்க்க வேண்டும். வாகனங்கள் வழியில் எதிர்பாராத செலவுகள் நேரும். சகோதரிகள், மனைவி வழி உறவினர்கள் வழியில் சில உதவிகள் செய்வதால், கணிசமான பணம் கரையலாம். பலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் போது, நீங்கள் முந்திக் கொண்டு செலவழிக்க வேண்டாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், தந்தை வகையிலும் சிரமங்களே அன்றி, ஆதாயம் இல்லை. அரசியல் தொடர்புடையவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். சிலரிடம் உதவி கேட்கலாம். காரிய வெற்றி உண்டு. பணவரவைப் பெறலாம்.

### மகரம்

இந்த வாரம் எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் உதவி கிடைக்கலாம். பரபரப்பாக, சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள். சிரமப்பட்டாவது நினைத்த வேலைகளை முடிப்பீர்கள். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். கணவன் மனைவி உறவில் கோப தாபங்கள் உருவாகலாம். அரசியல்வாதிகள் கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். தந்தை, மருத்துவம் தொடர்பான காரியங்களுக்காகவும் அலையலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள், மாமன், மைத்துனர்கள் சந்திப்புகள், எதிர்பார்த்த உதவிகள் கிடைத்தல், முயற்சிகளுக்கு நண்பர்களின் ஆதரவு கிடைத்தல் போன்ற நல்ல பலன்களைக் காணலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும். தொழில் ரீதியான விடயங்களிலோ, சுபகாரியங்களை நடத்துவதிலோ ஏற்பட்ட முட்டுக் கட்டைகள் விலகி, அவை நடக்கும் சூழ்நிலை உருவாகும். பிள்ளைகளின் பொறுப்பான செயற்பாடுகளால் பெருமை அடைவீர்கள். உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். சகோதரர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். தடை, தாமதங்களை, தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். சில விடயங்களை நினைத்து பயம் கொள்வீர்கள்.

### கும்பம்

இந்த வாரம் பிள்ளைகள் வழியிலோ அல்லது வேறு வழியிலோ எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். சில விடயங்கள் தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். பக்தி நாட்டம் அதிகரிக்கும். பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். தந்திரமாக செயற்படுவதன் மூலம் சில விடயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். கலகலப்பான அனுபவம் பெறலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் உதவிகள் கிடைக்கலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். மருத்துவ சிகிச்சைகள் பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்ற வழிகளில் சந்தோஷம் அடைவீர்கள். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். தொழில், வியாபாரம், உத்தியோகம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் சிரமங்கள், இடர்பாடுகள் தொடரும். உழைப்பற்கு ஏற்ற பலன் கிடைப்பது கடினம். சிலர் சூழ்ச்சி வலையில் சிக்கித் தவிக்க நேரிடலாம். நிலம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகளும் திருப்திகரமாக அமையாது. ஆதாயங்களை விட, செலவுகளும், சிரமங்களுமே அதிகம். வழக்கு தொடர்பான விவகாரங்கள் மன நிம்மதியை பாதிக்கலாம். ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். 13, 14ம் தேதிகளில் சந்திராஷ்டமம் என்பதால், பொறுமை, நிதானம் அவசியம்.

### மீனம்

இந்த வாரம் புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். மற்றவர்களுக்காக நீங்கள் செலவு செய்யலாம். சில பிரச்சினைகளை நினைத்து அதிக குழப்பம் அடைவீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். அடிக்கடி தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். பெற்றோரை அனுசரித்துச் செல்ல வேண்டும். அரசு மற்றும் அரசியல் வாதிகள் தொடர்பான காரியங்கள் எளிதில் முடிவது சிரமமே. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் வகையில் அமையும். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். ஒருவரை ஒருவர் குற்றம், குறை சொல்லி விமர் சிப்பது அதிகரிக்கும். வாகனங்கள் வழியிலோ, உறவுப் பெண்கள் வழியிலோ திடீர் செலவுகள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது அதிக வேகத்தை தவிர்க்க வேண்டும். தொழில் ரீதியான விடயங்களும், அதன் மூலம் கிடைக்கும் வருவாயும் திருப்தி தருவதாக அமையாது. பற்றாக் குறை நிலவரம் தொடரும். தற்போது பார்க்கும் தொழிலை விட்டு விட்டு, புதிய தொழிலுக்கு மாறி விடலாமா என பலருக்கு நினைப்பு வரும். பணவரவுகளைப் பெறலாம். உத்வேகத்துடன் செயற்படுவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தமிழரின் வாழ்வியலைப் பறைசாற்றிய கண்காட்சி எதிர்காலத்துக்கும் ஆற்றுப்படுத்தியது

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - 2010 06

### யாழகனின் இரு பார்வை

திருக்குறள் தமிழில் உள்ள வாழ்வியல் நூல். தமிழுக்கு உருவகமாகக் கொள்ளத்தக்க பெருமை வள்ளுவருக்கு உண்டு. செம்மொழி மாநாட்டுச் சின்னத்திலும் இவரே தமிழாக உருவகிக்கப்பட்டுள்ளார். பிறநாட்டவர் தமிழ் இலக்கியங்களை மதிப்பதற்கும் திருக்குறளே முதற்காரணம். கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் திருக்குறளில் சிறப்பானவை எனக் கருதப்பட்ட சில குறட்பாக்கள் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதாகக் கூறுவர்.

வீரமாமுனிவர் என்னும் ஜெ.சி.ஜோசப் பெஸ்கி என்பவர்தாம் முதன்முதலாக (1730) திருக்குறளில் அறம், பொருள் என்னும் இரண்டு பகுதிகளையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்துத் திருக்குறளை மேலைநாட்டவர்களுக்கு அறிமுகம் செய்தார். இன்று 30 இற்கும் மேற்பட்ட உலக மொழிகளில் 150 இற்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புக்களைத் திருக்குறள் கண்டுள்ளது. ஆங்கில மொழியில் மாத்திரம் 98 மொழிபெயர்ப்புகள் உள்ளதாக முனைவர் கு.மோகனராசு குறிப்பிடுகின்றார். உலகில் அதிகம் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் என்ற வரிசையில் திருவிவிலியம், திருக்குரானை அடுத்துத் திருக்குறளையே குறிப்பிடுவர். முன்னிரண்டும் சமய நூல்கள். எனவே உலகப் பொதுமறை என்ற நிலையில் முன்னிலை வகிப்பது திருக்குறள்தான்.

வள்ளுவர் வாய்மொழியின் மாண்பினை எடுத்துக்காட்டும் வகையில் 1330 குறட்பாக்களையும் நெசவு செய்த பட்டுச்சேலை ஒன்றைக் காட்சிப் பொருளாகக் கண்காட்சிக் கூடத்தில் அமைத்திருந்தனர். அதன் பெறுமதி ஒரு லட்சம் எனக் கண்காட்சி அலுவலர் குறிப்பிட்டார். "அப்பாடியா" எனத் திறந்த வாயை மூடாமலேயே அடுத்த காட்சிக் கூடத்துள் நுழைந்தோம்.



கரும்புச் சாற்றிலிருந்து பானம் தயாரிப்பு

தேர்தல் முறையை உலகுக்கு அறிமுகம் செய்தவர்கள் எனப் பண்டைய கிரேக்கரையும் பண்டைய ரோமானியரையும் குறிப்பிடுவர். மத்திய காலகட்டத்தில் புனித ரோமானியப் பேரரசர் மற்றும் பாப்பரசரைத் தேர்தல் மூலம் தெரிவு செய்யும் நடைமுறை இருந்திருக்கிறது. தமிழருள் தேர்தல் முறையொன்றை முதன்முதலாகக் கைக்கொண்டவர்கள் சோழ அரசர்கள் ஆவர். இதற்குக் குடவோலைமுறைத் தெரிவு என்று பெயர். பானைக்குள் (குடத்தினுள்) பெயர்கள் எழுதப்பட்டு உள்ள ஓலையை எடுப்பதன் மூலம் தம்தலைவர் யாரென முடிவுசெய்தனர். இதைச் சித்திரிக்கும் வகையிலான காட்சி அமைப்பொன்றும் கண்காட்சிக் கூடத்துள் காணப்பட்டது.

தமிழர் தம் வாழ்வியலில் இசைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள். இயற்கையுடன் ஒன்றிய ஒலியமைப்பையும் இசைக்கோலமாகக் காணும் பண்பு தமிழரிடம் காணப்படுகின்றது. சங்ககாலந்தொட்டே இதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியும். பேரிரைச்சலுடன் விழும் அருவி 'இமிழிசை அருவி' (புறம் 361) எனப்பட்டது. மேகத்தின் இடிமுழக்கம் 'வருமழை முழக்கிசை' (புறம் 381) ஆனது.

இயற்கையில் இருந்து கிடைக்கும் ஒலிகளைக் கேட்ட மனிதன் பல்வேறு இசைக்கருவிகளையும் ஆக்கத் தலைப்பட்டான். இதில் தலையாயது யாழ் என்ற இசைக்கருவியாகும். யாழ் தொடர்பாகச் சங்க இலக்கியங்களில் பல தகவல்கள் உள்ளன. இனிய இசை நிறைந்த யாழினை மங்கலப் பொருளாகக் கருதி அதற்குப் புனித மரியாதையாக மாலை சூட்டிக் கருமை நிறமுடைய பைக்குள் வைத்துப் பாதுகாப்பதை ஒரு பாடல் குறிப்பிடுகின்றது.

*'மங்கல மகளிரொடு மாலை சூட்டி*
*இன்குர லிரும்பை யாழொடு ததும்ப'*
*(புறம் 332: 5 - 6)*

செவ்வழிப்பண்ணை யாழில் இசைத்து இறைவனை ஆராதித்த செய்திகளும் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் உள்ளன. இதனால் யாழைச் செவ்வழிநல்யாழ் என அகநானூறு குறிப்பிடுகின்றது.

சங்க காலத்தில் யாழ் பல வகைகளில் செய்யப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் சுறாமீனின் நீண்ட மருப்பை நன்கு சீவி அதை வகைப்படுத்தி யாழாக்கியுள்ளனர். நெய்தல் செடியின் நீண்ட நாரை நன்கு பிணைத்து முறுக்கி அதனை யாழ் நரம்பாக் கிக் கட்டினர். பின்னர் அதை இசைத்து மகிழ்ந்துள்ளனர்.

*எறிசுறா வான்மருப்புக் கோத்து நெறிசெய்த*
*நெய்தல் நெடுநார்ப் பிணித்தியாத்துக் கையுளர்வின்*
*யாழிசை கொண்ட இனவண் டிமிர்ந்தார்ப்ப*
*(கலி: 131: 7 - 9)*

என்ற பாடல் இத்தகவலைச் சுட்டுவதாகக் கலாநிதி வ.மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். இதுவே மகரயாழ் எனப்பட்டிருக்க வேண்டும் (மகரம் - மீன்)

யாழின் பல்வகைமை பற்றிய அறிவை உலகுக்கு ஈந்தவர் என்ற பெருமை நம்நாட்டவரான சுவாமி விபுலானந்தரையே சாரும். இவரது யாழ்நூல் தமிழிலக்கியத்தின் அருங்கொடை. இவரது நூலில், யாழ் உறுப்பியல் என்னும் பகுதியில் வில்யாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சகோட யாழ் என்ற ஐவகை யாழ்களின் அமைப்பை விபரமாக விளக்குகின்றார்.

தமிழரின் தனித்துவமான இசைக்கருவி எனப் போற்றத்தக்க யாழின் பல்வேறு உருவமைப்புக் களையும் கண்காட்சியில் வைத்திருந்தனர். யாழ்பாடியின் மண்ணில் இருந்து சென்ற எமக்கு இக்காட்சிகள் இரட்டிப்பு மகிழ்வைத் தந்தன.

கண்காட்சி - பண்டைத் தமிழருடைய வாழ்வியலை மாத்திரம் பறைசாற்றி நிற்கவில்லை. இனி எப்படி வாழ வேண்டும் என்பதை ஆற்றுப் படுத்துவதாகவும் அமைந்திருந்தது. விண்ணையும் வெல்லும் திறன் தமிழரிடம் கைவர வேண்டும். இதற்காக விண்வெளித் தொழினுட்பம் குறித்த அறிவை வழங்குமாறும் பல காட்சிக் கூடங்கள் அமைந்திருந்தன.

கண்காட்சிக் கூடத்தைவிட்டு வெளியே வந்தோம். சிறுவணிகர்கள் பலர் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். கருப்பஞ்சாற்றுப் பானம் தயாரிக் கும் தொழிலாளரும் தென்பட்டனர். கரும்பில் இருந்து சாற்றைப் பிழிவதற்குப் பொறி ஒன்றைப் பயன்படுத் தினர். இரண்டு சிறு உருளைகள் மின்வலுவின் உதவியுடன் சுற்றியவண்ணம் இருந்தன. உருளை களுக்கிடையிலான இடைவெளிக்குள் கரும்பைப் புகுத்த அது பிழிந்து சாற்றைக் கொடுத்தது. எளிமையான தொழினுட்பம். அந்தச் சாற்றைச்

## ஈழத்துக் கல்விமான்களின் பதிவுகள் கௌரவிக்கப்படாமை வருத்தத்துக்குரியது!

சேகரித்துத் தேவையான அளவு நீர் ஊற்றித் தேசிப் புளியும் கலந்து மென்பானத்தைப் பருகக் கொடுத்தனர். சுவைத்துப் பார்த்தேன். இனிமை யாகத்தான் இருந்தது. கண்ட கண்ட இடங்களில் பானங்களை வாங்கிப் பருகி விடாதீர்கள் எனப் புறப்படும் போதும் மனைவி கூறிய அறிவுரை ஞாபகத்திற்கு வரவே நிறுத்திக் கொண்டேன்.

சூரியன் மேற்றிசையில் நின்றான். அவனது அன்றைய கடமை முடிவதற்கு இன்னும் சில மணி நேரமே இருந்தது. பொழிவரங்கில் கலைஞர் நிறைவு விழாப் பேருரை ஆற்றிக் கொண்டிருந்தார். மக்கள் வெள்ளத்துள் சங்கமமானோம். நாம் [illegible] வாயிலுக்கு நகர்த்தப்பட்டோம். ஆய்வாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரும் செம்மொழி மாநாட்டின் நிறைவுப் பெருமிதத்துடன் காணப்பட்டனர். கனடாவிலும் செம்மொழிமாநாடொன்றை நடாத்துவது பற்றி யோசிக்கின்றோம் என்றார் முன்னர் ஈழத்தவரான கனேடியப் பேராளர் ஒருவர். யாழ்ப்பாணத்திலும் -. என்று சொல்ல நா எழுந்தது. ஆயினும் 1974 ஆம் ஆண்டு ஞாபகத்துள் முளைக்கவே நா அடங்கிப் போனது.



குடவோலை முறைத் தேர்தல்

மாநாட்டின் நிகழ்ச்சித் தொகுப்பாளினி பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். நம்நாட்டு வானொலி தொலைக்காட்சிகளில் ரமில் பேசுவோர் பலரையே காண்கிறோம். தமிழகத்திற்கும் இது பொருந்தும். மாநாட்டு நிகழ்ச்சித் தொகுப்பாளினி சுதாசேசையன் தமிழைத் தமிழாக உச்சரித்த வண்ணமிருந்தார். 'ல,ள,ழ' உச்சரிப்பில்கூடப் பிசிறாமல் மொழியைக் கவனமாகக் கையாண்டார்.

பொழிவரங்க நிகழ்ச்சிகள் பொது மக்களுக்காகவே அளிக்கை செய்யப்பட்டது. இவை தொலைக்காட்சிகளிலும் நேரடியாக ஒலிபரப்பப்பட்டன. நிகழ்ச்சிகளை வழங்குவோரில் பெரும்பகுதியினர் முதல்வர் கருணாநிதியைப் புகழ்ந்து பேசுவதிலும் கணிசமான நேரத்தை அர்ப்பணித்தனர். ஆயினும் தமிழ் உணர்வுடன் தமிழுக்கு விழா எடுக்கும் பெருமகனை வாழ்த்துவதில் என்ன தவறிருக்கிறது என நினைத்தோம்.

சினிமா கலாசாரத்துள் மூழ்கிப்போயுள்ள தமிழகத்தை ஆங்கில ஆதிக்கத்துள் சிக்கிப்போன தமிழகத்தை தமிழின்பால் சிந்திக்கவைத்த பெருமை செம் மொழி மாநாட் டிற்கு உண்டு. பேச்சு வழக்கில் தமிழ்க் கையாட்சி, ஆள் பெயர்கள் மற்றும் நிறுவனப் பெயர்களில் தமிழ்க் கையாடசி என எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற உணர்வு உட னடியாக மலர்ச் சியடைய இம்மாநாடு வழிசெய்ய வேண்டும்.



செங்கோட்டு யாழ்

செங்கோட்டு யாழ்

தமிழகத்தில் இருந்து விடை கொள்ளத் தயாரானோம். எம்மை ஏற்றிச் செல்ல வந்த மகிழுந்தின் (கார்) சாரதி திருக்குறள் புத்தகத்தைக் காரில் வைத்திருந தமை அந்த நம்பிக கைக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்திருந்தது. ஆயினும் நாவலர், விபுலாநந்தர், தனிநாயகம் அடிகள், ம.மு. உவைஸ் போன்ற தமிழியலுக்குப் பங்களித்த ஈழத்துச் சான்றோர் எவரும அரங்கப பெயர்களாலோ கண்காட சிப் பதிவுகளாலோ சுட்டப்படாதமை ஈழத்தின் தமிழியல் பங்களிப் புக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட வில்லையோ என்ற விடைகாண முடியாத வினாவை என்னுள் விளைவித்திருந்தது.

(பார்வை நிறைவுற்றது)



ச.லலீசன், விரிவுரையாளர்,கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

# VACANCY

Brown & Company PLC

## WALK-IN-INTERVIEWS

**GENERAL TRADING DIVISION**

**The General Trading Division of Brown & Company PLC markets world leading brands of Machinery, Hardware, Industrial Tools, Electronic and Electrical items.**

### BUSINESS PROMOTION OFFICER (Northern & Eastern Provinces)

Candidates should possess G.C.E A/L together with 3 years experience in selling hardware or electrical products or consumer appliances. Applicant should be young, dynamic, self motivated and result oriented and be aged below 30 years.

Ability to communicate effectively in Tamil, English is essential. Fluency in Sinhala language would be a definite advantage.

An attractive remuneration package commensurate with the position, is on offer for the selected candidate. Call over, with complete bio-data, recent passport size photograph and details of two non-related referees.

**DATE: 18TH AUGUST 2010**
**TIME: 2.30 - 5.30 P.M.**
**VENUE: New Bastian Hotel, 11, Kandy Road, CHUNDIKULLI**

Browns

Brown & Company PLC. Company Reg. No. Pq25

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Federal Department of Foreign Affairs FDFA
Swiss Agency for Development and Cooperation SDC
Humanitarian Aid and SHA

## Swiss Agency for Development and Cooperation (SDC)

### FIELD OFFICE – JAFFNA

SDC, the representing Agency of the Swiss Government, is co-funding and implementing several post-conflict projects in Sri Lanka. SDC is currently implementing an owner driven housing development programme in the Jaffna District. We are inviting applications from professionally qualified candidates for the following position.

**TECHNICAL OFFICER (CONSTRUCTION) – Duration 03 months**
The ideal candidate should have completed NCT.

We expect from you:
* Experience in supervision of construction and building sites
* Strong leadership capabilities
* Ability to work independently and as a member of a team
* Excellent command of English and Tamil, Sinhala is an advantage
* Should possess motorbike driving license

**Duty station is Maravanpulo. The candidate should be available for work immediately**

Application should contain a motivation letter along with your home address and contact number, your complete CV, copies of certificates and a copy of your driving license. Deadline of application: 19th August 2010. Applications should be forwarded to:

Head of Field Office
Swiss Agency for Development and Cooperation
521/11 Point Pedro Road,
Nallur, Jaffna.
e-mail address: jaffna@sdc.net

**Only short listed candidates will be contacted** *(101987)*

# பதவி வெற்றிடங்கள்

# oriflame



ஐரோப்பிய நாடுகளில் அழகுசாதன பொருள்களை நேரடியாக விற்பனை செய்வதில் முதலிடம் வகிக்கும் Oriflame நிறுவனம் உலகளாவிய ரீதியில் 7500 ஊழியர்களையும் 3.2 மில்லியன் ஆலோசகர்களையும் கொண்டுள்ளது. 12 வருடங்களுக்கு முன் Oriflame நிறுவனத்தின் கதவு இலங்கைக்காக திறக்கப்பட்டு அகில இலங்கை ரீதியில் விற்பனையை அதிகரித்துக் கொண்டு வருவதில் முன்னிலை வகிக்கின்றது.

இலங்கையில் 70 ஊழியர்களையும் 16,000 ஆலோசகர்களையும் தன்னகத்தே கொண்டுள்ள Oriflame அதன் பிரதான காரியாலயத்தை கொழும்பிலும் கிளைகளை கண்டியிலும் காலியிலும் அமைத்துள்ளது. Oriflame இரண்டு வருடங்களுக்குள் அதன் விற்பனையை இரண்டு மடங்காக அதிகரிக்கும் நோக்கத்துடன் அதன் வெற்றியை மேலும் பலப்படுத்தும் முகமாக வடபகுதி மக்களுடன் கை கோர்ப்பதற்கு அதன் கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவத் தீர்மானித்துள்ளது.

எமது வெற்றிப் பயணத்துடன் இணைந்து கொள்வதற்கு முதல்படியாக யாழ்ப்பாணக் கிளைக்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. Customer Relation Executive (Female - 1 position)**
**2. Ware House Assistant (Male -1 Position)**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

★ க.பொ.த. சா/த மற்றும் கா.பொ.த உ/த சித்தியடைந்திருத்தல்
★ கணனியில் தேர்ச்சி பெற்றிருத்தல்
★ தமிழ், ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் (சிங்கள மொழி பேச தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.)
★ கம்பனியுடனும் வாடிக்கையாளர்களுடனும் சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல்
★ இப்பதவிகளில் முன் அனுபவத்தைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
★ வயது: 25-30 எல்லைக்குள் இருத்தல்

விண்ணப்பதாரர்கள் தங்களது சுயவிபரக்கோவை மற்றும் தொழில்சார் திறமைகளை Vacancies@oriflame.lk எனும் email முகவரிக்கு அல்லது தபாலில் அனுப்புவோர் Oriflame Lanka(Pvt)Ltd, No.77, Darmapala Mawatha, Colombo-07 எனும் முகவரிக்கு 22.08.2010 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிடவும். விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். கவர்ச்சிகரமான சம்பளமும் பல அனுகூலங்களும் காத்திருக்கின்றன.

**மேலதிக தொடர்புகளுக்கு : Miss.A.Vithya 0727712604**

**EXPRESSION OF INTEREST**

***Material Suppliers***

UNDP

UNDP is in the process of registering the material suppliers in Jaffna for the following materials to implement Housing, Infrastructure and other livelihood projects in the District.

1. Cement(SLS)
2. Reinforcement steel(SLS)
3. Timber (roof and frame)
4. Timber plank
5. Door/Window frame/sash
6. Rubble (lime stone)
7. Rubble (granite stone)
8. Metal (½"-1 ½") (lime stone)
9. Metal (½"-1 ½") (granite stone)
10. Crusher dust (lime stone)
11. Crusher dust (granite stone)
12. Sand (River)
13. Sand (Fine)
14. Hard earth (red soil)
15. Hard Earth (gravel)
16. Roof tile
17. Painting items
18. Nails and screws
19. Locks and hinges
20. Bitumen
21. Fishing Nets
22. Out Boat Motors (OBMs)
23. Boats (Wooden & Fibre Class)
24. Office furniture
25. ICT Equipments

Interested suppliers are requested to obtain the pre-qualification documents from **UNDP Jaffna Field Office,** #121, Temple Road, Jaffna from **August 16, 2010**. Submission of application will be accepted at the above location until **4 p.m. on August 31, 2010**. No telephone inquiries will be solicited in this regard. UNDP reserves the right to cancel all or one of the above and/or reject any application, without assigning any reasons.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Midea Electro Mart** LG

# Authorized Dealer for Abans Ltd.

**COMPACQ CQ3014 DESKTOP.PC**

| | |
|---|---|
| PROCESSOR | Intel gore 2 Due 2.8Ghz E7400 |
| MEMORY | 2GB DDR2 |
| HARD DISK | 310GB 30Gb/s Hard Disk |
| DISK DRIVE | DVD Writer |
| MONITOR | 19th L.G LCD |
| UPS | Toyostar. 650 VA |
| SPEAKER | 900W |
| MOUSE | Compacq |
| KEYBOARD | Compacq |

75,900

| LAPTOPS | COMPACQ 420 | PROLING MINI |
|---|---|---|
| PROCESSOR | Intel Core 2 Duo 2.2Ghz E7400 | Atom Intel 1.6Ghz |
| MEMORY | 2GB DDR2 | IGB |
| HARD DISK | 500GB HDD | 160GB |
| DISK DRIVE | DVD Writer | Nill |
| CAMERA | Web Camera | WebCamera |
| MONITOR | 14.6' | 9" |
| OTHERS | WIFI Blue Tooth | WIFI Blue Tooth |
| | 72,900 | 46,900 |

| PERSONAL PC SYSTEM | INTEL ATOMPC SYSTEM | INTEL DUAI CORE PC SYSTEM | INTEL CORE 2 DUO PC SYSTEM |
|---|---|---|---|
| PROCESSOR | Intel Atom 1.6 GHZ | Intel Dual core 2.7 GHZ | Intel core 2 Duo 2.93 GHZ |
| MOTHER BOARD | Intel 945 GNL Main Board | Intel Chipset G31 Main Board | Intel Chipset G31 Main Board |
| MEMORY | IGB DDR - II, 800MHZ | IGB DDR - II, 800MHZ | IGB DDR - II, 800MHZ |
| HARD DISK | 250GB SATA - 7200RPM | 250GB SATA - 7200RPM | 250GB SATA - 7200RPM |
| DISK DRIVE | LG DVD Writer | LG DVD Writer | LG DVD Writer |
| CASING | ATX 500W Ccivo | ATX 500W Ccivo | ATX 500W Ccivo |
| MONITOR | 16" LCD AOC | 16"LG LCD | 19" LG LCD |
| KEYBOARD | Multimedia ps/2 | Multimedia ps/2 | Multimedia ps/2 |
| MOUSE | Optical USB/Ps2 | Optical USB/Ps2 | Optical USB/ps2 |
| SPEAKER | Genius Multimedia 900W | Genius Multimedia 900W | Genius Multimedia 900W |
| UPS | Toyostar 650 VA | Toyostar 650 VA | Toyostar 650 VA |
| | 40,900 | 45,900 | 54,900 |

D.Link Router 7900

PRINTER
HP 1005 Laserjet - 16500
HP deskjet 3920 - 6500

Logitech webcam 2490

SCANNER
CANON LIDE 100 - 6900
HP G2410 - 9900

* Abans உத்தரவாதத்துடன் இலவச விநியோகத்தைப் பெற்றிடலாம்.
* Computers - Three Years Warranty
* Fridge and washing machine - Five Years Warranty

No: 1-I, 1-II, STANLEY ROAD, JAFFNA, SRILANKA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646, E.mail: midea21@gmail.com






Nyx
MOISTURIZING LOTIONS & CREAM
நிக்ஸ்
மொய்ச்சரைசிங்
லோஷன் மற்றும் கிறீம்

## அழகான பளபளக்கும் மேனிக்கு

இயற்கை குணநலன்கள் நிறைந்த மூலிகைகள் மற்றும் மூலப்பொருட்களின் கலவையான நிக்ஸ் மொய்ச்ஷரய்சிங் லோஷன் மற்றும் கிறீம் (NYX Moisturizing Lotions and Cream) சருமத்தின் மென்மையை மெருகூட்டி சருமத்தின் ஈரலிப்புத்தன்மையை காத்திடும் கனியுப்புக்கள் மற்றும் தாவர எண்ணை (Vegetable Oil) அடங்கியது.மனதை சுண்டியிலுக்கும் நறுமணத்துடன் கூடிய நிக்ஸ் மொய்சஷரய்சிங் லோஷன் மற்றும் கிறீம் நாள் முழுவதும் உங்களை புத்துணர்வுடன் வைத்திருக்கும்.

**Nyx Aloevera Moisturizing Body Lotion**

சாதாரண சருமத்திற்கான இதில் கற்றாழை சாறும் விட்டமின் E யும் நிறைந்திருக்கின்றன. நாள் முழுவதும் ஈரலிப்பை தக்க வைப்பதன் மூலம் சருமத்திற்கு போஷணையை வழங்கி செழிப்பாகவும் மிருதுவாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதுடன் வெயிலால் பாதிப்புறாமல் பாதுகாக்கின்றது.

**Nyx Almond Moisturizing Body Lotion**

சாதாரண சருமத்திற்கு உகந்தது. வாதுமை எண்ணையும் (Almond Oil) விட்டமின் E யும் சருமத்தின் ஈரலிப்பை பேணி பளிச்சிடும் மென்மையான தோற்றத்தை பெற்று தரும். சருமத்தின் சுவடுகள் கரும்புள்ளிகளை அகற்றி புற ஊதா கதிர்களின் தாக்கத்திலிருந்தும் பாதுகாத்திடும்.

**Nyx Cocoa Butter Moisturizing Body Lotion**

அதிகம் வரண்ட சருமத்திற்கு உகந்தது. இதில் கொக்கோ பட்டரும் (Cocoa Butter) விட்டமின் E யும் உண்டு. இது சருமம் வரட்சி அடையாமல் பாதுகாப்பதுடன் anti-oxidant ஆக செயல்பட்டு சருமத்தை பாதுகாக்கின்றது. சருமம் சுருங்கும் போது ஏற்படும் தழும்புகளை (Stretch Marks) நீக்கி சருமத்திற்கு மென்மையான பளிச்சிடும் தோற்றத்தை தருவதுடன் தீங்கிழைக்கும் புற ஊதா கதிர்களிலிருந்தும் பாதுகாக்கின்றது.

**Nyx Musk Moisturizing Body Lotion**

வரண்ட சருமத்திற்கு உகந்தது. இதில் கற்றாழை சாறும் விட்டமின் E யும் கஸ்தூரி (Musk) வாசனையும் சேர்க்கப்பட்டுள்ளன. வரண்ட சருமத்திற்கு நெகிழ்ச்சியையும் ஈரலிப்பையும் வழங்கி மிருதுவாகவும் மென்மையாகவும் வைத்திருப்பதுடன் தீங்கிழைக்கும் புற ஊதா கதிர்களிலிருந்தும் பாதுகாக்கின்றது.

**NYX Aloe Vera Moisturizing Cream**

சாதாரண மற்றும் வரண்ட சருமத்திற்கு (எண்ணைத்தன்மையற்ற) உகந்தது. இதில் அடங்கியுள்ள கற்றாழை, மற்றும் விட்டமின் B3 ஈரலிப்புத்தன்மையை பேணி சருமத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கின்றன. சூரியகாந்தி எண்ணை (Sunflower oil) சருமத்தை மென்மையாக்கி வளர்ச்சியடையச் செய்வதுடன் ஜோஜோபா எண்ணை (Jojoba oil) சருமத்தின் எண்ணை அளவை கட்டுப்படுத்தி மிருதுவான இளமைத்தோற்றத்தை பெற்றுத் தருகின்றது.

ஹார்கோட்ஸ் (பிரைவேட்) லிமிடட், (கன்சியுமர் டிவிஷன்), இல.14 புகையிரத நிலைய வீதி, தெகிவளை.
தொ: 011-2740580, 011-2740586, 0773833473





LOLC
imagine the possibilities

"டக்காலா லீசிங்" ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்

டக் காலா Leasing





நீங்களும் LOLC "டக்காலா" leasing ஒன்றை பெற்று "ரூங்" என்று காரில் செல்லுங்கள்

- உங்களுக்கேற்ற வாடகைகள்
- விரைவு மற்றும் சிநேகபூர்வமான சேவை
- நிறுவனத்தாலேயே காப்புறுதி மற்றும் மதிப்பீடு
- நாடளாவிய ரீதியில் கிளைகள் வலையமைப்பு

☎ 011 5 880 600
✉ inquiries@lankaorix.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இதய நோயாளிகளுக்கு பப்பாளி

கடுமையான காய்ச்சலைக் குணப்படுத்த உதவும் பப்பாளி இலை கசாயம் இதய நோயாளிகளுக்கும் நல்லது. முக்கியமாக அடிக்கடி இதயத் துடிப்பு அதிகரிப்பதால் அவதிப்படும் நோயாளிகளுக்கு பப்பாளி இலை கசாயம் சிறந்த பலனளிக்கும்.

பப்பாளி இலை கசாயம் நோயாளியை அமைதிப்படுத்தி, இதயத்துடிப்பைக் குறைத்து நிவாரணம் அளிக்கிறது. இதய நோயாளிகளுக்கு நன்றாக முற்றிப் பழுத்த பப்பாளிப் பழம் மிகச் சிறந்த உணவாகும்.


பப்பாளிப் பழம் இரத்தத்தில் கோலஸ்ரோலின் அளவைக் குறைத்து, குருதிக் குழாய்களை நெகிழக் கூடியவையாக ஆக்குவதால், இதய நோயாளிகள் பப்பாளிப் பழத்தைத் தவறாமல் கண்டிப்பாக அவர்களுடைய உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. காலை உணவாக பப்பாளிப் பழத்தை மட்டுமே சாப்பிடலாம். மாலையில் தேநீர் வேளையிலும் பப்பாளிப் பழம் சாப்பிடலாம். ஆனால் இரவில் பப்பாளிப் பழம் சாப்பிடக் கூடாது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# உத்தியோக நாற்காலி

மனம் சாந்தியால் நிறைந்து வழிகின்றது. போகும்போது புலனைத் தாக்காத சௌந்தர்யங்களெல்லாம் இப்பொழுது எவ்வளவு குழைவுடன் விருந்தளிக்கின்றன. எலுமிச்சம் பழ நிறத்து அழகியின் முகவெழில் காட்டி, மடல்கள் விரித்து மன்றல் கமழ்ந்து சிரிக்கின்றன. தாழை மரங்களோ நிறை மாதக் கர்ப்பிணியின் சாயலில், செம்மஞ்சள் பூத்து மோகப் பொழிவு காட்டுகின்ற தாழம் பழங்களிலொன்றில்களை பறிக்கின்றேன். மடக் என்ற தொனியோடுகளை பிணைப்பு விடுகிறது. 'மடக்' பொறுப்பற்ற ஒற்றைக் கண் விமர்சனங்கள் பூநிகர் இதயத்தை ஒடிப்பது போன்ற துன்ப வேதனையைத் தான் ஊட்டுகின்றது. களையின் முகிழ்ப்பாகத்தை பற்களால் கோதுகின்றேன். இனிக்கிறது. நன்னாரியின் மணங்கூட கமழ்கின்றது. இனிமையும் மணமும்முள்ள தாழங் கனியின் தொய்வுதான் நாக்கிலே



சொறிவை ஊட்டுகின்றதோ? நாவிற்தின வெடுக்குங் தாழங் கனியிலிருந்தும் சுதேச வைத்தியர்கள் தைலம் வடிக்கத்தான் செய்கிறார்கள்.

தளிர் நாக்குகளை நீட்டி கிறவல் பாதைக் காதலனைத் தழுவத் தவித்து, இரு மருங்கும் கண்ணுக் கெட்டிய தூரம் வரை படர்ந்திருக்கும் அடம்பன் கொடிகளின் மரகதப் பசுமை சாந்தி குடிகொண்டுள்ள என் மனத்தையே பிரதிபலிக்கின்றது.

அந்த ஏழைக் குடியானவர்களை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரணம் பெற்றுத் தருவதாக வாக்குறுதி அளிக்கும் வரை நான் பட்டபாடு. என்னையே மறந்த நிலையில் அவர்களுக்கு கூறிய வார்த்தைகள்... வார்த்தைகளா அவை? இதயக் கமலங்களை சல்லடை துளைக்கும் கொடுங்கணைகள் வார்த்தை சரங்கள் இதயங்களைப் பிய்த்து வண்ணாத்தி விட்டு விளையாடி விட்டன என்பதை அவர்களின் பரிதாபமான தோற்றமே புலப்படுத்துகின்றது.

கடற்காற்றின் மெல்லோசையைப் பாட்டாக வரித்துப் பரதம் பயில்கின்ற ஊதாநிற அடம்பன் பூக்கள், என்னையே நகைக்கின்றன. இடித்துக் கேட்கின்றன. "நீயொரு மேலதிகாரியா? பூவினும் மெல்லிய இதயம்படைத்த எழுத்தாளனா? நீ வாணியின் கடைக்கண் வீச்சில் இறங்கி உனது சிருஷ்டியில் உன்னை இழந்திருந்தாய் என்பது கொடுமையிலடி பட்ட

ஏழைகளுக்கு என்ன தெரியும். நீர்ச் சுழிப்பிலே சிக்கி, பற்றுக்கோடு கேட்டுத் தவித்தவர்களின் தலையில் பாறாங் கல்லையல்லவா தூக்கிப் போட்டு விட்டாய்" என்று கேட்பதாக உணர்வு தட்டுகிறது.

மலர்களே! என்னைச் சுடாதீர்கள். நான் தான் பிராயச்சித்தம் தேடிவிட்டு வருகிறேனே.

தெருவின் வளைவில் கிறுகி, ஊருக்குள் செல்லும் பாதையில் நடை கொள்ளுகின்றேன். தெருவை அடுத்த தோப்பில் மாந்தளிர் கோதும் குயிலின் மாங்கனிச்சாறு பிழிந்த கானம் என்னைத் தேற்றுகிறது. சற்று முன் குடியானவர்களைச் சந்தித்த போது போர்க்களமாக இருந்த மேற்கு வானம் ரோஜா மலர் பரப்பிய படுதா வாகத் தோற்றுகின்றது. நேற்றிரவு ஊரெல்லாம் அடங்கிய நேரம் சோபாவில் அமர்ந்த, யூ.ஜி.நோநைல்ஸில் நாடகத்தோடு ஐக்கியமாகிக் கிடந்த மனைவியும் கொட்டாவி விட்டாவாறே புத்தகத்தை மடித்து மேசை மீது போட்டுவிட்டு நகர்கின்றாள். செம்புத் தகட்டடித்துச் செப்பனிட்ட தலை போல் மாணிக்கம் கரைகட்டி மடைதிறந்த நெருப்பாற்றை அதன் மத்தியிலே ஓடவிட்ட அழகுபோல்.... அழகுபோல்...... அழகு போல்.... போ....ல்.......!" தன்னறையிலே கிடந்து கட்டப்பொம்மனாய் நடந்த வேலைக்கார அப்புவும் நித்திரைக் கணிகையின் ஆலிங்கனத்தில் தன்னை இழந்து விடுகிறான். அடுத்த அறையிலே 'தேவியும் தவமிருந்து' கதையைப் பிரதி எடுத்துக் கொண்டிருந்த சுவீகாரப் புதல்வனின் ஊசாட்டமும் அடங்கி விடுகின்றது. அவர்களுக்கோ இரவு ஐம்பது வயதைத் தாண்டி விட்டது. எனக்கோ...

இரவு இளமையோடு இருக்கின்றது. எனக்கு அவள் எப்போதும் மார்க்கண்டேய வரம் பெற்ற மங்கைதான். வாணியின் கடாட்சத்தில், உணர்வுநிலைத் தோய்வில் நல்லதையே விரும்பும் பாவலர் உள்ளம் நிகர்ந்த வெள்ளைத் தாளை ஊற்றுப் போனாவின் கரிய மசியால் நிரப்பிக் கொண்டிருக்கிறேன்.

18ஆம் பக்கம் பார்க்க

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 162**



**1960 களில் ஈழத்துப் புனைகதைத் துறையில் தம்மை இணைத்துக் கொண்ட 'மருதூர்க் கொத்தனின்' இயற்பெயர் வி.எம். இஸ்மாயில். அநுராதபுர மாவட்டத்தில் பிறந்த இவர் கிழக்கு மாகாணத்தை வதிவிடமாக்கிக் கொண்டவர்.**

**தினகரன், வீரகேசரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும், நவமணி, தாமரை, மல்லிகை போன்ற சஞ்சிகைகளிலும் இவரது சிறுகதை, கவிதை, நாடகம் மற்றும் நாட்டாரியல் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.**

**இவரது சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு 'மருதூர்க் கொத்தன் கதைகள்' என்ற பெயரில் 1986இல் வெளிவந்தது. வடக்கு கிழக்கு பண்பாட்டலுவல்கள் அமைச்சின் 1999ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருது உட்பட வேறும் பல விருதுகளையும் பெற்றவர்.**

**1964ஆம் ஆண்டில் ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமான இவரது 'உத்தியோக நாற்காலி' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.**

---

# நட்புரிமை இலக்கணத்திற்கு இலக்கியமான கர்ணன்

**இலக்கியக் காட்சி 53**

'கொடைக்குக் கர்ணன்' என்று நாம் அறிந்த கர்ணன், நட்புரிமை என்னும் இலக்கணத்துக்கு இலக்கியமாவும் திகழ்கின்றான்.

அண்ணன் - தம்பி பிள்ளைகளான கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையில் உள்ள கதையே மகாபாரதம் என்ற காப்பியம். கௌரவர் பக்கத்தில் திருதராட்டிரனுடைய பிள்ளைகளான துரியோதனன் முதலிய நூற்றியொரு பேரும், பாண்டவர் பக்கத்தில் பாண்டுவின் புத்திரர்களான தருமன் முதலிய ஐவரும், இன்னும் மேலோர் என்று மதிக்கப்பெற்ற விதுரன், துரோணர், பீஷ்மர், துருபதன், சஞ்சயன், சல்லியன் முதலானோரும் கதை மாந்தர்களாக வருகிறார்கள். தருமன், வீமன் , அருச்சுனன், நலகுன், சகாதேவன் ஆகிய பாண்டு புத்திரர்கள் ஐவருடைய தாய் குந்திதேவி. குந்திதேவி கன்னியாக இருக்கும் போது சூரிய பகவானுடன் கொண்ட தொடர்பால் பிறந்தவன்தான் கர்ணன். கவசமும் குண்டலமும் உடையவனாய் பிறந்த காரணத்தால் கர்ணன் எனப் பெயர் பெற்றான்.

கன்னியான குந்தி, தான் பெற்ற பிள்ளையை (கர்ணனை)ப் பழிக்கஞ்சி கங்கைஆற்றில் எறிந்து விட்டாள். பிள்ளைச் செல்வமில்லாது வாழ்ந்த அதிரதன் என்னும் தேரோட்டி, அப் பிள்ளையைக் கண்டு எடுத்து வளர்த்தான். கர்ணன் தேரோட்டி மகனாக வளர்ந்தான். குந்திதேவிக்கோ, மற்றைய பாண்டவர்களுக்கோ அன்றிக் கௌரவர்களுக்கோ அந்த இரகசியம் தெரியாது!

கர்ணன் இயல்பாகவே போர்ப் பயிற்சிகளிலும் வேறு வீரச் செயல்களிலும் வல்லவனாக இருந்தான். மற்றைய பாண்டு மைந்தர்களுக்கு நிகரான வீரனான கர்ணனைத் துரியோதனன் தனது உற்ற நண்பனாக்கி அன்பு பூண்டு ஒழுகினான்.

பாண்டவர் ஐவரும் மேலோர் பார்வையில் குணசாலிகளாகவும் போர்முறைகளில் வீரதீரர்களாவும் விளங்கி வந்தார்கள். அதேநேரம் தீய எண்ணமுடையவர்களாவும் பெரியோரை மதிக்காதவர்களாவும் துரியோதனனும் தம்பிமாரும் வளர்ந்தார்கள். அதனால் பாண்டவர் ஐவர் மீதும் துரியோதனன் முதலியோருக்குப் பகை உணர்வு ஏற்பட்டது.

வில்லாசிரியரான துரோணரிடம் போர்ப் பயிற்சிக்காக அரசகுமாரர்கள் செல்வார்கள். கர்ணன் ஆர்வமிகுதியினால் வில்வித்தை பயிலத் துரோணரிடம் சென்றபோது தேரோட்டியின் மகன் என்பதால் அவரிடம் அவனால் பயிற்சி பெற முடியவில்லை. ஆகையால் பிராமணர்களுக்கு மாத்திரம் விற்பயிற்சி கொடுக்கும் பரசுராமரிடம், பிராமணவேடமணிந்து கர்ணன் வில்வித்தை கற்றான். குருகுல வழக்கப்படி ஒரு நாள் கர்ணனின் மடிமீது பரசுராமர் படுத்து உறங்கிவிட்டார். அப்போது, கர்ணனின் தொடையில் ஒரு வண்டு கடித்து இரத்தம் கொட்டியது. குருவின் தூக்கம் கலைந்து விடும் என்பதால் கர்ணன் அசையாமல் இருந்தான். விழித்



தெழுந்த பரசுராமர் இரத்த வெள்ளத்தைக் கண்டு நடந்தவற்றைக் கேட்டார். கர்ணன் சொன்ன சமாதானம் அவருக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. கர்ணன் உண்மையைக் கூற வேண்டியதாயிற்று. அதனால் பரசுராமர், ஆபத்தான வேளையில் நீ பெற்ற பயிற்சிகளை மறந்து போவாய் (உற்ற போரில் கற்றதை மற) எனச் சாபம் இட்டார்! துரோணர், தன்னிடம் பயிற்சி பெற்ற மாணவர்களுக்குப் போட்டிப் பரீட்சை வைத்த பொழுது, அர்ச்சுனனுக்குப் போட்டியாகக் கலந்து கொள்ள கர்ணன் முன்வந்தான். ஆனால் கர்ணன் யார் பிள்ளையென்று தெரியாதவன் (பிறப்பறியான்), தேரோட்டியின் வளர்ப்பு மகன் என்பதால், கர்ணனோடு போட்டியில் இறங்க அர்ச்சுனன் மறுத்து விட்டான். இவை காரணமாக கர்ணன் அவமான மடைந்தான். தனது நண்பன் இவ்வாறு அவமானப் பட்டதைத் தாங்காத துரியோதனன், அந்த இடத்தில் வைத்தே கர்ணனை அங்கதேசத்துக்கு அரசனாக்கி முடிசூட்டி மதிப்பளித்தான். இதுவரை சாதாரண நட்பாக ஆயினும் துரியோதனனது மாளிகையில் அந்தப்புரம் வரை செல்வாக்குப் பெற்ற நட்பாக இருந்து வந்த நட்பு, அரசனாக்கியதால் மேலும் வலுப் பெற்று [illegible] கர்ணனாக வருவதற்கேற்ற பொருளா தார வசதியும் கர்ணனுக்குக் கிடைத்தது. ஆகவே யாரென்று அறியாத் தகாத தன்னை, ஊரும் திருவும் தந்து அரசனாக்கி அறியச் செய்த துரியோதனனுக்கு என்றும் உற்ற நண்பனாக உயிரையும் கொடுக்கத் தக்கவனாகத் தன்னை ஆக்கிக் கொண்டான் கர்ணன்.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு - என்றும்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்
செய்நன்றி கொன்ற மகற்கு

என்றும் தெய்வப்புலவர் கூறியுள்ள நட்புக்கு இலக்கியமாக நடந்து கொண்டான் கர்ணன். துரியோதனனுக்கு யார் நண்பரோ அவர்களுக்கு நண்பனாகவும், யார் அவனுக்குப் பகைவரோ அவர்களுக்குப் பகைவனாகவும் நடந்து கொண்டான். பிதாமகர் எனப்படும் பீஷ்மர், பத்தாம் நாள் போரில் அர்ச்சுனனது அம்புகளால் சாய்ந்து அம்புப்படுக்கையில் கிடந்த போது, கர்ணன் வந்து, 'குருகுலத்திலகமே! உங்களை வணங்குகிறேன் எனச் சொல்லி நின்ற பொழுது, பீஷ்மர் "கர்ணா நீ தேரோட்டி மகன் அல்லன்; 'குந்திநந்தனன்' என்று நாரதர் வாயிலாக அறிந்தேன்; சூரியகுமாரனே! உன்னை அர்ச்சுனனுக்கும் கண்ணனுக்கும் ஒப்பிடலாம்; உன் கொடையையும் வீரத்தையும் நான் நன்கு அறிவேன். பாண்டவரின் மூத்த சகோதரன் நீ; அவர்களோடு அன்பு பாராட்டி நடந்துகொள்வாயாக" எனக் கூறினார். அதற்கு கர்ணனோ, "பிதாமகரே! நான் குந்தி மகன் என்பதை அறிந்தேன்; தேர் ஓட்டி யின் மகன் அல்லன் என்பதும் தெரியும்; ஆயினும் நான் துரியோதனனின் பொருளைப் பெற்றுக் கொண்டவன்; அவனுக்குக் கட்டுப்பட்டவன். அதனால் அவனது பகைவர் பக்கம் சாய்வது எனக்குப் பிடிக்காது; நட்புரிமை, கடமை, நன்றி காரணமாக நான் துரியோதனன் பக்கம் இருந்து போர் புரிந்தே தீர வேண்டும். என்னை மன்னித்தருள வேண்டும்" என்றான். இதைத் கேட்ட பீஷ்மர் 'கர்ணா! நட்புரிமை இலக்கணத்துக்கு நீ ஓர் இலக்கியமாக, நாயகனாக விளங்குகிறாய்; நதிகளுக்குச் சமுத்திரம் போலவும், வாடிய பயிர்களுக்கு வான் மழை போலவும் நீ உன்னிடம் நட்பு வைத்தவர்களுக்கு உறுதியான ஆதாரமாக இருக்கிறாய்; துரியோ தனனைக் காப்பாற்றுவாயாக! நான் உன்னை ஆசீர்வதிக்கிறேன். உனக்கு மங்களம் உண்டாகட்டும்' என முடிக்கிறார். இந்த வார்த்தைகளைக் கேட்ட கர்ணன் முகம் மலர்ந்தான். கர்ணன் பாரதப்போரில் இறந்து விட்ட நிலையில் போர்க்களஞ் சென்று குந்திதேவி

"...... பாரைஞ்சும் ஒரு குடையின் கீழ் நீயே ஆளும்
பதம் அடைத்தும் விதிவலியால் பயன்பெறாமல்
காரைஞ்சு கரதலத்தாய் அந்தோ! அந்தோ!
கடவுளர் தம் மாயையினாற் கழிவுற்றாயே"

எனக் கர்ணனின் தாய் தானே என உலகறியச் செய்து அழுது புலம்புவதன் மூலம் மகா பாரதத்தில் கர்ணனின் நட்பு சிறப்பிக்கப்பட்டது. ★★★★★

மட்டுவில் நா. நல்லதம்பி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 126

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| ■ | 10 | 11 | | ■ | 12 | | |
| 13 | | | ■ | 14 | | ■ | |
| 15 | | | 16 | | ■ | 17 | |
| | ■ | 18 | | ■ | 19 | | ■ |
| ■ | 20 | ■ | 21 | | | | 22 |
| 23 | | | | ■ | 24 | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. கற்பில் சிறந்தவள். நட்சத்திரம். வசிட்டன் மனைவி.
5. பிரி.
7. படி.
8. வரும்படி.
10. கத்தி அழு.
12. இளைய சகோதரன்.
13. நீர்த்தன்மை
14. தும்பில் இருப்பது. கயிறு தயாரிக்க உதவுவது.
15. நிகழ்வு.
17. படி/ கட்டடம் கட்டவும் தேவை.
18. உள்ளே தள்ளு.
19. நீரில் வேக வை.
21. அதிக வடிவு.
23. மேடு அல்ல.
24. குளிசை/ மாத்திரை.

### மேலிருந்து கீழ்

1. எல்லையற்ற ஆசை.
2. சுவை நிரம்பியது.
3. தப்பு/ பிழை.
4. செல்லம்/ ஆணின் பெயரின் முன்னால் போடுவது.
5. காடு
6. வணங்கல்/ கரம் குவித்தல்.
9. பெண்கள்.
11. கணவன் - மனைவி.
13. மழைக்காலத்தில் வருவது.
14. தன்மைப் பன்மை.
16. வர்த்தகம்/ வியாபாரம்.
17. அகம்புறமாதல்/ தலைகீழாதல்.
19. இதுவும் காடுதான்.
20. போதை தருவது/ பன்மைக்கும் வரும்.
22. காய்கள் பழங்களின் கொத்து.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 126**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 25.08.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.126இல் வெற்றி பெறுவோர் களது விவரம் 29.08.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 124 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)சகவாசம். (5)பாபா. (7)மட்டும். (8)படகு. (9)படை. (10)பூதலம். (12)சரளம். (14) திருமணம். (16)தரு. (17)சிதம்பரம். (19) புசி. (21) துரும்பு. (22) தராசு.

**மேலிருந்து கீழ்**

(1)சமபந்தி. (2)கட்டை. (3)வாடு. (4) சம்பூரணம். (5)பாடம். (6)பாகு. (8)பலம். (11)தளம்பல். (12) சமதளம் (13)துரு. (15)ருசி. (16)தம்புரா. (18)மாது. (20).சிசு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 124 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு **எஸ். சுதாமலர்,** கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு.

2 ஆம் பரிசு **சிவகுமாரன் வினோஸ்,** நர்மபுரம் தடுப்பு முகாம், உலுக்குளம், வவுனியா

3 ஆம் பரிசு **திருமதி ச. இராஜேஸ்வரி,** பாரதி லேன், சங்கானை.

4 ஆம் பரிசு **மே. தி. பசுபதி,** இல:40, மார்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

5 ஆம் பரிசு **திருமதி ஞா. கலாநிதி,** கிராம்புவில், சாவகச்சேரி.

**பாராட்டுப் பெறுவோர்**

(1) **சிந்து கோபு,** இணுவில் மேற்கு, இணுவில்.

(2) **க. தில்லையம்பலம்,** விஜயவாசா, வதிரி, கரவெட்டி.

(3) **நா. சுந்தரலிங்கம்,** சத்தியசாயி பல்பொருள் வாணிபம், தொட்டிலடி, சண்டிலிப்பாய்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தை சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# உத்தியோக நாற்காலி

*(17ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

அமுதமும் நஞ்சும் கலந்து வாழ்வது போல வெள்ளைக் காகிதமும் கரிய மசியும் சேர்ந்து இலக்கியமாகிக் கொண்டிருக்கிறது. மச்சம் கொணர்ந்து மாந்தர் தம் பசி போக்கத்தொடு வானுக்குத் தோணியோட்டிச் சென்ற வாப்பா, அறு சுவை உண்டி அளவாக உண்ட சுகதேகியின் வயிறு போல மீன் நிறைந்த வள்ளத்தில் கம்பீரமாக வீற்றிருந்து வரும் வரவை எதிர்பார்த்தவளாய் தாழைநிழலில், பச்சரிசி பரப்பியது போன்ற வெண் மணலில் கொலு வீற்றிருக்கிறாள் ஆமினா. நிமிடங்கள் கரையக் கரைய தாளும் ஒன்றன்பின் ஒன்றாக நிரம்பிக் கொண்டே போகின்றன. அதே தாழையின் கீழ் அதே வெள்ளை மணலில் உட்காந்திருக்கிறாள் ஆமீனா. அரசிகள் தாமே வீற்றிருப்பார்கள். அவளின் மடியிலை மதலை. எருமை உழக்கிய பங்கயமாக அவள் வதனம் வாடிப்போய் கிடக்கின்றது. வாப்பாவின் வரவை நோக்கி உட்கார்ந்திருக்கிறாள்.

எனது கண்கள் கசிந்த பிழிவு,கொலுவிருந்தாள் என்ற சொற்களிலே கொட்டிவிடுகின்றன. பேனாவைத் திறந்த கோலத்தில் மேசையில் வைத்துவிட்டு கதிரையில் கிடந்த துவாயால் கண்களை ஒற்றி எடுக்கின்றேன்.

''ஐயா!''

பரிதாபகரமான கெதியில் வெளியே இருந்து ஒரு குரல்.

''ஐயா! ஐயோவ்''

வெளிவாயில் விளக்கின் பொத்தானை அழுத்திவிட்டு வாயிலுக்குச் செல்கிறேன். விளக்கு பக்கென்று பற்றிய போது வெளி வாயில் பகுதியில் வியாபித்த வெளிச்சம் என்னைக் கண்டதும் அவர்கள் வதனத்தில் பொலிந்த தேஜசுக்கு எங்கே ஈடாகப் போகின்றது. ''என்ன இந்த நள்ளிரவில்?'' நல்ல உத்தியோகம், நேரங்காலம் தெரியாமல் தொல்லை கொடுக்கிறார்களே என்ற எண்ணச் சுழிப்பில் நான் சற்றுக் கடுமையாகத்தான் கேட்கிறேன். ஒருவன் பேசுகிறான்.

''ஐயா! அந்த வகுத்தெரிச்சலை என்னெண்டு சொல்லுவேன் ஐயா, குஞ்சுங்குராலுமான எங்கட புள்ளையள் ஒண்ட இடமில்லாம நடுங்கிப்போய் நிக்குதுகளையா, எங்க ரெண்டு பேர் குடிசைகளைக் கடலெடுத்திற்றையா''

''அவ்வளவு கடலோரத்திலயா குடிசை கட்டினீர்கள்?'' என்று உத்தியோக ரீதியில் குறுக்கு விசாரணையில் ஈடுபடுகின்றேன்.

''இல்லை ஐயா, றோட்டையும் கடலரிச்சி, றோட்டுக்கிங்கால இருந்த குடில்களையும் எடுத்திற்று. வருசா வருசம் அவடத்தில கடல் கொந்தளிக்கிறதான் ஐயா, இந்த வருஷம் இப்படி நடந்திற்று ஆராரு செஞ்ச புண்ணிமோ எங்க உசிர் தப்பிவிட்டம்''

நனைந்த ஆகிருதியுடன் சால்வையைக் கம்முக்கட்டில் இடுக்கிக்கொண்டு கூனிக்குறுகிக் கேள்வி அடையாளத்தில் நிற்கிறார்கள். அவர்களின் பரிதாபகரமான தோற்றம் நான் செயற்கையோடு வருவித்துக் கொண்டே கடுமையை எங்கோ போக்கடிக்கின்றது. அவர்களைத் தேற்றி முறைப்பாடு எழுதி விதானையிடத்திலும் கையெழுத்து வாங்கிக் கொண்டு நாளை கந்தோருக்கு வருமாறு கூறி வழியனுப்புகிறேன்.

வீட்டுப்படலை அண்மிக்கிறது. முற்றத்திலே நிற்கிறேன். முற்றத்தில்தான் எத்தனை வகையான மலர்கள். பொதுமடங்கி பூக்கள் வாடித்தலை கிவிழ்ந்து தொங்குகின்றன. துயரத்தில் அடிபட்ட ஏழைகளைப் போல அவைகள். முற்றத்திலே கிடந்த பிரம்பு நாற்காலியில் அமர்கிறேன். பூக்களின் எழில் பருகுவதே ஆனந்தந்தான். ஆனால், பொழுதுமங்கிப் பூக்களின் வாடிய தோற்றம் முட்கம்பிச் சுருளை நெஞ்சத்துள் பாய்ச்சி விடுகின்றன.

இன்று பின்னேரம் காரியாதிகாரிக் கதிரையில் அமந்து தஸ்தாவேஜூகளுடன் கலந்திருக்கின்றேன்.

''ஐயா வணக்கம்'' என்ற குரல் கேட்கிறது. கனிவோடு கூடிய பணிவு குரலிலே கலந்திருக்கின்றது. தலையை நிமிர்த்தியவாறு பதில் வணக்கம் கூறிவிட்டு, இருக்கையைக் காட்டுகிறேன். நான் கொஞ்சக் காலமாகச் சந்திக்கக் காத்திருந்து சமூபகாலத்திற்தான் அந்த வாய்ப்பு கிட்டிய, துடிப்பும் நிறைவும் வாய்ந்த ஓர் இளம் எழுத்தாளன் இலக்கிய மன்னனான என்னோடல்ல கல்முனை காரியாதிகாரியோடு பேச வந்த விடயம் பேசப்பட்டு முடிவடைகின்றது. பேச்சுவாக்கில் இலக்கியம் பற்றி இரண்டொரு வாக்கியங்கள்.

சுயாதீனத்திற்கு தளையிடும் இந்த உத்தியோகத்தை இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் கட்டியழுவதோ? நண்பர்களும் இலக்கிய அன்பர்களும் தோழமையோடு நெருங்கக் கூசுகிறார்கள். பேசும் வார்த்தைகளையெல்லாம் இலக்கியமாகவே பேசவும், கேட்கும் பேச்சுக்களையெல்லாம் இலக்கியமாகவே கேட்கவும் அவாவுகின்றன. இந்த அவா நாளெல்லாம் நிறைவேறாவிட்டாலும் ஒருசில மணித்தியாலங்களாவது நிறைவேறுகின்றதா? இதற்கெல்லாம் பரிகாரமாக பழையபடி கறுத்தக் கோட்டை மாட்ட வேண்டியதுதான் எனது தீர்மானித்துக் கொண்டிருந்த எண்ணத்தில் உறுதிப்பாட்டை ஊடறுக்கிறது எழுத்தளானரின் சந்திப்பு. எழுந்தாளர் விடை கொள்ளுகின்றார். இருந்த இரண்டொரு 'பைல்'களைக் கைவிரல்கள் புரட்டுகின்றேன். சிந்தையோ காரியாலய அன்றைய - கல்முனையை நீச உலகையே தாண்டி ..... மனமென்ற வெண்திரை விதானத்தில் நாடகக் காட்சிகள் விரிக்கின்றன. உலகத்துப் பேரழிகள் பிச்சை வாங்கும் அபார சௌந்தர்யவதியான மச்சாளின் மதிவதனம் பொலிகின்றது. அந்த அழகுத் தெய்வத்தை அவள் மைத்துனன் வைத்த கண் பெயர்க்காது பார்க்கிறான். அவள் அன்புக் கடிதலாக, 'போடா... குரங்கு! சனியனே...!

அவள் காலமெல்லாம் காத்திருக்க அத்தான், பணத்துக்காக வெறொருத்தியை கைபிடிக்கிறான். இழுமென் ஓசை தமிழாள் அவள் நாவில் நகர்த்திக்க மறுக்கின்றாள். மைத்துனனின் பிஞ்சு இதயம் கொல்லன் கொப்பரையாகக் கொதிக்கின்றது.

''ஐயா! நாங்கதான்... நாங்கதான் ஐயா குடிசையை கடலொடுத்தவங்க'' என்ற குரல் கிணற்றிற்குள்ளிருந்து பேசும் கரத்தில் செவிப்பறையை தீட்டுவதான உணர்வு தட்டுகின்றது. கற்பனைச் சரடுகளில் கவர்ந்து கொண்டிருந்த என் சிந்தனை வண்டியை தடம் புரட்டும் வலிமை அதற்கு இருக்கவில்லை. மீண்டும் மீண்டும் அதே வார்த்தைகள் ஒலிக்கின்றன. என்னையே மறந்து அதிர்ந்து கொட்டுகின்றேன். 'உங்களை யார் கடலோரத்தில் வீடுகட்டச் சொன்னது? ''மனமோ இலவுகாத்த கிளியான மச்சாளுக்காக அழுது வடிக்கின்றது. திடீரென்று சுயநினைவு பெறுகின்றேன். கண்ணாடித் தூள்களை இதயத்துள் கொட்டிவிட்டது போன்ற நெருடல் வேதனை தட்டுகிறது. நிமிந்து பார்க்கின் றேன். யாரையும் காணவில்லை. மேசை மணியில் கைபதிக்கின்றது. பியோன் மாடியிலிருந்து திடுதிடுத்து வருகின்றான்.

''அவர்களை அழைத்துவா!''

''எவர்களை ஐயா'' என்று இழுக்கின்றான்.

''சற்று முன் இங்கே வந்தவர்களை'' காரியாலயமே அதிர இரைக்கின்றேன். அவனும் காரியாலயமெல்லாம் ஓடி அலைகின்றான். எழுத்து சென்று பார்க்கின்றேன். நேரமோ காரியாலயம் கலையும் நேரமானதால் காரை எடுத்துக் கொண்டு விரைகின்றேன். வீட்டிலே காரைப் போட்டுவிட்டு பொடி நடையாக நடக்கின்றேன். காண்பவர்களிடம் விசாரித்த வண்ணம் விரைகின்றேன். அகதிகளாக நின்ற அந்த இரு குடும்பத்தினரையும் பார்த்தபோது ஐயோ! என்ன பரிதாபம்! ஓய்ந்த போர்க்களம் போன்றிருந்த செவ்வான் அவர்கள் விழிகளின் முன் எம்மாத்திரம்.

பிரம்பு நாற்காலிகளுக்குச் களுவைக் கொடுத்து எழுகின்றேன். மரமுந்திரிகைப்பருப்பும் போன்ற பாத்தாம் பிறையின் பால் வெள்ளத்தில் மூழ்கி பந்தல் முல்லைகள் மோகனமாகச் சிரிக்கின்றன.******

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யானைகளின் வால் ஒவ்வொன்றுக்கும் சன்மானம்; வன்னியிலிருந்து அவற்றை அழிக்க அரசின் உத்தி

1840 யூன் மாதம் அரசாங்க அதிபர் டைக் கோப்பாய் கிறிஸ்தவ மிஷனறிக்கு (C.M.S) காணியொன்றை அன்பளிப்புச் செய்தார்.

1841 பெப்ரவரி மாதம் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த ஹார்டி (Hardy) என்ற வர்த்தகர் யாழ்ப்பாணம் வந்து தென்மராட்சியில் 2000 ஏக்கர் தரிசு நிலத்தை விலைக்கு வாங்கி அதில் புகையிலையையும் ஏனைய பயிர்களையும் பயிர் செய்தார். 1843 யூலை மாதம் யாழ்ப்பாணத்திலிருந்த தரிசு நிலங்கள் ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு ஏக்கர் 5 ஷில்லிங் (Shilling) வீதம் விற்பனை செய்யப் பட்டன. 1843ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அரசாங்க அதிபர் டைக்கின் வேண்டு கோளுக்கிணங்கதிரு.ஹென்றி மார்ட்டின் (Henry Martin ) கிழக்கு மாகாண அளவையாளராகவும் யாழ்ப்பாண அரச களஞ்சியப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் பெருமளவு உப்பு யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட விடயம் ஏற்கனவே பார்த்துள்ளோம்.

யாழ்ப்பாணத்திலிருந்த உப்பு சேமிக்கும் கொட்டில் கள், (இவை குருநகர் கடற்கரை வீதியில் அமைந்தி ருந்தன.) மதுபானச் சாலைகள், வனபரிபாலனம், அரச மருந்துக் களஞ்சியம் என்பன அரச களஞ்சியப்

**ஆவணப் பெட்டகம் 06**

பொறுப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழிருந்தன. காடுக ளில் மரம் தறிப்பவர்கள் அரச களஞ்சியப் பொறுப்பா ளரின் அனுமதி பெற்றே மரம் தறிக்க வேண்டும்.

களஞ்சியப் பொறுப்பாளர், உதயதாரகை பத்திரி கையின் ஸ்தாபக ஆசிரியர் (இலங்கையின் முதல் பத்திரிகையாளர்), இலங்கையின் முதலாவது படப் பிடிப்பாளர் போன்ற பெருமைக்குரிய ஹென்றி மார்ட்டின் 10.03.1861 அன்று காலமானார். இவரது சேவையைப் பாராட்டி அரசாங்க அதிபர் டைக் யாழ். புகையிரத நிலையத்திலிருந்து பிரதான வீதிக்குச் செல்லும் வீதிக்கு 1862 டிசெம்பரில் மார்ட்டீன் வீதி எனப் பெயர் சூட்டினார். ஹென்றி மார்ட்டின் பின்னாளில் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறில் மார்ட்டீன் பாட்டனாவார். 1844 யூன் அரசாங்க உத்தரவின் பேரில் வன்னி, மன்னார், பச்சிலைப்பள்ளி, கிளிநொச்சி (பச்சிலைப்பள்ளி என்றே அழைக்கப்பட்டது) பகுதிகளில் 150 யானைகள் அழிக்கப்பட்டன. யானைகள் கொல்லப் பட்டதற்குச் சாட்சியாக, கொல்லப்பட்ட யானையின் வாலை எடுத்து வந்து யாழ்ப்பாணம் கச்சேரியில் ஒப்ப டைக்க வேண்டும் என அரசாங்கம் அறிவித்தது.

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

அரசாங் கத்தின் அறிவித்தலுக்கமைய யானைகளைத் கொன்றவர்கள் அதன் வாலை எடுத்துவந்து யாழ்ப்பாணம் கச்சேரியில் ஒப்படைத்தனர். இவ்வாறு யானைகளைக் கொன்றவர்களுக்குச் சன்மானமும் வழங்கப்பட்டது. கச்சேரியில் ஒப்படைக்கப்பட்ட வால்கள் துண்டு துண் டாக நறுக்கிப் புதைக்கப்பட்டன. 1844 டிசெம்பரில் பொது வேலைத் திணைக்களப் பொறுப்பதிகாரி யாயிருந்த திரு. பிரைன் (Bryne) யாழ்ப்பாணத்தில் நீர் வடிகாலமைப்பை மேற்கொள்வதற்கான ஆரம்ப வேலைகளை ஆரம்பித்தார்.

16.11.1846ஆம் திகதியன்று விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் இலங்கையில் அமுலுக்கு வந்தது.

01.10.1848 ஆம் திகதியன்று உவில்லியம் துவை னம் (William twynam) யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்.

04.07.1850 ஆம் திகதியன்று முதலியார் ஆபிரகாம் அரசாங்க அதிபரினால் நொத்தாரிசாக நியமிக்கப்பட்டார்.

1855 ஆம் ஆண்டு நெல் எழுதுவினைஞர் தாவீதுப் பிள்ளை காலமானார். தனது பத்தொன்பதாவது வயதில் ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் நெல் எழுதுநராக (Paddy clerk) நியமனம் பெற்ற இவர் ஆங்கி லேயர் காலத்திலும் தொடர்ந்து பணியாற்றினார். இவர் காலமாகிப் பதினெட்டு வருடங்களின் பின்னர் அரசாங்க அதிபர் துவைனம் இவர் வாழ்ந்து வந்த வீதிக்கு (பிரதான வீதியிலிருந்து கடற்கரை வீதிக்குச் செல்லும் வீதி) டேவிட் வீதி எனப் பெயர் சூட்டினார். இந்த வீதி இப் போதும் டேவிட் வீதி என்றே அழைக்கப்படுகிறது.

1864 மே மாதம் யாழ்ப்பாணக் கச்சேரியில் தோம்பு பராமரிப்பாளராகக் கடமையாற்றிய திரு.யோசேப் காலமானார். இவர் வண் டிச் சூசைப்பிள்ளையர் என அழைக்கப்பட்டார்.

01.01.1866 யாழ்ப்பாணத்தில் பொலிஸ் படை உருவாக்கப்பட்டது.

09.10.1867 அன்று அரசாங்க அதிபர் டைக் காலமா னார். இலங்கை அரசாங்க சேவையில் நாற்பத்தேழு ஆண்டுகள் சேவையாற்றிய இவர் யாழ்ப்பாண மக்க ளுக்கு அளப்பரிய சேவை செய்துள்ளார். இவரது காலத்தில் கடமையாற்றிய சிவில் அதிகாரிகளுள் டைக் முதன்மையானவராகத் திகழ்ந்தார். தற்போது பழைய பூங்கா என அழைக்கப்படும் அரசாங்க அதிப ரின் வாசஸ்தலத்தில் நிற்கும் மரங்கள் யாவும் இவரால் நாட்டப்பட்டவையே. இங்கு நாட்டப்பட்டிருந்த மரங்க ளின் கனிகளைப் பொது மக்கள், அனுமதி பெற்றுப் பிடுங்கிப் புசித்தனர். தற் போது போதனா வைத்திய சாலையாக மாறியுள்ள யாழ். வைத்திய சாலையை ஸ்தாபித்தவர் இவரே.

1850 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலை (Friend in need society hospital) என்ற பெயரில் யாழ். வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்க அதிபர் டைக் தனது வருமானத்தின் பெரும் பகுதியை யாழ். வைத்திய சாலைக் கட்டடப் பணிக ளுக்குச் செலவிட்டார்.**

**தாண்டவன்**

---

# வாழைக்கிழங்கின் நீர் பல ரோக நிவாரணி
# மா வடுவும் மாம்பிசினும் மருத்துவப் பலன் தரும்

**மாமரம்**

**தாவரவியற்பெயர்:** Mangifera indica (மஞ்சிபெரா இண்டிக்கா)

**குடும்பம்:** Anacardiaceae (அனகாடிபேசிபே)

**சிங்களப்பெயர்:** அம்ப

**சமஸ்கிருதப் பெயர்:** ஆம்ர

**ஆங்கிலப்பெயர்:** Mango tree

மா என்றால் பெரியது, பெருமைக்குரியது என்று கருத்து. மா மரம், பெருமரம் என்று கூறப்படாவிட்டாலும் பெருமைக்குரிய ஒரு மரம் என்பதால் மா என்ற அடைமொழியைக் கொண்டுள்ளது போலும். முக்கனிகளிலே மாங்கனி முதலாவதாகக் கூறப்பட்டுள்ளதுடன் மாங்கனிக்காக முருகனுக்கும் பிள்ளையாருக்குமிடையில் ஒரு போட்டியே நடந்துள்ளது. மாவீரனான சூரபத்மன் இறுதியில் மா மரத்தில் மறைந்து நின்றே முருகப் பெருமானுடன் போரிட்டு மடிந்தான். அதனாற்றான் ''சங்கரன் பிள்ளை சட்டியில் மா வறுத்தான்'' என்ற சிலேடை வாக்கியமும் வழக்கிலுள்ளது.

மாங்கனியைத் தவிர மாவிலை, மாஞ்சமித்து, (மாஞ் சுள்ளி) என்பனவும் சைவக் கிரியைகள், சமயச் சடங்குகளில் முக்கிய இடம் வகிக்கின்றன.

மாமரத்தில் பல இனங்கள் காணப்பட்டாலும் அவற்றைக் கனியின் சுவையைப்பொறுத்து இனிப்பு மா, புளி மா என்று இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கலாம்.

மாவிலை, மாம் பட்டை, பூ, பிஞ்சு, காய், பழம், வித்து, பிசின் போன்ற மாமரத்தின் எல்லாப் பாகங்களும் மருத்துவத்தில் பயன்படுகின்றன.

நன்கு பழுத்த மஞ்சள் நிற மாங்கனியில் உயிர்ச்சத்து A யும், C யும் அதிகளவில் உண்டு. அத்துடன் இதன் சதை நார்த்தன்மையானது. எனவே மலச்சிக்கலையும் நீக்கவல்லது. குழந்தைகள் முதல் பெரியவர் வரை இதை உட்கொள்ளலாம்.

பூவிலிருந்து வெளிவரும் ½ - 1 அங்குல நீளமுள்ள பிஞ்சு மாவடு எனப்படும். இதை ஊறுகாய் செய்து சாப்பிட்டு வந்தால் அசீரணம், வயிற்றுப் பொருமல், மலச்சிக்கல் என்பன ஏற்படமாட்டாது. முக்குற்றங்களும் தன்னிலை பெறும்.

மாங்கொட்டையின் உட்பருப்பு மாம்பித்து எனப்படும். இதனுடன் வசம்பு, சுக்கு, வெள்ளுள்ளி என்பவற்றைக் கருக வறுத்து நீர்விட்டுக் காய்ச்சிப் பருகினால் வயிற்றோட்டம், தாகம் தீரும். மாம்வித் துக்குப் பதிலாக மாம்பூ அல்லது மாஞ்சருகையும் பாவிக்கலாம்.

மாமரவேர்ப்பட்டையைக் குடிநீர் செய்து கொடுக்க சீதக்கழிச்சல், வயிற்றுக்கடுப்பு என்பன நீங்கும்

இலையைச் சுட்டுச் சாம்பலாக்கிப் பசுவெண்ணெய் யில் குழைத்து தீப்புண், வேக்காடுகளுக்குப் பூசிவர மாறும்.

இலைக் கொழுந்தை உலர்த்திப் பொடியாக்கி வைத்துக்கொண்டு காலை, மாலை ½ தேக்கரண்டி வீதம் சாப்பிட்டுவர மதுமேகம் தணிவடையும்.

பூவை உலர்த்திக் குடிநீர் செய்து கழிச்சல், நாட் பட்ட சீதக்சழிச்சல் முதலியவற்றுக்குக் கொடுக்கலாம்.

மாம்பிசின் பெரும்பாடு, பித்தவெடிப்பு, தேமல் என்பவற்றை மாற்றும். மாம்பிசினைத் தேசிப் புளிவிட்டரைத்து பித்தவெடிப்புக்கும், தேமலுக்கும் பூசலாம்.

**வாழை**

**வேறு பெயர்:** கதலி, அரம்பை

**தாவரவியற்பெயர்:** Musa sapientum (மியூசா சப்பியன்ரம்)

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

**குடும்பம்:** Musaceae (மியூசேசியே)

**சிங்களப் பெயர்:** கெசல்

**சமஸ்கிருதப்பெயர்:** கதலி

**ஆங்கிலப் பெயர்:** Banana plant

முக்கனிகளில் முதன்மையானது வாழைப்பழமாகும். இதனைக் கதலி என்று கூறுவதாலும், ஆலயங்களில் அர்ச்சகர் இதனை நிவேதனம் பண்ணும்போது கதலீபலம் என்று கூறி நிவேதனம் பண்ணுவதாலும் ஆலயங்களில் அர்ச்சனைக்கு உகந்தது. கதலி வாழைப் பழம் என்று தவறாக எண்ணுகிறார்கள். எந்த வாழைப் பழத்துக்கும் கதலி என்றுதான் பெயர். எனவே, எந்த வாழைப்பழமும் இறைவனுக்குச் சமர்ப்பிக்கப்படக் கூடியதே. வாழைப்பழம் இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படுவதுடன், சிறுவர்முதல் பெரியவர் வரை யாவ ராலும் விரும்பி உண்ணப்படுகின்றது. அதனால் நன் மைகளும் பல கிடைக்கின்றன வாழைப்பழம் எக் காலத் திலும் கிடைக்கக்கூடியது, விலையும் மலிவானது, இனிப்புச்சுவையுள்ளது, கொட்டைகளற்றது, உயிர்ச்சத்து 'C' இதில் உள்ளது, மலச்சிக்கலை நீக்குவ துடன் உடலுக்குச் சக்தியையும் கொடுக்க வல்லது.

வாழையில் பலவகை இருந்தாலும் அவற்றைக் காய்வாழை, பழவாழை என்ற இரு பிரிவுக்குள் அடக்கலாம். பரராசசேகர மன்னன் காலத்தில் கல்வியங்காட்டில் ஒரு மூலிகைத் தோட்டம் அமைக் கப்பட்டிருந்தது. அதில் பலவகை வாழை இனங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. இமயமலையில் இருந்து கொண்டு வரப்பட்ட மருத்துவ வாழையும் அதில் ஒன்றாகும். தற்போதும் இம்மருத்துவ வாழை யாழ்ப்பாணத்தில் காணப்படுகிறது.

தமிழ் மருத்துவத்தில் வாய், தொண்டையில் படாமல் விழுங்கப்பட வேண்டிய சில மருந்துகள் உள. அவற்றை வாழைப்பழத்தினுள் பொதித்துக் கொடுப்பது வழக்கம்.

வாழையின் இலை, பூ, பிஞ்சு, காய், பழம் மடல் கிழங்கு போன்ற பாகங்கள் அனைத்தும் மருத்து வத்தில் பயன்படுகின்றன.

வாழை இலையில் சாப்பிட்டு வந்தால் உடலில் பிணி கள் அணுகாது. அழல் குற்றம் தன்னிலை அடையும்.

வாழைக்குருத்தைத் தீச்சுட்ட புண்களுக்கு வைத்துக் கட்ட புண் விரைவில் ஆறும்.

வாழைப்பூவைச் சமைத்துச் சாப்பிட மலச்சிக்கல், மூலரோகம், மூலக்கடுப்பு என்பன தணியும்.

வாழைப் பூச்சாறு குருதிக் கழிச்சல், வயிற்றுக் கடுப்பு என்பவற்றைப் போக்கும்.

வாழைத் தண்டைக் பாற்கறியாகச் சமைத்து உண்டுவர இரைப்பை குடற்புண் ஆச்சரியப் படத்தக்கவகையில் குணமாகும். உடலும் மெலியும்.

வாழைத் தண்டுச் சாறு சிறுநீரகக் கல்லைக் கரைக்கும். பாம்புக்கடிக்கும் இச்சாறு முதலுதவி மருந்தாகிறது.

வாழைக் கிழங்கை கறிசமைத்து உண்ணலாம். வாழை வெட்டியதும் அதன் வாழைக்கிழங்கின் நடுப்பாகத்தில் குழி ஒன்று செய்துவிட்டால் மறுநாள் அதில் நீர் (சாறு) நிறைந்திருக்கும். நாட்பட்ட வயிற்றோட்டம், இரத்தக் கழிச்சல், வயிற்றுளைவு, சிறுநீர் எரிவு போன்றவற்றுக்கு அச்சாற்றை 1-2 மேசைக் கரண்டியளவில் பருகக் கொடுத்துவர துரிதமாக அவை மாறும்.

பச்சை வாழைமடல் (பட்டை) இயற்கையான ஒரு குளிரூட்டியாகும். பச்சிலைகள், பூ மாலைகள், முருக் கங்காய் போன்றவற்றைச் சில நாள்களுக்குப் பாது காப்பாக வைத்திருக்க வாழை மடல் பயன்படுகிறது.

மருத்துவப் பரிசோதனைகளின்போது எவ்வித குறைபாடுகளும் இல்லாமல் அதே வேளை குழந் தைப் பேறில்லாத தம்பதிகள் இருக்கின்றனர். அவர் கள் செவ்வாழைப்பழத்தைக் கிரமமாகச் சாப்பிட்டு வருவதன் மூலம் குழந்தைப் பேறடையலாம்.

திருமணத்தின் போது மணமக்களுக்குப் பால், பழம் கொடுப்பதன் தாற்பரியமும் தம்பதிகள் இல்லற இன்பத்தையும், குழந்தைப் பேறையும் அடைவதற்குப் புஷ்டியை ஏற்படுத்தும் உணவின் அவசியத்தை வலியுறுத்துவதற்காகவாம்.

வாழைப்பிஞ்சு பத்திய உணவாகப் பயன்படு கிறது. வாழையில் நேத்திர வாழை என்று ஒரு இனமுண்டு. நேத்திரங்காய் என்றும் அதைக் கூறுவர். இவ் வாழைக்கா யைப் பொரியல் செய்து உண்பதன் மூலம் உடலுக்கு புஷ்டியும் வலுவும் உண்டாகும். குழந்தைகளுக்கு இது மிகவும் ஏற்றது. இவ்வாழைக் காயைச் சிறு துண்டுகளாக வெட்டி, காயவைத்து, மாவாக்கியும் உணவுடன் சமைத்து உண்ணலாம். **(வளரும்)**



**Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YMCA JAFFNA

## Talent Search 2010 — Western Music

Sponsor: National Council of the Y.M.C.As of Sri Lanka
Organized by: Y.M.C.A, Jaffna

Calling for applications for a Western Music Talent Search under the following categories:

- **Vocal (Individual)**
- **Instrumental Individual (Individual)**
- **Group Vocal**
- **Group Instrumental**

Age Categories are as follows:

1. Primary — Date of Birth : On or after 31st December, 2003
2. Junior - On or after 31st December, 1998
3. Intermediate On or after 31st December, 1993
4. Senior - On or after 31st December, 1988

**Application Form should contain:** Full name/Date of Birth/Address/Category/School/Telephone

**Applications close:** Wednesday 25th August, 2010, 5.00 p.m. **Semi finals:** September 10th, 2010

**Entries should be sent to:**
The Coordinator, Western Music Talent Search 2010
Uduvil Girls' College,
Uduvil, Chunnakam.

## முதலாவது பிறந்ததின வாழ்த்துக்கள்




திரு. திருமதி தாசன் - றோகினி(ஜெயா) தம்பதியரின் செல்வப்புதல்வி ஜீவனா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை யாழ்ப்பாணத்திலுள்ள அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, நிக்சன் மாமா, குடும்பத்தினர் (நோர்வே), மதன் மெதா சித்தி குடும்பத்தினர் (லண்டன்), கொயன்ஸ்- வதனா சித்தி குடும்பத்தினர் (பிரான்ஸ்), ஜீவொளி மாமி(ஜேர்மன்), பகலவன் தொட்டப்பா(பிரான்ஸ்), யூடி மாமா(நோர்வே) யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், அண்ணன்மார், மச்சாள் இந்தியாவில் வசிக்கும் மாமிமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியம்மா, அண்ணன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஜீவனாவை மாதாவின் ஆசீருடன் சீரும், சிறப்புடனும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

இல.82, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3693

**சவிரியான் தங்கறாஜர் (தாத்தா)**

வேலை வாய்ப்புக்கள்

**Browns Group of Companies**

# நேர்முகப் பரீட்சை

### பெட்டரி பிரிவு (Battery Division)

பிரவுண்ஸ் நிறுவனத்தின் ஓர் அங்கமான பெட்டரி பிரிவு வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான பெட்டரிகளை சந்தைப்படுத்தலில் இலங்கையில் முன்னணித்துவம் வகிக்கும் ஓர் விற்பனைக் குறி ஆகும். அதன் உயர் தரத்தினாலும் புதிய உற்பத்திகள் மற்றும் அதன் செயற்திறனாலும் தனது வாடிக்கையாளர்கள் மத்தியில் இன்று வரை உயர் ஸ்தானத்தை கொண்டு அமைந்துள்ளது

#### பெற் மொபைல் நிபுணர்கள் (Bat Mobile Technician)

விண்ணப்பதாரிகள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்

முச்சக்கர வாகன சாரதி அனுமதி பத்திரத்தை கொண்டவராகவும் குறைந்தது 8ம் தரம் வரை கல்வி தகைமை கொண்டவராகவும் வாகன பழுது பார்த்தல் மற்றும் வாகனங்கள் செயற்திறன் தொடர்பான தொழல்நுட்ப அறிவு கொண்டவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

### அக்ரோ ரீட்டெயில் பிரிவு (Agro Retail Division)

பிரவுண்ஸின் ஓர் பிரிவான அக்ரோ ரீட்டெயில் ஆனது உழவியந்திரங்கள் , கணனிகள், ஜெனரேட்டர்கள், மின் ஆயுதங்கள் (Power tools), கமராக்கள், நீர் பம்பிகள், குளிருட்டிகள் (AC), மின் விசிறிகள் (Ceiling fans), சமையலறைச் சாதனங்கள் மற்றும் பல கருவிகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளும் விதமாக அமைந்துள்ள ஒரே இடம்.

#### உதிரிப்பாகங்கள் தொடர்பான அதிகாரிகள் (Spare part Executive)

வாகன உதிரிப்பாகங்களை விஸ்தரிப்பதன் ஓர் ஆரம்பமாக விவசாயப் பிரிவு நிறைவேற்று அதிகாரி (Agro Division Executive) வட பிராந்தியத்தில் சேவையாற்ற தகுந்த நபர்களை எதிர்பார்கிறார்கள். விண்ணப்பதாரிகள் க.போ.த. உயர்தர கல்வி தகைமை கொண்டவராகவும் இத் தொழிற்றுறையில் குறைந்தது 2 வருடம் முன் அனுபவம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

### விவசாயப் பிரிவு (Agriculture Division)

விவசாயப் பிரிவு உறுதியானதும் பூரணமானதுமான விற்பனைக்குறிகள் தொடர்பான ஒரு மாதிரியை தனக்கென வகுத்துள்ளது. இங்கிலாந்தின் Massey Ferguson மற்றும் இந்தியாவின் TAFE மிகவும் முக்கியமான விற்பனைக் குறிகளாக அங்கம் வகிக்கின்றன. இவை இரண்டும் சர்வதேச தொழில்நுட்ப தேர்ச்சியுடனும் நம்பகத்தன்மையுடனான உள்நாட்டு சேவையினை வழங்குவதினூடாகவும் சிறந்த தரத்தையும் நீடித்த உழைப்பையும் உறுதி செய்கின்றன.

#### உழவியந்திர நிபுணர்கள் (Technicians for Tractors)

விண்ணப்பதாரி 35 வயதிற்குற்பட்பட்டவராக இருத்தல் அவசியம். உழவுயந்திரம் (Tractors) தொடர்பான பழதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு அநுபவம் (2 வருடங்கள்) முக்கியமாக எதிர்பார்க்கப்படுகின்றது. விஞ்ஞான தொழிநுட்ப டிப்ளோமா அல்லது அது சம்பந்தமான ஏதாவது தகைமைகளைக் கொண்டிருத்தல் மேலதிக அநுகூலமாகும்.

### பிரவுண்ஸ் குருப் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டட் Browns Group Industries Ltd.

பிரவுண்ஸ் குருப் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டட் ஆனது நான்கு உப பிரிவுகளை உள்ளடக்கியது. உப பிரிவுகளில் ஒன்றான கடல்சார் என்ஜின்கள் (Marine Engines) உலக பிரசித்தி பெற்ற YANMAR பண்டக் குறியினை சந்தைப்படுத்துகின்றது. Boiler பிரிவு இங்கிலாந்தின் Cochran Boilers இனை சந்தைப்படுத்துகின்றது. கடல்சார் உதிரிப் பாகங்களை கடல்சார் என்ஜின்களுக்காக சந்தைப்படுத்துகின்றது. கடல்சார் பயன்பாடுகளுக்கு உதாரணமாக Propellers,Stern arrangements, Heat Exchangers மற்றும் Sea Water Pumps இனை குறிப்பிடலாம். ரேடியேட்டர் பிரிவு SLSதரச் சான்றிதழுடன் கூடிய தானியங்கி மற்றும் தானியங்கி அல்லாத ரேடியேட்டர்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகின்றது.

#### விற்பனை மேம்படுத்தும் உத்தியோகஸ்தர் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்) (Business Promotion Officers - Marine) North –East

இப்பதவி வெற்றிடத்திற்கு பொருத்தமான விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரணதர தகுதியும் விற்பனைப் பிரிவில் இரண்டு அல்லது மூன்று வருட அநுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். மும் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிக தகமையாகும். கடல்சார் என்ஜின்கள் தொடர்பான அடிப்படை தொழிநுட்ப அறிவை கொண்டிருப்பதும் தமிழ் பேசும் ஆற்றலைப் பெற்றிருப்பதும் மேலதிக தகமையாக கருதப்படும்.

விண்ணப்பதாரியின் வயது 35ற்கு குறைந்தவராகவும் வாடிக்கையாளர்களுடன் பேசும் ஆற்றல் மற்றும் கடின உழைப்பாளியாகவும் குறித்த விற்பனை இலக்குகளை அடையக்கூடியவராகவும், உட்தகமை (inter personality) மற்றும் தனித்தகைமைகளை (Public Relations Skills)கொண்டிருப்பதும் எதிர் பார்க்கப்படுகிறது.

வேலையின் விவரங்கள் (Job Profile)

- கடல்சார் என்ஜின்கள், கடல்சார் உதரிப்பாகங்கள் தொடர்பான விற்பனை மற்றும் குறித்த விற்பனை இலக்குகளை அடைதல்.
- வாடிக்கையாளர்களை நேரடியாகச்சென்று சந்தித்தல

வியாபார முகர்வர்களிடம் போய் அவர்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் அதற்கான போக்குவரத்து வசதிகளை ஒழுங்குசெய்தல்.

கண்காணிப்பு மற்றும் வியாபார முகர்வர்களின் நிலுவையினை வசூலித்தல்

- வருவாயினை அதிகரிப்பதற்கு வியாபார மேம்படுத்துலுக்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்

**திகதி : 18 ஆகஸ்ட் 2010**
**நேரம் : 2.30 - 5.30 பி.ப**
**முகவரி : நியூ பஸ்டியன் ஹோட்டேல், இல. 11 கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

**Browns**

SHARP OLYMPUS USHA LEXUS makita EXIDE MASSEY FERGUSON TAFE Eukanuba Browns tours COCHRAN YANMAR marine

### விற்பனைக்கு

52-xxxx இலக்கமுடைய டபிள் கப் இசுசு கன்ரர் வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: பிரகாஸ் எலக்ரோனிக்ஸ் பருத்தித்துறை. 077 3222837

### இறைச்சிக் கோழிகள் விற்பனை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1Kg 450/= கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

**விஜயகுமார்**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

### மாங்கல்யா திருமண சேவை

24 வருஷமாக திருப்தியான, நம்பிக்கையான, துரிதமான, சேவை நடப்பதை என்னுடன் தொடர்பு வைத்திருப்பவர்கள் நன்கு அறிவர். கவலைப்பட்டு அலைந்து திரிந்தும், மனதிற்கேற்ற, சாதகங்கள் கிடைக்கவில்லை யென்று கவலைப்படாமல் தொடர்புகொள்ளவும். சகல நாள்களிலும் 1 மணிக்குபின் தொடர்பு கொள்ளலாம். T.P:021-222-6043லொ/இல.0771386846குதிருசிளங்கம், 90 ,சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர் வடக்கு.

### வேலை வாய்ப்பு

கோப்பாயில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட Innovage கிளை நிறுவனத்திற்கு Marketing Management, Business Management, Peoples Managements ஆகிய துறைகளுக்கு பயிற்சியாளர்கள் தேவை. ஏனைய விடயங்கள் நேரில் பேசித் தீர்க்கப்படும். மற்றும் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0214922177, 0775566224

### மணமக்கள் தேவை

சைவசமயம், படித்த பரம்பரை, கௌரவமான குடும்பம்ஆண்-ரோகிணி, பாவம்குறைந்தஉதயத்தில் செவ்வாய், 66ஆம் ஆண்டு அரசஉயர்பதவி.
பெண் - மகம், 7 இல் சனி, பாவம் குறைந்தவர், 72 ஆம் ஆண்டு, அரச தொழில் சம குடும்பத்தில் துணை தேடுகின்றனர்.
தொடர்பு: 0212263907, 0776161750

### ஜேர்மன் வகுப்பு

German டொச், சுவிஸ் மொழி வகுப்புகள் German கோதே பரீட்சைக்கான Full Course தொடர்பு: T.P:0778245031

### G.C.E (A/L) 2011 Exam

Exam Guide For BIOLOGY, BACK-UP CLASSES for CHEMISTRY (English Medium) Call Vidya Dial 0777730838, 0717730838 (Jaffna / Vadamarachy)

### புதிய வீடு விற்பனைக்குண்டு

இருபாலைச் சந்தியில் புதிதாக சீர் அமைத்த வீடு மேல்மாடி, கீழ்மாடியில் 5 அறைகள் 1 அலுவலக அறை, 2 குசினிகள், 2 ஹோல்கள், குளியல் அறை, கிணறு, தண்ணீர்தாங்கி கிழக்குப்பக்கம் றோட், மேற்குப்பக்கம் றோட் உள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டியது:
0779239355 (ரகுநாதன்),
0213219747 (101864)

### புறொயிலர் விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்யப்படும் புறொயிலர் கிலோ 480/= ஈட்டுநர். திங்கள், புதன், சனி, ஞாயிறு பி.ப. 1மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
குமரன் பாம்,227, பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

### தேவை

தையல் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு: 25, புகையிரத நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொ.பே. 021 2223485 (101995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலாயிரம் கண்படைத்திலனே அந்த நான்முகனே

**நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் இவ்வாண்டுக்கான பெருந்திருவிழா இன்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

நானிலம் போற்றும் நற்பதியாம் நல்லைக் கந்தன் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. சைவத் தமிழ் மக்கள் யாவரும் தேசிய விழாவாக ஏற்றிப் போற்றிடும் சிறப்புமிகுவிழா. நாவலர் வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் பணிசெய்த மண்ணில், நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் சீரிய பணியாற்றும் சிறப்புப் பொருந்தியதும் செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் முதலான சித்தர்களால் ஆன்மிகநெறி வளர்த்த பூமியில் தமிழ் மன்னன் இரண்டாம் புவனேகபாகுவால் தமிழர் தம் கலை, கலாசாரம் நிலவிட எடுக்கப்பட்ட ஆலயம் நல்லைக்கந்தன் ஆலயம். இதற்கு வரலாறு சான்று பகருகின்றது.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன். ஒளியினின்று உருவாகி காற்றினாலே எடுக்கப்பட்டு மண் தொடர்பான நீரிலே தவழ்ந்து கார்த்திகைப் பெண்களால் இணைக்கப்பட்டவன் முருகன். எனவே அவன் இயற்கைத் தெய்வமாகின்றான்.

ஈழத்திலே மாவிட்டபுரம், செல்வச் சந்நிதி, கந்தவனக் கடவை, கதிர்காமம் போன்ற கோட்டங்களில் கந்தக் கடவுள் எழுந்தருளியுள்ளதைக் காணலாம்.

இத்தகைய பூர்வீக ஆலயங்கள் நமது பாரம்பரிய விழுமியங்கள், கலை,கலாசாரங்களுக்கு என்றும் நிலைக்களனாகின்றன. அவற்றைப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு சைவத்தமிழ் மகனது கடமையாகும்.

நல்லைக்கந்தன் ஆலயத்தில் இச்சா சக்தி, கிரியாசக்தியாகிய வள்ளிதேவசேனையுடன் கூடிய ஞானசக்தியாகிய வேற்பெருமான் மூலமூர்த்தியாக விளங்குகின்றான். அங்கு நடைபெறும் நித்திய, நைமித்திய கிரியைகள் யாவும் குமாரதந்திர ஆகமத்துக்கு வரைவாக கடமை கண்ணியம், கட்டுப்பாடு தவறாது நடைபெறுவதைக் காணலாம்.

இது நம் வாழ்வியலுக்கு எடுக்காட்டாகின்றது.

நமது வாழ்வின் செயல்கள் யாவும் தூய்மையுடன், கடமையுணர்வு, கட்டுப்பாட்டுடன் திகழவேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது.

ஆலயத்தின் மஹோற்சவத்தின் இருபத்து ஐந்து நாள்களும் ஞானமே உருவாகிய நிமலன் முருகன் தன் அருட்கோலங்கள் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

*" மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு*
*மேலான தேவனை மெய்ஞான தெய்வத்தை மேதினியில்*
*சீலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டு தொழ*
*நாலாயிரம் கண் படைத்திலனே"* என வர்ணிக்கிறார் அருணகிரிப்பெருமான்.

இறைவனை வண்ண அலங்காரத்தை தரிசிக்கும் போது மனம் அமைதி அடைகின்றது. ஆலய மணி ஓசை பிரணவத்தை ஒலிக்கின்றது. மங்கள வாத்தியங்கள் கலை ஞானத்தை உருவாக்கின்றன.

தஞ்சமளிக்கும் மஞ்சக்காட்சி, ஆர்த்திகள் நீக்கும் கார்த்திகை உற்சவம், குகனும் சிவனும் வேறல்லர் என்பதை உணர்த்தும் கைலயங்கிரிக் காட்சி, சப்பர உற்சவம், முப்புரம் செற்ற சித்திர இரதோற்சவம், தீர்த்தவாரிதி என்பன சிறப்பானவை. இறைவனின் ஆடல்களை தத்ரூபமாக ஆகம விதி தவறாது பதவனையாக எடுத்துக் காட்டுவதே உற்சவங்கள். இறைவன் ஆடல்களை

*" கலங்கலம் புனலில் தோன்றி அலைப்படுதன்மைத்தன்றோஆறுமுகன்ஆடல்"* என கந்தபுராணம் எடுத்துக் காட்டுகின்றது.

ஆகவே கலியுகவரதனாக விளங்கும் கந்தப்பெருமானை மக்கள் யாவரும் எவ்வித பேதமுமின்றி தவறாது சிந்தனை செய்து நமது கலை கலாசாரம் பண்பாடுகள் சாந்தி, சமாதானம் நிலவிட வழிபாடாற்றி இறையருள் பெற்று வாழ்வோமாக.

**சிவஸ்ரீசோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்**
கோப்பாய்



# நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

## உருகாதோ உனது உள்ளம்

அப்பன் சிவனாரோ அம்பலத்தில் ஆடுகிறான்
ஒப்பரிய நின்மாமன் உறி தேடி அலைகின்றான்
செப்பரிய அண்ணனோ செயலிழந்தான் உடல் பெருத்து
தப்பாது எமைக்காத்த தாயாளும் எமை மறந்தாள்
இப்போது எமக்கிங்கு எவருமினி துணையில்லை
எப்போதும் உனைத்தொழுது எய்தியதோ எதுவுமில்லை
முப்போதுமுனைத் தொழுதோர் முடிவதனை அறிவாய் நீ
தப்பாது கொடியேற தயாபரனே நீ மகிழ
மெத்தமகிழ்ந்திடுவர் வள்ளி தெய்வயானை இவர்
எப்போதும் உன்னருகில் இருந்த அந்த சிவஞானி
சித்தன் சிவ - யோகி செப்பியதைச் செப்புகிறேன்
எப்போ முடிந்துவிட்ட காரியங்கள் இவையெல்லாம்
எல்லாமே நன்மைக்கே ஏதுமில்லை தீங்கென்றான்
விதித்த விதிப்படியே விளையாட்டு நடக்குதென்றால்
எத்தனை கொடியேறியென்ன எங்கள் நிலை மாறிடுமோ
உத்தமனே இதை உணர்ந்தால் உருகாதோஉனது உள்ளம்

- விகடகவி -

## அஞ்சாதீர் என்றே அருள்

கந்தா வுனைநினைந்து கைதொழு தேத்துமெங்கள்
சிந்தா குலத்தை நீ தீர்த்தருள்வாய் - நொந்துமிக
ஓடி அலைந்துலைந் துன்பாதம் தஞ்சமென
நாடித் தலமடைந்தோம் நாம்

நலிந்து நடைப்பிணமாய் நாதியற்று வாழ்வோர்
மலிந்து கிடக்கின்றா ரெம்மண்ணில் - பொலிந்தோங்கு
மஞ்ஞைமே லூர்பவனே மால்மருகா அன்னவரை
அஞ்சாதீ ரென்றே அருள்

சி.வெற்றிவேல்,
வட்டுக்கோட்டை.

# மனித உடலின் மாண்பை வலியுறுத்தும் மரியன்னையின் விண்ணேற்பு

**இன்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை மடுமாதா திருப்பதியின் பெருவிழா கொண்டாடப்படுகிறது. இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர் கள் இன, மத பேதமின்றி இதில் கலந்து கொள்கின்றனர். அதனையொட்டி இக்கட்டு பிரசுரமாகிறது.**



ஆவணி 15 அனைத்துலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் மிகவும் மகிழ்வோடும் நம்பிக்கையோடும் எதிர்கொள்ளும் திருவிழா. அன்னை மரியின் விண்ணேற்புப் பெருவிழா. உலகெங்கும் உள்ள அன்னை மரிக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்களில் மட்டுமல்லாது அனைத்துக் கத்தோலிக்கத் தேவாலயங்களிலும் இந்நாளில் பக்தர்கள் கூடி இறைவனுக்கு நன்றியும் அன்னைக்குப் புகழும் சாற்றுவர். எமது நாட்டில் சிறப்பாக இந்த நாளில் மருதமடு அன்னையின் திருத்தலம் நாடிச் செல்லும் பக்தர்கள் இறைபுகழ் பாடுவர். இலங்கை மக்களின் நெஞ்சோடு நெருக்கமான மடு அன்னையின் திருப்பதி இன்று விழாக்கோலம் பூண்டிருக்கும்.

**விண்ணேற்பு என்றால்....**

இறையருள் நிழலிடப் பெற்று ஆண்டவர் இயேசுவைத் தனது உதிரத்திலே தாங்கிய அன்னை மரி "இதோ ஆண்டவருடைய அடிமை" என்ற மனநிலையோடு தனது வாழ்வு முழுவதையுமே அருள்நிலையில் கழித்தாள். தனது மகன் இயேசுவினுடைய இறையாட்சிப் பயணத்திலே அவரோடு பயணித்து அதன் பயனாக அவருடைய பாடுகள், மரணம்,உயிர்ப்பு என்றும் மீட்புச் செயற்பாட்டிலும் பங்குபற்றினாள். இவ்வாறு அவள் தனது வாழ்வால் தக்கவைத்த அருள் நிலையின் பயனாக அவரது மரணத்தின் பின் தனது உடலோடும், ஆன்மா வோடும் ஆண்டவர் இயேசுவின் வழியில் புத்துருப் பெற்ற மானிடப் பெண்ணாக விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்டாள். கிறிஸ்தவ நம்பிக்கையின்படி முதல் முறையாக ஆண்டவர் இயேசுவினுடைய உடலின் உயிர்ப்பிலும், விண்ணேற்றத்திலும் மனித உடல் மாண்பு பெற்றது என்றால் இரண்டாம் முறையாக அன்னை மரியின் விண்ணேற்பில் அது மாண்பு பெறுகிறது. " முதற்கனியாக கிறிஸ்து உயிர் பெற்றார். பின்பு அவரைச் சார்ந்தவர்கள் உயிர் பெறுவர்" என்ற பவுல் அடிகளாரின் கூற்று அன்னை மரி விடயத்தில்தான் முதலில் நடந்தேறியதாக கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

**மனித உடலின் மாண்பு**

கிறிஸ்தவ நம்பிக் கையின்படி மனித உடல் மாண்புமிக்கது. இது இறைவனால் படைக்கப்பட்டது என்பதற்காக மட்டு மல்ல இறைவனே மனிதனாக வந்து மனித உடலை ஏற்றார் என்பதனாலே அது உயர்ந்த பட்ச மாண்படைகின்றது. பாடுகளினூடு மரணம் மட்டும் உடலின் வேதனைகளை இறைவனே அனுபவித்தார் என்பதனாலே மனித உடலின் ஒவ்வொரு அணுவும் மாண்பு பெறுகிறது. ஆகவே மனித உடல் உயர்ந்த பட்ச மாண்போடு பேணப்படுவது அவசியமாகிறது. உடலைச் சுத்தமாகப் பேணுவது, ஆரோக்கியமான உணவு வகைகளை உட்கொண்டு அதனைப் பராமரிப்பது, நோயேற்படும் போது உரிய மருத்துவ வசதிகளைப் பெற்றுக் குணமாக்கிக்கொள்வது என்பவை அடிப்படை மனித கடமைகளாக மட்டுமல்லாமல் கிறிஸ்தவ கடமைகளாகவும் கொள் ளப்படுகின்றது.

ஒருவர் தன்னுடைய உடலை மாண்போடு பேணுவது மட்டுமல்ல மற்ற வரின் உடலையும் மாண்போடு பேண வேண்டியவர்களாக இருக்கின்றார். ஏனென்னில் அதுவும் இறையம்சம் பொருந்திய உடலாகவே இருக்கின்றது. ஆகவே மற்றவரின் உடலைத் துன்புறுத்துவது, அவமதிப்பது, சித்திரவதைப் படுத்துவது, துஷ்பிரயோகம் செய்வது போன்றவை மனித உடலின் மாண்புக்கெதிரான செயற்பாடுகளாகும். இன்னும் இறந்து போன மனித உடலும் அவ்வுடல் புதைக்கப்படும் கல்லறை களும் கூட புனிதமானதாகவே கருதப்படுகின்றன. அதனால்தான் மரித்த உடலை ஆலயங்களுக்குள் எடுத்துச் சென்று ஆசீர்வதிப்பது,சகல மரியாதைகளோடும் அடக்கம் செய்வது, அவ்வாறு அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகளை கல்லறைத் தோட்டம் என பெயர் சூட்டி தூய்மையாகப் பராமரிப்பது, அங்கு சிற்றாலயங்களை அமைத்து புனிதமான இடமாக அவற்றைப் பேணுவது போன்ற செயற்பாடுகளை கிறிஸ்தவர்கள் மேற்கொள்ளுகின்றனர். இவை அனைத்தும் உடல் உயிர்ப்புக்கானது. தெய் வாம்சம் பொருந்தியது என்ற கிறிஸ்தவ நம்பிக்கையிலிருந்து தான் ஊற்றெடுக்கின்றது. அன்னை மரியின் விண்ணேற்பு தமது உடல் மட்டிலான நம்பிக்கை களின் ஓர் ஆதாரம் என்றே கிறிஸ்தவர்கள் கருது கின்றனர்.

**இன்றைய இழிநிலை**

மரியாவின் விண்ணேற்பின் பின்னணியில் மனித மாண்பினைப் பற்றிச் சிந்திக்கும் இவ்வேளையில் மனித உடல் இன்று படும் பாடு ஏக்கப் பெருமூச்சை வரவழைக்கின்றது. கடந்த முப்பதாண்டுகளாக நீடித்த போர்ச் சூழலில் மனித உடல்கள் அனுபவிக்க நேர்ந்த அவமானத்தை நாங்கள் சொல்லில் வடிக்க முடியாது. மனித உடல் ஓர் இழி பொருளாகக் கருதி துன்பத்துக்குக்கும் அவமானத்திற்கும் உள்ளாக் கப்படும் பின்னணியில் மரியன்னை யின் விண்ணேற்பு விழா ஓர் அவசர அழைப்பை விடுக்கிறது. மனித உடலின் மாண்பைப் பேண முன்வாருங்கள் என்பதே அதுவாகும்.

போர்ச் சூழல் மனித உடலுக்கு விளைவிக்கும் அவமானங்களுக்குப் புறம்பே இன்றைய நவீன நுகர்வுக்கு கலாசாரமும் மனித உடலின் மாண்பைச் சிதைக்கின்றது. உடலைச் சிற்றின்பங்களுக்கும் சுகபோகங்களுக்கும் வாசலாகக் கருதி அதன் அருள் நிலையை, தெய்வாம்சத்தைச் சீரழிக்கின்றது.ஒரு பெண்ணான மரியாளின் உடல் மாண்பு பெற்றதை நினைவு கூரும் இந்நாளில் பெண்களின் உடலின் மாண்பு பற்றி எமது கருத்துக்களையும் மீளாய்வு செய்வது அவசியமாகும்.

மொத்தத்தில் அன்னை மரியாள் உடலோடு விண்ணகம் சென்றாள் என்று இந்நாளில் போற்றி மகிழும் நாங்கள் அதன் மூலம் மனித உடலுக்குக் கிட்டிய மாண்பை ஒரு தடவை எண்ணிப் பார்ப்போம். அந்த மாண்பை உயர்த்த எம்மாலான முயற்சி எடுக்க உறுதி பூணுவோம்.

அருள்பணி
**ம.வி.இ. இரவிச்சந்திரன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு, காணி விற்பனைக்கு

கண்டி வீதி, நுணாவில் சந்தி, வீரக்கொடியார் ஒழுங்கையில் நல்ல சூழலில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய ஆறு (6) அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0214910794,0777462040

## பராமரிப்பாளர் தேவை

வுயதான தம்பதியரை பெற்றோராகப் பேணி, வீட்டோடு நிரந்தரமாகத் தங்கியிருந்து, சகல பொறுப்புக்களையும் நிர்வகித்து அர்ப்பணிப்போடு பராமரிக்கக்கூடிய 30-40 வயதுக்கு இடைப்பட்ட, ஓரளவு படித்த, ஆதரவற்று அனாதையாக வாழும் பெண் தேவை. தகுதியானவருக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். (கணனி அறிவிருப்பின் பகுதி நேரமாக தொழிலாற்றவும் வசதியமைத்துத் தரப்படும்) பணி நிறைவாக முடிவுறும் போது பிற்கால வாழ்வுக்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்படும். கண்ணியமான இரு சமூகப் பெரியார்களின் சிபாரிசுக் கடிதம் அவசியம். தொடர்பு கொள்க.

தொலைபேசி- 0775296290 (101746) இல. 50, 3ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

## மலிவு விற்பனை

அன்ரனா வயர் (RG 6 ) 100 Yards



Rs 900/=

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்

இல 114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021-2223857

எமது நிறுவனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.

## ஆளணி தேவை

வவுனியாவில் பிரபல புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள வேலையாள்கள் (ஆண்கள் மட்டும்) தேவை. சிங்கள மொழி கதைத்தல் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0726385295

## வீடுகள் விற்பனைக்குண்டு

சுண்டுக்குழிப் பகுதியில் வீடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0772492268, 004531313529

## அறைகள் வாடகைக்கு

நல்லூர் திருவிழாவில் கலந்து கொள்ளும் அடியார்களுக்கு அறைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 0777 412324

(நல்லூர் மேற்கு வீதியில்)

## 'மாபிள்' பதித்தல்; விசேட பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.15

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை இலவசமாக 'மாபிள்' பதித்தலுக்கான விசேட தொழில்நுட்ப பயிற்சியை எதிர் வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் வழங்கவுள்ளது என்று யாழ்.மாவட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

பயிற்சி தொடர்பான மேலதிக விவரங்களை 375,கே. கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-323)

## இறுவட்டு வெளியீட்டு விழா

நவாலி,ஓக.15

பல்கலைச் செம்மல் என்.பி.சிவநேசனின் பிஞ்சு நிலாக்கள் சிறுவர் பாடல் நூல் புதிய மலர்கள் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையில் நூலாசிரியர் தலைமையில் நடைபெறவுள்ளது. (201-100)

## USB Dongle (modem) Unlock



(ஒரு வருட உத்தரவாதம்)
சகல வகையான வலையமைப்பிற்கும் பொருத்தமானது

HSDPA/UMTS 2100 MHz
EDGE/GPRS/GSM 1900/ 1800/900/850 MHz
HSDPA data transfer Speed up to 3.6 Mbps
USB intertace
installs automatically and easy to use
Micro SD Memory Cord solt

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு

தொடர்புகளுக்கு: 0777588128

## வசீகரத் தோற்றத்திற்கு! சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடை தலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் வீசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.

சந்தனாலேப

'சிவா நறுமணப் பூங்கா'

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SANJEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பண்ணையின் அபிவிருத்திக்கு நிதி உதவி செய்த எமது பாரம்பரிய சிறுகைத்தொழில் துறை மாண்புமிகு அமைச்சர் கௌரவ

K.N.டக்ளஸ் தேவானந்தா

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.அவரது சேவை நீண்டகாலம் தொடர வாழ்த்துகின்றோம்.

நிர்வாகத்தினர்.
அல்லாரைக்கிராம உற்பத்திக்குழு,
(அல்லாரைக் கிராம உற்பத்திப் பண்ணை).

## பாதுகாப்புச் சேவை

அரச, தனியார் வங்கிகளுக்கான பாதுகாப்புச் சேவைகளுக்கு எமது நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மதவாச்சி பகுதிகளிலிருந்து ஆள்சேர்ப்பு (ஆண்) மேற்கொள்ளப்படுவதால் விரும்பியவர்கள் எதிர்வரும் 16,17,18ஆம் திகதிகளில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 4 மணிக்கும் இடையில் பின்வரும் காரியாலயங்களில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்த ஆவணங்களுடன் சமூகமளிக்கவும். பாதுகாப்புப் படைப் (பொலிஸ், இராணுவம்) பிரிவில் இருந்து விலகியவர்கள், சிங்கள மொழி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வயதெல்லை - 18இல் இருந்து 55 வரை.

AB பாதுகாப்புச்சேவை
இல.357,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சிவன் கோயில் அருகில்)
0718739573

ஸ்ரீபாரபெயிந்த
பௌத்த மத்தியஸ்தானம்,
மதவாச்சி.

(101990)

## தெய்வீக இசை அரங்கின் சிறப்பு நிகழ்ச்சி



யாழ்.புங்குடுதீவு கிழக்கு கலட்டி வரசித்தி விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் - ஸ்ரீமதி விஜயலட்சுமி அம்மாளின் பேரனும் கிருஷ்ணராஜக் குருக்கள் - ஸ்ரீமதி ஜானகி அம்மாவின் கனிஷ்ட புத்திரனும் ஈழத்து இன்னிசை மேதை சங்கீத பூஷணம் பொன்.சுந்தரலிங்கத்தின் பிரதம சீடனும் கனடா இளங் கலைஞர் மன்றத்தின் முதல் மாணவனுமான

### ரமணசர்மாவின் இன்னிசை நிகழ்வு

நல்லூர் கந்தன் கொடியேற்ற நாளான இன்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும். மேலும் இந்நிகழ்வுக்கு அணிசேர் கலைஞர்களாக

- ★ வயலின் எஸ்.கோபிதாஸ்
- ★ மிருதங்கம் கே.கஜன்
- ★ கஞ்சிரா ஆர். சிவராமன்
- ★ மோர்சிங் கே.நந்தகுமார்

ஆகியோரும் பங்குபற்றுகின்றனர். இவர் மென் மேலும் பல இன்னிசை நிகழ்வுகளை நடத்தி சிறப்படைய இறைவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினரும்
புங்குடுதீவு கலட்டி வாழ் மக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு, பலாலி றோட்டிலிருந்து 50 யார் தொலைவில் 2ஆவது காணி, 6 பரப்பு நவீன வசதிகள் கொண்ட, 2,000 சதுர அடிக்கு மேற்பட்டது, சுற்றுமதிலுடன், கராஜ், கொட்டில் வசதிகளுடன் கூடிய வீடு, வளவு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0776522098
0775099332, 0214921490 (இ/569793)

## தேவை

சாரதி மற்றும் வேலையாள்கள் தேவை.

சிவா பிறதர்ஸ்

205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

நீர்வேலி காமாட்சி அம்பாள் சங்கத்திலிருந்து கிழக்குப் பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் வடக்குப் பக்கமாக உள்ள ஒழுங்கையில் 200 மீற்றர் தூரத்தில் வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். கூடிய விலை கேட்போருக்கு உடனடியாக விற்கப்படும். தொடர்பு: 021 3002248

## அறைவாடகைக்குத் தேவை

யாழ்.நகருக்கு அண்டியபகுதியில் Medical Rep. ஒருவர் தங்குவதற்கு சகல வசதிகளும் கொண்ட அறை மாத வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 9328895 (102020)

## விற்பனைக்குண்டு

சொந்தத் தேவைக்குச் செய்த 15 கட்டில்கள் (Single) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 7568685 (102016)

## விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, தாவடியில் சகல வசதிகளையும் உடைய புதிய கடையுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ.இரத்தினசிங்கம் தொ.பே.: 077 4617190 (101996)

![ICDL] International Computer Driving Licence

**Get an International Recognized Qualification in Information Technology**

# INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE

Special offer for A/L 2010 Students

Total Fee Rs.16800/= Special Offer Fee Rs.10000/=

**ICDL 7 Modules**

- Concept of Information Technology
- Using the Computer & Managing Files
- World Processing MS Word
- Spreadsheet MS Excel
- Database MS Access
- Presentation MS Power Point
- Information and Communication



Approved Test Centre

GATEWAY ICT

*Duration: 4 Months*

**GATEWAY LANGUAGE & ICT CENTRE JAFFNA**
*347, Kasthuriyar Road, Jaffna*
021 222 7967
021 567 5555
gatewayjfn@sltnet.lk

## ரஷ்ய போர்க் கப்பல் கொழும்பு வந்தது

கொழும்பு, ஓக. 14

ரஷ்ய யுத்தக்கப்பல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்புத்துறைமுகத்திற்கு வந்துள்ளது.

இந்தக் கப்பலை இலங்கைக் கடற்படையினர் வரவேற்றுள்ளனர் என கடற்படைப் பேச்சாளர் கப்டன் அதுல செனரத் தெரிவித்துள்ளார்.

மொஸ்வா என்ற பெயரைக் கொண்ட இந்தக் கப்பல் மத்திய தரை மற்றும் கருங்கடல் பகுதிகளில் சேவையாற்றும் கப்பலாகும்.

186 அடி நீளத்தைக் கொண்ட இந்தக் கப்பலில் 51 அதிகாரிகளும் 464 கடற்படையினரும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் இரண்டு நாடுகளுக்கும் இடையிலானநட்புரிமையை மேம்படுத்துவதற்காக தமது பயணத்தை மேற்கொண்டுள்ளது என அதுல செனரத் தெரிவித்தார்.

(அ-சி)

**காணி விற்பனைக்கு**

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் 43 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. அரைவாசியாகவும் வழங்கப்படும். தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 0777582996

நல்லூர்த் திருவிழாவினை முன்னிட்டு யாழ். மக்களிற்கு அறிமுகமாகின்றது...

**தரம், மணம், சுவை, நிறைந்த சண் ப்ளஸ் (SUN PLUSS) தேயிலை**

சுவையின் சிகரம் "சண் ப்ளஸ்" தேயிலை..
அருந்த அருந்த ஆனந்தம்

வழமையாக 34/= ரூபாவுக்கு விற்கப்படும் 50g சண் ப்ளஸ் தேயிலை நல்லூர் திருவிழா நாள்களில் 30/= ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது என்பதனை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றாம்.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

T.P: 021 222 9288
0777 637557
077 6553701

ARRIYAS Medikaa Store
770, Pointpedro Road,
Nallur, Jaffna.



**கலைமகள் அழகு நிலா**
**பயிற்சி நிலையம்**

ஏழு நாள்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பயிற்சி கற்றுக்கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக்கூடிய தொழிலுமாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன் முறையாகும்.

★ சனி, ஞாயிறுதினங்களிலும் பயிற்சிகள் இடம்பெறும்

பயிற்சிகள்

- ★ Facial (எட்டு வகை)
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Stretening (2 வகை)
- ★ Hair Perming
- ★ Hot Oil massage
- ★ Hair Cutting
- ★ Hair dye
- ★ Hair Colouring
- ★ Pedeicure manicure
- ★ கறுப்புக்காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
- ★ Bleaching
- ★ Bridal make up (6வகை)

பயிற்சிக் கட்டணம்: 4000/=, பயிற்சி ஆரம்பம்: 19.08.2010,
பயிற்சி நேரம்: மு.ப 9.30மணி-பி.ப. 4 மணிவரை.

கலைமகள் அழகு நிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 0773719071, 0214908151

வளமான ஆங்கில கணணிக் கல்வியை நோக்கி...

# KIDS ENGLISH AND COMPUTER COLLEGE

உங்கள் பிள்ளையின் கனவுகள் நிஜமாகும் இடம்!
*where your child's dream comes true!*

**ENGLISH FOR KIDS**

| | |
|---|---|
| Reception Stage<br>Pre-Stage | 1st Standard |
| Initial Stage- | 2nd Standard |
| Elementary Stage- | 3rd Standard |
| Intermediate Stage- | 4th Standard |
| Advanced Stage- | 5th Standard |

- Language Introduction
- Build up in Vocabulary
- Listening & Speaking
- Reading & Writing
- Grammar

**KIDS COMPUTER PROGRAMME**

Baby Com.
Kids Com.

- Introduction to computer
- Learning the parts of computer
- Learning computer applying and painting programmes
- Educational Software - An introduction
- Learning Educational software
- Fun with computer
- Games

**There is a standard for everybody age group between 3-12 years.**

- ஒவ்வொரு கற்கை நெறிகளும் 3 மாதகால நிர்ணயம் உடையது.
- முழுக்கட்டணத்தையும் இலகு தவணை முறையில் செலுத்தும் வாய்ப்பு.
- குறிப்பிட்ட மூன்று மாத காலத்தினுள் உங்கள் பிள்ளை குறிப்பிட்ட இலக்கை அடையவில்லை என எம்மால் கருதப்படுமிடத்து செலுத்தப்பட்ட கற்கைநெறிக் கட்டணம் முழுமையாக மீள் அளிக்கப்படும்.
- பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வளர்ச்சிப்போக்கு, ஆளுமை வளர்ச்சி, திறன்கள், குறைபாடுகள் சம்பந்தமாக எந்நேரமும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
- அனைத்து புதுமுக மாணவர்களும் நேர்முகப்பரீட்சையின் மூலமாகவே கற்கைநெறிகளுக்கு உள்வாங்கப்படுவார்கள்.

**உங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தில் தேர்ச்சி அடைவது நிச்சயம் ஏனெனில்...?**

- கிழமையில் நாள்தோறும் 3மணித்தியாலங்கள் ஆங்கிலத்தில் வேலைப்பாடு
- ஒரு வகுப்பில் 10 பேர் மட்டும்/ தனிப்பட்ட கவனிப்பு
- வகுப்பறையில் ஆங்கிலம் பேசும் வாயப்பு
- Audio, Video வளங்களைக் கொண்ட வகுப்பறைகள்
- Team work மற்றும் வித்தியாசமான அணுகுமுறை ஊடாக நவீன கற்பித்தல் செயன்முறை.
- ஒவ்வொரு கற்கை நெறி முடிவிலும் தரமான தேர்ச்சி அறிக்கை வழங்கப்படும்.

2010 August placement interviews will be held on 15th, 18th, 22nd & 05th, 08th of September.

**KECC**
THAMOTHARAMPILLAI ROAD, PERIYARASADY,
CHAVAKACHCHERI.
TEL:- 0214907206, 0775243777
(J/C.H.P.S ,ற்கு அருகாமையில்)

**தோட்டக் காணி விற்பனைக்கு**

மந்திகை - கொடிகாமம் பிரதான வீதியில் (புலோலிக்கு அருகாமையில்) 6 பரப்பு 7½குளி தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0113171542

**STUDY IN LONDON**
**STUDY IN INDIA**



- O/L சித்தி மாத்திரம் போதுமானது
- University / College Admission
- தேவையான Document ஒழுங்குகள்
- மூன்றே வாரத்தில் விசாவுக்கான ஒழுங்குகள்

**SPONSORSHIP**
**PAYMENT - AFTER VISA**

வெளிநாடு செல்லவுள்ள மாணவ,மாணவிகளுக்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துகொடுப்பதுடன் வெளி மாணவர்கள் தங்கியிருந்து IELTS படிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்துகொடுப்பதோடு பணரீதியான ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்படும்.

**EDUCATION BANK LOAN ARRANGEMENTS FOR COLLEGE FEES**

UK - 650000 to 750000
INDIA - 250000 to 300000
} 1 YEAR TOTAL

**ISO CERTIFIED INSTITUTION**
HND-BBA-BA-BSc-MA-MSc-BEng-B.Com-MBBS, PhD-IT-LLM-LLB-PGDip-MPharm-computer& ect

LAWYERS: Mr M. DINESH - Mr.M.ZAHIR - Miss.SUBASINY

**INTERNATIONAL CITY COLLEGE**
No: 07,W.A Silva Mawatha Wellawatte, Colombo - 06,
10 METERS FROM GALLE ROAD Tel : 0114 594 104 , fax: 0112 582722
தமிழ் மொழிமூல அழைப்புக்கு - 0771250789

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நமஹ

**றோயல் றெஸ்ரோரன்ட்**

**Royal Restaurant**

212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0771751495, 0214922361

இன்று முதல் விசேட

- ★ மரக்கறி புரியாணி,
- ★ மரக்கறிக் கொத்து
- ★ மசாலா தோசை,
- ★ பூரி,
- ★ சப்பாத்தி,
- ★ காளான் பொரியல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநியோகஸ்தர் தேவை

FREELAN ENTERPRISES (Pvt) Ltd நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களை யாழ்.மாவட்டத்தில் விற்பனை செய்வதற்கு விநியோகஸ்தர் தேவை.

தொடர்பு: 0777341355
E-mail: info@freelanmatara.com
Web: www.freelanmatara.com


# சுதுமலை ஆலயத்தில் ஒலி பெருக்கிகள் மாயம்

சண்டிலிப்பாய், ஓக.15

சுதுமலை அம்பாள் ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்கள் இரவுவேளையில் மாயமாக மறைந்துவிட்டன.

ஆலயத்தில் பத்துத் தினங்கள் தொடர்ந்து இடம்பெறும் இலட்சார்ச்சனைக்காக அங்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்தன. மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த இரு ஒலிபெருக்கிச் சாதனங்களே திருடப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் இரவு ஆலயத்திற்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்களையும், காரியாலயத்தில் வைக்கப்பட்டிருந்த பணத்தையும் திருடிச்சென்றதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-115)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் மறைவு
17.06.1976 03.08.2003
திதி: ஷஷ்டி-15.08.2010

**தெய்வேந்திரன் சதீஸ்**
(பழைய மாணவன் யாழ். பரியோவான் கல்லூரி)

ஆண்டுகள் ஏழு சென்றாலும்
ஆறவில்லை உன் பிரிவின் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அவை அனைத்தும் ஈடாகுமா
உன் அன்புக்கு.

என்றும் நினைவுடன்:
தாய் - தந்தை.

லண்டன். ஜெயா வெண்டிங் வேக்ஸ், 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.


## VACANCIES



DEBEER CAR-REFINISHES
Sunny Auto HI-BUILD LACQUER

## TECHNICAL ASSISTANTS

- Should have a Sound knowledge in spray paints and related products.
- 3 Years experience in painting vehicles
- Age below 30 Yrs
- Preference will be given to those who are capable in using 2K paints
- Ability to communicate in Tamil language is essential
- Should have a valid Driving Licence
- Willing to work in any part of the Island

Apply with complete CV and indicating the post on the top left hand corner of the envelop to reach us within 7 days to the address below.

General Manager,
C.P.T. CAUSEWAY PAINTS Lanka (Pvt) Ltd
15, Noel Mendis Mawatha,
Moderawila Industrial Estate, Panadura.



## வாடகைக்கு

யாழ்.நகர் 189, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வரா சந்தியில் அறைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 0773441329

## வீடு விற்பனைக்கு

இராமநாதன் வீதியில் பல்கலைக் கழகத்துக்கு சமீபமாக $1\frac{3}{4}$ பரப்பு காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0776381283

குறைந்த வட்டி அதிகூடிய பணம்
பவுணுக்கு
ரூ. 29,000 வரை
மாதாந்த வட்டி 1.16% மட்டுமே!
கொமேர்ஷல் வங்கியின் தங்க நகை அடகுச் சேவை
COMMERCIAL BANK


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் விண்ணில்

06 ★ 04 ★ 1958



16 ★ 07 ★ 2010

**அமரர் மயில்வாகனம் தற்பரநாதன்**

கடந்த 16.07.2010 அன்று சிவப்பேறெய்திய எங்கள் குடும்பத் தலைவன் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன். மனைவி, மகள்.


## சொலெக்ஸ் பல், மூக்குக் கண்ணாடி அகம்



உங்கள் கண்களைப் பரிசோதித்து கவர்ச்சிகரமான பிறேம்களில் கண்ணாடியினைப் பொருத்திப் பெற்றுக்கொள்ளலாம். நவீனரக சன் கிளாஸ்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சங்குப் பற்களை அழகாகக் கட்டவும். மிதப்புப் பற்களை கிளிப் பொருத்தி இலகு முறையில் சீர் செய்து கொள்ளவும்.



516, ஆஸ்பத்திரி வீதி, O.P.D. முன்பாக, யாழ்ப்பாணம். ☎021 222 7631

# CINEC Jaffna Campus

A BRANCH OF CINEC MARITIME CAMPUS, MALABE




யாழில் எமது கல்விச்சேவை...

IT
ENGLISH
MARITIME
LOGISTICS
ENGINEERING
VOCATIONAL TRAINING

HOTLINE
011 4 486 486

WORLD CLASS EXCELLENCE IN EDUCATION AND TRAINING www.cinec.edu


## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஓக. 15

இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தின் ஆண்டு நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இணுவில் கிழக்கு இளைஞர் கழகத் தலைவர் ப.ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் முன்னாள் உத்தியோகத்தர் கலந்து கொள்வார். (201-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தட்டிக்கொடுக்கவேண்டிய அரசு வெட்டி முறிக்கலாமா...?

இறக்குமதி செய்யப்பட்ட இருபதினாயிரம் தொன் அரிசியை சந்தைக்கு விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனால் நெல்லை விளைவித்த விவசாயிகளும் அரிசி ஆலை சொந்தக்காரர்களும் கலக்கம் அடைந்துள்ளனர்; கவலையுற்றுள்ளனர். ஆகப்பிந்திய தகவல் இது.

நீர்ப்பாசனத்தைக் கொண்டு நெல்விளைவிக்கும் பிரதேசங்களில் இது அறுவடை காலம். விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவு செய்வதில் வியாபாரிகளும் நெல் சந்தைப்படுத்தும் சபையும் போட்டிபோட்டு, ஈடுபடும் காலம். ஆனால், சிறுபோகத்தில் விளைந்த நெல்லை அரசாங்கம் கொள்வனவு செய்வதில் அசமந்தமாக இருந்ததால் - அதாவது நெல் சந்தைப்படுத்தும் சபை உரிய நேரத்தில் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யாததால், நெல்லுக்கு உரிய விலை கிடைக்காததால் விவசாயி ஒருவர் தமது நெல் மூடைகளுக்குத் தீவைத்த சம்பவம் அம்பாறையில் நடைபெற்றதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ்வருடம் ஜனவரி மாதத்துக்கும் மே மாதத்துக்கும் இடையிலான ஐந்து மாத காலத்தில் 122 மில்லியன் கிலோ அரிசியை அரசாங்கம் இறக்குமதி செய்தது. ஆயினும் ஒரு கிலோ அரிசி சராசரி 110 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் அதா வது அரசிடம் 800 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் கையிருப்பில் உள்ளதாக இப்போது கூட்டுறவுத்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார். மக்கள் நலன் கருதி இந்த அரிசி இருப்பை அவ்வேளை சந்தைக்கு விட்டிருக்கலாமே?

அதுமட்டுமன்றி நாடு அரசியில் தன்னிறைவு பெற்றுவிட்டதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அவ்வாறாயின் இறக்குமதி செய்யப்பட்ட 20 ஆயிரம் தொன் அரசியையும் இப்போது சந்தைக்கு விடவேண்டிய தேவை எதற்கென்ற கேள்வி எழுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை இருப்பில் வைத்திருந்தால் அது பழுதடைந்துவிடும். தனக்கு அதனால் நட்டம் ஏற்படக்கூடாது என்று அரசு நினைத் திருக்கலாம். விவசாயிகள் சிறுபோகத்தில் விளைவித்த நெல்லை விற்பதற்கும், அவர்கள் நெற்செய்கைக்குச் செலவிட்ட பணத்தையும் தொழிலால் கிடைக்கும் வருமானத்தையும் போக்கடித்து விடும் கெடுதியை அரசாங்கம் செய்வது எந்தக் காரணத்தைக் காட்டியும் நியாயப்படுத்தக்கூடிய ஒன்றல்ல.

விவசாயிகள், அவர்கள் நாட்டின் எந்தத் திசையில் வாழ்பவர்களாயினும், அவர் தம் வயிற்றில் அடிக்க அரசு தான்தோன்றித் தனமாக நடந்துகொள்வது கண்டனத்துக்குரியதாகும். இந்த நாட்டினரின் பிரதான உணவு அரிசி. அதனை எமக்கு விளைவித்துத் தரும் விவசாயிகளின் வயிற்றில் அடிப்பது அரசாங்கம் தனக்கு அடைமொழியாகக் கொண்டுள்ள சோஷலிசமே அல்ல.

ஒரு கிலோ நாட்டு இன நெல்லுக்கு 28 ரூபாவும் சம்பா இன நெல்லுக்கு 30 ரூபாவும் வழங்குவதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் பிரதான உணவுப்பொருளான அரிசியுடன், அதன் விநியோகத்தில், விற்பனையில் அரசு கீச்சுமாச்சுத் தம்பளம் விளையாடக்கூடாது. அவ்வாறு செயற்பட்டால் விவசாயிகளின் வயிற்றில் மட்டுமன்றி ஏனைய தொழில் புரியும் பொதுமக்களினதும் வயிற்றில் மட்டுமன்றி நாட்டின் பொருளாதாரத்திலும் புளி கரைப்பதாகிவிடும்.

வெளிநாடுகளில் இருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்து இந்த நாட்டின் உணவுத் தேவையை சரி செய்யும் அரசாங்கத்தின் ஜம்பமும் இனிச்சரிப்பட்டு வராது.

நாட்டில் இப்போது இரண்டாவது பிரதான உணவுப் பொருளாகி விட்ட பாணையும் அரிசியிலேயே உற்பத்தி செய்யவேண்டிய காலம் வந்திருக்கிறது. காரணம் உலகெங்கும் கோதுமைமாவின் விலை எகிறிவிட்டது. அதற்குப் பிரதான காரணம் உலக சந்தையில் கோதுமை மா உற்பத்தியில் மட்டுமன்றி ஏற்றுமதியிலும் முதல் நிலை வகிக்கும் ரஷ்யா அதனை நிறுத்தி விட்டது. ரஷ்யா வில் கடந்த பல தசாப்தங்களில் இல்லாதவாறு கடும் வரட்சி மற்றும் காட்டுத்தீயினால் விவசாய உற்பத்திகள் சரிந்துவிட்டன.

அந்த நாட்டின் விவசாயக் காணிகளில் ஐந்தில் ஒரு பகுதி சேதமடைந்துவிட்டது. அதனால் கோதுமை ஏற்றுமதி தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தடை இன்னும் நாலரை மாதங்களுக்குத் தொடரும். அதன் பின்னரும் முந்திய அளவுக்கு கோதுமை ஏற்றுமதி நடைபெறும் சாத்தியம் இராது.

ஆகையால் அரிசி மற்றும் அதுபோன்ற தானிய உற்பத்தியில், ஈடுபடும் நாடுகள், தங்களுக்குப் பழக்கப்பட்டு விட்ட உணவுகளில் ஒன்றான பாணை தத்தமது நாட்டு தானியங்களைக் கொண்டே தயாரிக்க நேரிடும். இது குறித்து உணவு மற்றும் சந்தைப்படுத்தல் துறைசார் சர்வதேச அமைப்புகள் ஆலோசனை வழங்கத் தொடங்கி விட்டன. உலகச் சந்தையில் கோதுமை மாவின் விலை உயர்ந்து செல்லும் சாத்தியம் உண்டே ஒழிய கீழிறங்கு வதற்கான அறிகுறி எதுவும் இல்லை என்றும் அவை முன்னெச்சரிக்கை விடுத்துள்ளன. இத்தகைய ஒரு பின்புலத்தில் இலங்கை தனது அரிசி உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களை வகுத்து விவசாயிகளை ஊக்குவித்து அவர்களின் பிரதான உற்பத்தியான நெல்லை இப்போதுள்ளதை விட பலமடங்கு உயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும். கோதுமை விலை உயர்ந்ததால் அரிசியின் விலையும் ஆசியாவில் அதிகரிக்கும். ஆகையால் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு காண்பதற்கு அரசு விவசாயிகளுக்கு கைகொடுக்கவேண்டும்; உதவவேண்டும்.

அரசியல் குளறுபடிகளில் கவனம் செலுத்துவதை தவிர்த்து, இந்தத் திசை நோக்கி ஆட்சியில் உள்ள அரசு நடைபோடவேண்டும். விவசாயிகளைத் தட்டிக்கொடுக்க வேண்டிய அரசு, அவர்களை வெட்டி முறிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவது எக்காரணம் கொண்டும் ஏற்கக் கூடியது அல்ல!

# 37 ஆயிரம் இலங்கையருக்கு கனடாவில் அரசியல் தஞ்சம்

கொழும்பு, ஓக.15

கடந்த 15 வருடங்களில் 37 ஆயிரம் இலங்கையர்களுக்கு கனடா அகதி அந்தஸ்து வழங்கியுள்ளது. இலங்கைக்கான முன்னாள் கனேடியத் தூதர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

உலகிலேயே மிகவும் இலகுவான முறையில் அகதிகள் புகலிடம் பெறக் கூடிய இடமாக கனடா இருந்து வருகிறது. ஆகவேதான் புகலிடம் கோரி வரும் ஈழத் தமிழர்கள் கனடாவை வந்தடைகின்றமையை மிகவும் விருப்பத்துக்கு உரிய தெரிவாகக் கொண்டுள்ளார்கள்.

கனடா மிகவும் மனிதாபிமானம் உடைய நாடு. ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது கனடாவில்தான் மிக அதிகமான எண்ணிக்கையில் அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டு வருகின்றது.

கனடாவை வந்தடைந்து அரசியல் தஞ்சம் கோருவோரில் 50 சதவீதமானோருக்கு அகதி அந்தஸ்து கிடைத்துவிடும். ஆனால் ஏனைய நாடுகளில் 15 சதவீதம்தான் இதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

எனவே, கனடா வருபவர்களுக்கு அரசியல் தஞ்சம் பெறுகின்றமைக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. உதாரணமாக அகதி அந்தஸ்து கோரி 2003 ஆம் ஆண்டு பிரிட்டன் சென்றிருந்த ஈழத் தமிழரில் 2 சதவீதத்தினருக்குத்தான் அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோல ஜேர்மனியில் 4சதவீதமானோருக்குத்தான் அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கனடாவில் 76 சதவீதமானோருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டு இருக்கின்றது. எனவே கனடா இந்த அகதிகளுக்கு பொன்முட்டை இடும் வாத்து மாதிரி.

அத்துடன் அகதிகள் என்று சொல்லி வருபவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை மேற்கொள்ள அரச செலவில் சட்டத்தரணிகளின் சேவை பெற்றுக் கொடுக்கப்படுகிறது. அதேபோல இலவச சுகாதார நலன்புரி சேவைகள் வழங்கப்படுகின்றன.

ஈழத் தமிழர்கள் கனடாவுக்கு வருகை தருகின்றமையை பெரிதும் விரும்புகின்றமைக்கு இன்னொரு பிரதான காரணியும் உண்டு. பல வருடங்களாக கனடாவில் கணிசமான தொகையில் ஈழத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு பிரான்ஸ் முழு ஆதரவு வழங்கும்

### அந்நாட்டுத் தூதர் கிரிஸ்டின் ரொபிக்கன்

கொழும்பு,ஓக.15

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு பிரான்ஸ் அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கும் - என்று இலங்கைக்கான பிரான்ஸ் தூதர் கிரிஸ்டின் ரொபிக்கன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் டி.எம்.ஜயரத்னவை நேற்று முன்தினம் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான விசும்பாயாவில் வைத்துச் சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரான்ஸ் அரச ஏற்கனவே வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது. மின்சாரம், வீதிகள் மற்றும் குடி தண்ணீர் திட்டங்கள் அமுல்ப்டுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

திருகோணமலை மாவட்டத்தில் இடம் பெயர்ந்த 3 லட்சம் பேருக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டமும், ஏ-15 பெருவீதியான திருகோணமலை - மட்டக்களப்பு பாதையில் ஐந்து பாரிய பாலங்களை அமைக்கும் திட்டமும் ஏற்கனவே மேற்கொள்ளப்படுகின்றன.

வட மாகாணத்தில் 50 நடுத்தர பாலங்களை மற்றும் பாரிய மதகுகள் அமைக்கும் திட்டமும் மேற்கொள்ளப்படுகிறது எனவும் பிரான்ஸ் தூதுவர் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்காக பிரான்ஸ் அரசு வழங்கும் உதவிகளுக்கு நம் நாடு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது என பிரதமர் டீ.எம்.ஜயரத்ன கூறினார்.

சமூக பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொளவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் அப்பிரதேசங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்த 40 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். (சி)

## வடக்கில் மீன் இனங்களின் விருத்திக்கு மத்திய நிலையம்

கொழும்பு,ஓக.15

வடபகுதியில் இறால், நண்டு மற்றும் மீன் இனங்களை விருத்தி செய்வதற்கான மத்திய நிலையமொன்றை அமைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான ஆய்வுகளை 'நாரா' நிறுவனம் ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மத்திய நிலையத்திற்காகச் செய்மதித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்படுள்ளது என நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி கே அருளானந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டால் வட பகுதியில் வாழும் மீனவர்கள் நன்மை அடைவார்களெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் மீன் உற்பத்தி அதிகரிப்பிற்கும் இது காரணமாக அமையுமென 'நாரா' நிறுவனத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

## புலி உறுப்பினரெனக் கூறி அமைச்சர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த இளைஞர் கைது!

கொழும்பு,ஓக.15

விடுதலைப் புலி உறுப்பினர் எனத் தம்மை அடையாளப்படுத்தி அமைச்சர்களுக்குக் கொலை மிரட்டல் விடுத்த வந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களுக்கும், அமைச்சுச் செயலாளர்களுக்கும் கையடக்கத் தொலைபேசி மூலம் கொலைமிரட்டல் விடுத்த புளத்சிங்கள பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவரையே மாளிகாவத்தை பொலிஸார் இவ்வாறு கைதுசெய்துள்ளனர்.

மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கையடக்கத் தொலைபேசிக்கு கிடைக்கப் பெற்ற கொலை மிரட்டல் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டபோது குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்தத் தேர்தல் காலத்தில் குறித்த தமிழ் இளைஞர் பிரபல அரசியல்வாதி ஒருவரின் சார்பில் தேர்தல் பிரசாரக் கடமைகளில் ஈடுபட்டிருந்தார் என்றும், அரசியல் குரோதம் காரணமாக இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இறுவட்டு வெளியீடு

கொழும்புத்துறை,ஓக.15

கலைஞர் ஆர்.வதனவாசனின் 'இசையோடு...' என்னும் கிற்றார் வாத்திய இசை இறுவட்டு வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இ.மதிகரன் தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் வி.ஞானகாந்தன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் யோ.பற்குணராசா, யாழ். பல நோ.கூ.சங்கத் தலைவர் மு. தேவேந்திரன், யாழ். மாநகர சபை உறுப்பினர் ம.மங்களநேசன், திருமறைக் கலாமன்ற இசை ஆசிரியர் எம்.யேசுதாசன் ஆகியோர் கலந்துகொள்வர்.

அறிமுக உரையை நாவலப்பிட்டி நகர சபையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் பி.திருநாவுக்கரசு நிகழ்த்துவார்.

முதற்பிரதியை கணனி தொழில் நுட்பவியலாளர் ப.சந்திரதாசன் (சுவிஸ்) பெற்றுக்கொள்வார். (ஓ-135-26)

## மட்டுவில் வடக்கில் இன்று மாபெரும் விளையாட்டு விழா

சாவகச்சேரி,ஓக.15

மட்டுவில் வடக்கு சத்திரன்கிராய் சவாரித் திடலில் இன்று ஞாயிறு பிற்பகல் ஒரு மணிக்கு மாபெரும் விளையாட்டு விழா நடைபெறவுள்ளது.

மட்டுவில் ஸ்ரீ அண்ணமார் ஆலய வளர்ச்சிக்காக இப்போட்டிகள் நடைபெறவுள்ளது. பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் ஆலய - பரிபாலன சபைத் தலைவர் நா.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் வேகநடை, ஆறுதல் சைக்கிள் ஓட்டம், ஆறுதல் மோட்டார் சைக்கிள் ஓட்டம், கைக்கொடிச் சவாரிப் போட்டி, மாட்டு வண்டி சவாரிப் போட்டிகள் என்பன நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக மட்டுவில் பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரி கப்டன் ஐ.பி.குமாரவும் சிறப்பு விருந்தினர்களாக விளையாட்டு மைதானத்திற்கு காணி அன்பளிப்பாக வழங்கிய வா.இராசசிங்கம், சி.குலசிங் கம், சி.இராமச்சந்திரன், வை.தவயோகநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மட்டுவில் அம்பாள் சன சமூக நிலைய தலைவர் க.கந்தையா, சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.ஐ.சனத்குமார், சமூக பொலிஸ் பிரிவு அதிகாரி எஸ்.ஐ. விலமசேன, மட்டுவில் சந்திபுரம் கிராம உத்தியோகத்தர் கு.பரமானந்தம், மட்டுவில் வடக்கு கிராம உத்தியோகத்தர் சி.சிவசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்த மைதானத்தில் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் மாட்டுவண்டிச் சவாரிகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-131)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 31 | 16.08.2010 திங்கட்கிழமை |
| திதி: | : ஷப்தமி மாலை 06.20 வரை |
| நட்சத்திரம் | : சுவாதி பி.ப. 12.50 வரை |
| சுபநேரம் | : 12.05-01.35 வரை |
| ராகுகாலம் | : 07.35-09.05 வரை |


## யாழ். ஆஸ்பத்திரியில் இரு சடலங்கள்; பொறுப்பேற்குமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.15

யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் இரு சடலங்கள் உரிமை கோரப்படாது உள்ளன. உரியவர்கள் இன்னும் மூன்று தினங்களுக்குள் பொறுப்பேற்குமாறு யாழ்.போதனா வைத்தயிசாலைப் பணிப்பாளர் எஸ். பவானி அறிவித்துள்ளார்.

அச்சுவேலியைச் சேர்ந்த வி.பொன்னுச்சாமி(வயது 76), நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த என்.கனகாம்பிகை (வயது 63) ஆகிய இருவரது சடலங்களே இதுவரை உரிமை கோரப்படாது யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லைக் கந்தன் பெருந்திருவிழாவுக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள தேரடி வேல்முருகன் ஆலயத்திலிருந்து இருந்து பாரம்பரிய முறைப்படி செங்குந்த மரபு மக்களால் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு கொடிச்சீலை எடுத்துவரப்படுவதையும் நல்லைக் கந்தன் ஆலயத்துக்குள் கொடிச்சீலை எடுத்துச் செல்வதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- ரட்ணம்)

# தமிழக மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்கும் வழிமுறை; பேச்சுநடத்த இலங்கை மீனவர்குழு இன்று புறப்படுகின்றது

யாழ்ப்பாணம், ஓக.15

இலங்கைக் கடற்பரப்புக்குள் றோலர் படகுடன் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்களின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தும் வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக வடபகுதி கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், தென்னிந்திய மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை மேற்கொள்வதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை அங்கு பயணம் மேற்கொள்கின்றனர்.

நீர்கொழும்பிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இதில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள் 25 பேர் அடங்குகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தவை வருமாறு-

வடபகுதியிலுள்ள கடல் வளத்தைப் பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய மீனவர்கள் றோலர் படகுடன் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து எமது பகுதி கடல் வளத்தை அழிப்பது குறித்து இலங்கை அரசின் கவனத்துக்கு பலமுறை கொண்டு வந்தோம். இலங்கை கடற்படையினரும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு அத்துமீறும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்த முயல்கின்றனர்.

கடந்த 2004ஆம் ஆண்டு கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற துறைசார் கலந்துரையாடலில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கலந்து கொண்ட போது கூட இந்த விடயத்தை பிரஸ்தாபித்திருந்தோம். இதற்குரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அவரால் தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்திய மீனவரின் அத்துமீறலுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை என்றார். (ஐ-14)

## குறிகாட்டுவானில் முதலுதவி சிகிச்சைப் பிரிவு

நெடுந்தீவு,ஓக.15

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவு குறிகாட்டுவான் துறைமுகத்தில் முதலுதவிச் சிகிச்சைகளை வாரந்தோறும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்த ஆரம்பித்துள்ளது.

குறிப்பிட்ட தினங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெருந் திரளான மக்கள் குறிகாட்டுவான் துறைமுகத்தின் ஊடாக நயினாதீவு, நெடுந்தீவு பகுதிகளுக்குச் செல்வதால் செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவு இத்தினங்களில் குறிகாட்டுவானில் முதலுதவிச் சிகிச்சைகளை வழங்க ஒழுங்கு செய்துள்ளது. (ஐ-111)

## தேசிய பாதுகாப்புத்தின ஒழுங்குகள்: யாழ்.செயலகத்தில் கூட்டம்


யாழ்ப்பாணம்,ஓக.15

தேசிய பாதுகாப்பு தினத்தை யாழ். மாவட்டத்தில் நினைவு கூருவதற்கான ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகளுடனான கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ. எச்.எம் பௌஸியின் ஆலோசனையின் பேரில் அமைச்சரவையினால் ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இம்முறை இத்தினம் யாழ்.மாவட்டத்தில் நினைவு கூரப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். (ஐ-16)

## பளை ம.விக்கு கற்றல் உபகரணங்கள்; சரவணபவன் எம்.பி. வழங்கினார்



யாழ்ப்பாணம்,ஓக.15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பளை மகாவித்தி யாலய ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் ஒரு தொகுதியை நேற்று கையளித்துள்ளார்.

பளை மகா வித்தியாலய பிரதி அதிபர் புஸ்பரட்ணம் தயாபரனிடம் கற்றல் உபகரணத் தொகுதியைக் கையளித்ததுடன் மாணவர்களின் கல்வி நடவடிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடலை அவர் மேற்கொண்டார்.

வித்தியாலயத்தை சுற்றிப் பார்வையிட்ட சரவணபவன் அவர்களின் தேவைகள் குறித்த விவரங்களையும் கேட்டறிந்தார். இந்த நிகழ்வில் கல்லூரியின் ஆரம்பக் கல்வி ஆசிரியர் திருமதி சோமினா அரவிந்தன், கணித ஆசிரியர் ஞானப்பிரகாசம் ஜோர்ஜ் பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-201)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.15

நல்லைக் கந்தன் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு கே.ஆர்.சுந்தரமூர்த்தி, கே. ஆர்.எஸ்.தேவதாஸ் ஆகியோரின் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும்.

கே.ஆர்.எஸ்.இராமதாஸ், ஆர்.பாஸ்கரன் உடன் தவில் வாசிப்பர். (ஐ-201)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.15

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழா காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சமய சொற் பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகளை நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இன்றைய நிகழ்வுகள் வரிசையில் இந்து சமய தர்மம் என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசர் அறநெறிப் பாடசாலை, மாதகல் விநாயகர் அறநெறிப் பாடசாலை, சங்கானை வெல்வில் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (த-201)

## தீவக அதிபர்களுக்கு நாளை செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஓக.15

தீவக வலய அதிபர்களுக்கான பாடசாலை மேம்பாட்டு செயற்றிட்ட செயலமர்வு நாளை திங்கட்கிழமை வேலணை கணனி வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது அணியில் பங்குபற்றாத சகல அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-16)

## கிளிநொச்சிப் பகுதி இந்து ஆலயங்களுக்கு நாமல் குழுவினர் வெள்ளியன்று விஜயம்

கிளிநொச்சி,ஓக.15

'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பின் தலைவர் நாமல் ராஜபக்ஷ அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி இந்து ஆலயங்களைத் தரிசித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு பளை, மாசார் பிள்ளையார் கோயிலுக்கும், பளை அறத்தி அம்பாள் கோயிலுக்கும் சென்று வழிபட்டு அந்த ஆலயங்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

நண்பகல் 12 மணிக்கு வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவிலுக்குச் சென்று அவர்கள் வழிபட்டனர். அவ்வேளை அருகில் உள்ள மம்மில் குளத்தைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் நாமலிடம் கோரிக்கை விடுத்தனர். அதுதொடர்பாகப் பரிசீலிப்பதாகவும் நாமல் ராஜபக்ஷ உறுதி கூறினார்.

அங்கிருந்து திரும்பிய குழுவினர் பகல் ஒரு மணிக்கு கிளிநொச்சி கந்த சுவாமி கோயிலுக்கும் தொடர்ந்து கனகாம்பி கைக்குளம் அம்மன் ஆலயத்துக்கும் சென்றனர்.

நாமல் ராஜபக்ஷ குழுவினர் ஆலயப் பகுதிக்குச் சென்ற சமயம் விசேட வழிபாடுகள் இடம்பெற்றதுடன் ஆலய நிர்வாகத்தினர் தமது கோயில் தொடர்பான வேண்டுகை மனுக்களையும் வழங்கியுள்ளனர்.

இதன்போது நாமல்ராஜபக்ஷ இந்து சமய கலாசார அமைச்சால் வழங்கப்படும் ஒரு லட்சம் ரூபா நிதிக்கான கடிதங்களை ஆலயங்களில் நிர்வாகத்தினரிடம் கையளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-10-405)

## நல்லை ஆலய வீதித் தடைகளில் இரும்புக் கதவுகள்



யாழ்ப்பாணம்,ஓக.15

நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தை முன்னிட்டு இம்முறை முக்கிய வீதித்தடைகளில் இரும்புக் கதவுகள் போடப்பட்டுள்ளன.

நேற்று இரவு 12 மணி முதல் 24 மணி நேரப் பணிகளில் பொலிஸாரும் மாநகர சபை உத்தியோகத்தர்களும் இருப்பார்கள். உற்சவம் முடியும்வரை 24 மணி நேரத் தடைகள் நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-111)

## சுந்தரர் குருபூசைகள்

யாழ்ப்பாணம்,ஓக.15

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சுவாமி தேவஸ்தானத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் ஆலயப் பூசையைத் தொடர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை வைபவத்தைக் கொண்டாட உள்ளனர்.

ஆலயப் பூசையைத் தொடர்ந்து நாயன்மார் நால்வருக்கு அபிஷேக ஆரோதனை வழிபாடுகள் நடைபெற்று சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருப்பதிகங்கள் பாராயணஞ் செய்யப்படும். இதற்கான ஒழுங்கை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி மேற்கொண்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,ஓக.15

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை திங்கட்கிழமை நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ்.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விசேட பூசை வழிபாடுகள், பஜனையுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் சொற்பொழிவுகளும் இடம் பெறவுள்ளன. (ஐ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய கொடியேற்றத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேளை, ஆரம்ப பூசைக்கென பிரதான பூசகர் தர்ப்பைகளுடன், கும்பங்கள் சகிதம் வருவதை முதலாவது படத்திலும், கொடியேற்றத்துக்கான அறிகுறியாகச் சோடனைகள் முன்கோபுர வாசலில் கொடி பறக்கவிட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் சுவாமி வீதி உலா வருவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் : கர்ணன்)

# கண்களைத் திறந்தபடி...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ரணிலுக்கு கைகொடுத்தார் ஜெனரல் பொன்சேகா

உண்மையில் ஜெனரல் சரத் பொன்சேகா என்பவர் ரணிலின் கழுத்தைப் பதம் பார்க்கவிருந்த ரயிலுக்குத் தண்டவாளத் தில் தாமே கழுத்தைக் கொடுத்து ரணிலைக் காப்பாற்றிய ஒருவராவர். அன்று ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து ஜெனரல் பொன்சேகா போட்டி யிட முன்வராதிருந்தால் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து ரணிலே போட்டியிட வேண்டி நேர்ந்திருக்கும். தாம் போட்டியிட்டாலும் வெற்றிபெறும் வாய்ப்புக்கிட்டாது என்ற அச்சம் காரணமாகவே ரணில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த் துக் கொண்டார்.

அவ்விதம் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிட்டுத் தோல்வியடைந் திருந்தால் ரணில் அரசியல் அரங்கிலிருந்து ஒதுங்கிக்கொள்ள நேர்ந்திருக்கும். அவ் விதம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு ரணில் தோல்வியுற்றிருந்தால் அடுத்துவந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ரணில் அரசியல் அரங்கிலிருந்து தூக்கியெறியப்பட்டிருப்பார்.

இந்த யதார்த்த நிலையைச் சீர்தூக்கிப் பார்த்த ரணில், ஜெனரல் சரத்பொன்சேகாவை எதிரணியின் பொது வேட்பாளராகப் போட்டியிடுமாறு வற்புறுத்தினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் மஹிந்த ராஜபக்ஷ வின் கரைச்சல்களைத் தாங்கிக்கொள்ள இயலாத நிலையில் இருந்தார் ஜெனரல் சரத் பொன்சேகா. அவர் மஹிந்த ராஜபக்ஷவைப் பகைத்துக் கொண்டிருக்காதிருந்தால் சில வேளை மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் பாதுகாப்பு அமைச்சர் பதவி கிட்டாவிட்டாலும் கூட வேறொரு முக்கிய அமைச்சுப் பொறுப்பை வகிக்க முடிந்திருக்கும்.

### ஜெனரலுக்கு மஹிந்த வழங்கிய உறுதிமொழி

உண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிடுவதைத் தவிர்த்துக்கொண்டால் தனது அரசில் பிர தமர் பதவியை வழங்குவ்தாக ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியிருந்தார். ஜெனரல் சரத் பொன் சேகா அரசியலில் பிரவேசித்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாதிருந்தால் அவருக்கு முன்னாள் ராணுவத் தளபதி என்ற கௌரவ மாவது கிட்டியிருக்கும்.

ஆனால் ரணில் தமது கழுத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஜெனரல் சரத் பொன் சேகாவை எதிரணியின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடு மாறு வற்புறுத்தினார். ஜெனரல் சரத் பொன் சேகாவுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கும் இடையே நிலவிய கருத்துவேறு பாட்டைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியே ரணில் அத்தகைய திட்டத்தை வகுத் துச் செயற்பட்டார்.

முடிவில் மஹிந்த ராஜபக்ஷ தரப்பைப் புறக்கணித்து, ரணில் தரப்பின் மீது நம் பிக்கை வைத்து ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன் வந்தார். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது ஐ.தே.கட்சி செயலணி எதிரணியின் பொதுவேட்பாள ரான சரத் பொன்சேகாவுக்குத் தீவிரமான விதத்தில் ஆதரவு தேடிக்கொடுக்க முயல வில்லை. இதனால் ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் நடவடிக்கைகள் தீவி ரம் அற்றுப்போக நேர்ந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா தோல்வியுற்று, குற்றச்சாட்டின் மீது கைது செய்யப்பட்டதையடுத்து ஐ.தே. கட்சி அவரை விட்டுத் தூர விலகிச்சென்றது.

### பொன்சேகாவை நட்டாற்றில் கைவிட்டது ஐ.தே.க.

அந்தவேளை முதல் இன்றுவரை ரணிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பல தடவைகள் சந்தித்துக் கொண்டனர். அரச தரப்புடன் ஐ.தே.கட்சித் தரப்பினர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். ஆனால் ரணிலின் அரசியல் இருப்பைத் தக்கவைத் துக்கொள்ள வழிசெய்த, ஐ.தே.கட்சிக்காகக் கழுத்தைக் கொடுக்க முன்நின்ற ஜென ரல் சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்து இந்த ஐ.தே.கட்சித் தரப்பினரில் ஒருவர் தானும் அரசிடம் ஒரு வார்த்தைதானும் பேசியதில்லை; ஜெனரலின் கைது குறித்துக் கேள்வி எழுப்பியதில்லை.

''நாம் பேச்சுவார்த்தைக்கு உடன்படுகிறோம். ஆனால் ஜெனரல் சரத் பொன்சே காவை நீங்கள் விடுதலை செய்யுங்கள்'' என்று அரசிடம் கூறுவதற்கு இந்த ஐ.தே. கட்சித் தரப்பினரில் எவருக்கும் துணிவு இருக்கவில்லை.

ரணிலை அரசியல் பின்னடைவிலிருந்து காப்பாற்றிய ஜெனரல் சரத் பொன் சேகா சிறையில் வாடும் அதேவேளை ரணிலும் அவரது கட்சியின் பிரதிநிதிகளும் அலரி மாளிகைக்குச் சென்று உண்டு குடித்து மகிழ்கின்றனர். ஆகக்குறைந்தது ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் சிறையில் வாடும் ஐ.தே.கட்சிப் பிரமுகர் தெவ ரப் பெருமாவையாவது விடுவியுங்கள் என்று அரசிடம் கேட்கக்கூடிய தைரியம் கூட ஐ.தே.கட்சித் தரப்பினரிடம் ஏன் இருக்கவில்லை?

பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க, பிரதீப் எக்னலிகொட ஆகியோரின் படுகொலைகள் குறித்து அரசிடம் வினா எழுப்பும் திறன் இவர்களிடம் அமையாததற்குக் காரணம் என்ன?

### மசக்கை ஆசை

அத்தகைய பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது கேள்வி எழுப்பாது ஐ.தே.கட்சியின் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதி வழங்கிய உணவு உபசாரத்தில் கவனம் செலுத்தியது ஒரு வகையில் அவர்களது மசக்கை ஆசை காரணமாகவே எனக்கொள்ள முடிகிறது.

ஜனாதிபதி ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரசின் பக்கம் இழுத்துக்கொள்ள இலக்கு வைத்துச் செயற்படுகிறார். ஆனால் ஐ.தே.கட்சி சார்பில் பேச்சுவார்த்தைக்குச் செல்லும் பிரதிநிதிகள் குழுவினரோ அங்கு கிட்டும் உணவு உபசாரங்களில் மயங்கி உண்டுகளித்துத் திளைப்பதிலேயே ஆர்வம் காட்டுவது புதுமையானதொன்றல்லவா?

# சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஓக.15

பொலிகண்டி, இருப்பைமூலை சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட் கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ் வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204-239)

* * *

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு மணங் குணாய் பிள்ளையார் ஆலயபெருந் திரு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துதினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204-207)

* * *

ஆனைக்கோட்டை வரதவிக்ன விநாய கர் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திரு விழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த் தத் திருவிழாவும் இடம்பெறும். (204-100)

* * *

புங்குடுதீவு, பெருங்காடு முத்துமாரி யம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா இன்று நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ் வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

* * *

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆல யத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த் தத் திருவிழாவும் இடம்பெறும்.

* * *

யாழ். புனித மரியாள் பேராலய விண் ணேற்பு பெருவிழாவில் இன்று ஞாயிற் றுக் கிழமை காலை 6.30 மணிக்கு திரு விழாத் திருப்பலி இடம்பெற்று திருச் சொரூப பவனியும் ஆசியும் இடம்பெறும். (204-135)


**நிழல் அல்ல; நிஜம்!**

ஒரே வாரத்தில் தீர்வு, கருமைநிறம் மறைய கரும்புள்ளிகள், முகச்சுருக்கங்கள் உதடுகருமை மறைய அழையுங்கள்!

0777351954, 0774011129

உடற்பருமன் கூட்டவும் குறைக்கவும் அழையுங்கள்

We CARE ALWAYS

**தேவை**

யாழ்.நகரில் அமைந்துள்ள Netcafe ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள ஆண்/பெண் வேலை ஆள்கள் தேவை.

NCS Netcafe
No. 226, Manipay Road, Jaffna.
(வைத்தீஸ்வராச் சந்தி) T.P.: 0772222083

**விரைவான பயண ஒழுங்கு**

*ஐரோப்பா, கனடாவில் வேலையுடன்/ வேலை இல்லாத பயண ஒழுங்கு.
*தாதியருக்கு UKயில் வேலையுடன் கூடிய விசா ஒழுங்கு.
முற்பணம் இல்லை,
குறைந்த செலவு.
தொ.பே:0724 670551

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை Courts Road இல் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய 6 பரப்பு 6 குழி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 011 2360220

**திருமண சேவை**

15 வருட திருமண சேவை நிறைவினை முன்னிட்டு வேல்அமுதன் பாரிய சேவைக் கட்டணக்குறைப்பு! விவரங்களைச் சுயதெரிவு முறை முன்னோடி, சர்வதேச, மூத்த, திருமண ஆற்றுப்படுத் துநர் வேல்அமுதனுடன் திங் கள், புதன், வெள்ளி மாலையிலோ சனி, ஞாயிறு நண்பகலிலோ தொடர்பு கொண்டு விசாரித்தறிக!

தொ.பே:0112360488, 0112360694, 0114873979


**தவறிவிட்டது**

துஷ்யந்தி ஆனந்தலிங்கம் என்பவரது தேசிய அ.அட்டை, மருத்து பீட மாணவர் அ.அட்டை உட்பட அத்தியாவசிய ஆவணங்கள்,கைத்தொலைபேசி என்பன கைப்பையுடன் 750 ஆம் பாதை இலக்க பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு - 0774447646, 0789139619


**உரம் (UREA) விநியோகத்தர்கள் தேவை (முகவர்கள்)**

இறக்குமதி செய்த உரம் (UREA) 50Kg Bag யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் முகவர்கள் தேவை. களஞ்சிய வசதியுள்ள

தொடர்புகொள்க.

0714920857


# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் நித்தியானந்தன்



தச்சன்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நித்தியானந்தன் 13.08.2010 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-தங்கமணி தம்பதியரின் மகனும் சாந்தரூபினியின் அன்புக் கணவரும் நிசாந்தன் (லண்டன்), நிறோஷன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), நிகல்யா (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி) நிரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆறுமுகசாமி (ஓய்வு பெற்ற தொ.நு.உ. யாழ்.மாநக்ர சபை), கனகேஸ்வரி, இரா ஜேஸ்வரி, பஞ்சாட்சரம் (பாரின்), அமரர் ஞானேஸ்வரி மற்றும் செல்வராணி (லண்டன்), நந்தகுமார் (லண்டன்), கண்ணதாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு பிற்பகல் 2 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி லேன்,
கேசாவில் பிள்ளையார் கோயிலடி,
வண்ணார்பண்ணை.

(102043)

தகவல்:
பொ.ஆறுமுகசாமி
(சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளவத்தை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு நேற்று வவுனியா செயலகத்தில் இடம்பெற்ற போது அங்கு சமுகமளித்து பகிரங்கமாகச் சாட்சியம் அளிக்கையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் பகிரங்க சாட்சியம் அளித்த பின்னர் இரகசியமாகச் சாட்சியம் அளிக்க விரும்புவதாகவும் ஆணைக்குழுவினரிடம் தெரிவித்தார். அதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பகிரங்க சாட்சியத்தில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

வன்னி யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்களின் அவலம் தொடர்கின்றது. யுத்தம் முடிந்து ஒரு வருடம் பூர்த்தியாகியும் அவர்களுக்கு இன்னமும் அமைதியான வாழ்வு கிட்டவில்லை.

அவர்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை. கூடார வாழ்க்கையையே அவர்கள் தொடர்கின்றனர். வீட்டு வசதியோ, வாழ்வாதார உதவியோ அரசால் செய்யப்படவில்லை.

### அபிவிருத்திக்கு முன்னர் அவலப்படும் மக்களின் வாழ்வை நோக்குங்கள்

பெரியளவிலான அபிவிருத்திக்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அவற்றுக்கு முன்னர் அவலப்படும் மக்களின் வாழ்வைச் சீராக்கவே ஏற்பாடு செய்யவேண்டும் அதற்கே முன்னுரிமை வழங்க வேண்டும்.

முறிகண்டிப் பகுதியில் மீளக்குடியமர அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாமல் இடைத்தங்கல் முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைக்கு முடிவு ஏற்பட்டு அவர்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டு அவர்களிடம் நம்பிக்கையைக் கட்டி எழுப்ப ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்றுள்ள சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான தீர்வு கிட்ட வேண்டுமானால் அதிகாரம் பகிர்ந்து அளிக்கவேண்டும் - என்றார். (ஒ-ஐ)

**வேலை ஆள்கள் தேவை**

1) புத்தகக் கடை, பலசரக்குக் கடை, மில் போன்றவற்றில் வேலை செய்ய ஆள்கள் மற்றும் சிட்டை எழுதுநர் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னரிமை வழங்கப்படும். தங்குமிடம் மற்றும் உணவு வசதியும் உண்டு.சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

2) ஆலயத்தை பராமரிக்கவும் ஆலய வெளிவேலையும் மேற்கொள்ளக்கூடிய சைவ ஆசாரமுள்ள நடுத்தர வயதுடைய ஒருவரும் தேவை.

தொடர்பு: 0777769231

## பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவைச் சேர்ந்த உமாகாந்தன் நகுலேஸ்வரி என்பவர் சாட்சியம் அளிக்கையில் -

எனது கணவர் எமது வீட்டில் வைத்து வெள்ளைவானில் வந்தோரால் கடத்திச் செல்லப்பட்டார். அவர் தொடர்பாக பல இடங்களிலும் தொடர்புகொண்டு கேட்ட போது பலன் கிடைக்கவில்லை. காணாமற்போன எனது கணவரைக் கண்டு பிடித்து தாருங்கள் - என்றார்.

தாய் ஒருவர் சாட்சியம் அளிக்கையில் பலவந்தமாக விடுதலைப் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்ட எனது மகன் கடைசிக் கட்டத்தில் மே மாதத்தில் மொட்டையடித்து விடுவிக்கப்பட்டார். அவரை வவுனியாவுக்கு அழைத்துச் சென்ற போது ஓமந்தையில் எங்களை விட்டு அவர் பிரிக்கப்பட்டார். பின்னர் 'மெனிக்' முகாமில் அவர் இருந்ததாக வேறு சிலர் மூலம் அறிந்தேன். ஆனால் எமக்கு தகவல் எதும் கிடைக்கவில்லை. அவரை மீட்டுத்தாருங்கள் - என்றார்.

சுதர்சன் சிவனேஸ்வரி என்ற இளம் பெண் சாட்சியம் அளிக்கையில் -

விடுதலைப் புலிகள் அமைப்பில் செயற்பட்டதற்காக கைது செய்யப்பட்ட எனது கணவன், வெலிகந்த முகாமில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால் அவரைப் பார்க்க அனுமதி மறுக்கப்படுகிறது. அவரை விடுவிக்க ஏற்பாடு செய்யுங்கள் - என்றார்.

வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி நல்லதம்பி என்பவர் சாட்சியம் அளிக்கையில் -

2008ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கூமாங்குளத்தில் படையினர் நடத்திய தேடுதலில் எனது மகனைக் கைதுசெய்து அழைத்துச் சென்றனர். மறுநாள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத் துச் செல்லும் வழியில் சிலர் அவரைக் கடத்திச் சென்றனர்.

தேடிச்சென்றபோது அவர் வெள்ளை வானில் கடத்தப்பட்டமை தெரியவந்தது. இதுவரை அவரைப் பற்றித் தகவல் எதுவும் இல்லை. அவரைக் கண்டுபிடித்துத் தாருங்கள் - என்றார்.

நேற்றுமுற்பகல் 11.30 மணிக்கு விசாரணை முடித்துக்கொண்ட குழுவினர் ஓமந்தையில் விடுதலைப் புலிப் போராளிகள் தடுத்துவைத்துள்ள முகாமுக்கு சென்றனர்.

இன்று விசாரணைக்குழு நெடுங்கேணியில் பொது மக்களுக்கான அமர்வை நடத்த உள்ளது. (அ-ஐ)

# கைதடிப் பகுதி ஆலயம் ஒன்றில் கலாட்டா; நேற்றிரவு தகரப்பந்தல் நொறுக்கப்பட்டது

### அன்னதானம் வழங்கும் விடயத்தில் இரு தரப்புகள் இழுபறி

கைதடி, ஒக.15

கைதடிப் பகுதியிலுள்ள இந்து ஆலயம் ஒன்றில் அன்னதானம் வழங்கும் விவகாரத்தில் நீண்ட காலமாக நிலவிவந்த பிணக்கை அடுத்து நேற்றையதினம் இரவு ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க தகரப் பந்தல் அடித்து நொறுக்கப்பட்டது.

இரு பிரிவினருக்கு இடையே தொடர்ந்து வரும் இந்த விவகாரத்தால் அன்னதான மண்டபம் பூட்டப்பட்டுள்ளது.

இதே நிலையில் ஒரு பிரிவினர் ஆலயத்தின் பின்பக்கம் உள்ள ஒரு காணியில் பந்தல் அமைத்து அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்திருந்தனர். இதனால் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிஸார் இதில் தலையிட்டு, ஆலய நிர்வாகத்தினர் இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீத்துவைக்க வேண்டும் என்றும் -

ஆலய மண்டபத்திலேயே அன்னதானம் வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்திச் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றிரவு அங்கு வந்த ஒரு கும்பல் நாளை (இன்று) இவ்விடத்தில் அன்னதானம் வழங்கக் கூடாது எனக் கூறியவாறு அந்தப் பந்தலை அடித்து நொறுக்கினர்.

இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சாவகச்சேரிப் பொலிஸார் அவ்விடத்துக்கு விரைந்து வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ஒ-288-323)

## சரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை முன்னெடுத் தது.

இது தொடர்பான விசாரணைகளை அடுத்தே அந்த நீதிமன்றம் சரத் பொன்சேகாவை குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பளித்தது.

அதற்கமைய அவருடைய தரங்கள் மற்றும் பதக்கங்கள் யாவும் அபகீர்த்தியான வகையில் ரத்தாவதாக அது அறிவித்திருந்தது தெரிந்ததே. (ஒ-ஐ)

## நல்லூர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயச் சூழலில் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலங்களை விட சகல சேவைகளும் விரிவுபடுத்தப்பட்டு பக்தர்கள் பக்திபூர்வமாக முருகப்பெருமானைத் தரிசிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சைவசமய காலாசாரத்தைப் பேணும் வகையில் பக்தர்கள் உடைகளை அணிந்து ஆசாரசீலர்களாக பங்குபற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பக்தர்களின் வசதி கருதி அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைக் காண வசதியாக தொலைபேசி வசதியுடன் விசேட கருமபீடமும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தைச் சூழவுள்ள மணிமண்டபங்களிலும், மடங்களிலும் மற்றும் வீதிகளிலும் முறையே அன்னதானமும் தாக சாந்தி வசதிகளும் செய்யப்படும். (ஒ-ஐ-111)

## வைமன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச்சம்பவம் பற்றிக் கூறப்படு வதாவது:-

வாள்களுடன் எண்மர் கொண்ட குழு ஒன்று 3 பெண்கள் மட்டும் தங்கியிருந்த வீட்டுக்குள் புகுந்தது, அந்தப் பெண்களை வாள்முனையில் அச்சுறுத்திய கொள்ளையர்கள் அவர்களிடம் இருந்து ஒரு இலட்சம் ரூபா பணம் மற்றும் நகைகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளைக் கோஷ்டியை எதிர்த்த பெண்களை அவர்கள் வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர். இந்தத் துணிகரக் கொள்ளை நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு மிகச்சமீபமாக சில மீற்றர்கள் தொலைவில் உள்ள வீதியில், ஆலயச் சூழலில் வர்த்தகர்களின் நடமாட்டம் இருந்த வேளையில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-ஐ-78)

**தேவை**

உருக்குத் தளபாடம், M.T.F. BOARD தளபாடம் செய்வதற்கு ஆள்கள் தேவை.

தொடர்பு :-
T.P.:0212222846, 0779050186

**நல்லூர் பெருந்திருவிழாவில் பூபாலசிங்கத்தின் புத்தகத் திருவிழா**

விசேட விலைக்கழிவில் வேண்டிய புத்தகங்களைக் கொள்வனவு செய்யலாம்.

(சலுகைகள் உற்சவகாலம் மட்டும்)

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

நல்லூர் உற்சவகாலச் சிறப்பு விற்பனை நிலையம்
(சிவன்கோயில் அருகாமை)

**வேலையாள்கள் தேவை**

பிரபல ஸ்தாபனத்துக்கு
விற்பனையாளர் - ஆண்கள்
களஞ்சிய பொறுப்பாளர் - ஆண்கள்
கணக்கு பதிவாளர் (பெண் வயது 25-40)
தொடர்பு கொள்ளவும்:-
T.P.:0776912278, 0774822708

**RHCE** GNU/Linux இல் வல்லுனராகுங்கள் 100% knowledge
Red Hat Certified Engineer
Call me:0776577359 R.Kumaran-B.Sc.

New batches and Paper class MIS
ICT - 10 / 11
R.Kumaran - B.Sc.
100% pass rate for last 3 years
அடிப்படையிலிருந்து முற்று முழுதாகக் கற்பதற்கு......
# 74, Sabapathy Lane, Thalaiyaali, pirambady,Jaffna
TPNo : 0776577359

அழகியல் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான
வழிகாட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்: 15.08.2010 (Sun 1.00pm)
By.P.கமல்தாசன்
**நாவலர்**
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்

**கணக்கீடு**
Group Classes
புதிய பிரிவுகள்

| 2011 A/L | 2012 A/L |
| --- | --- |
| ஆரம்பம் | ஆரம்பம் |
| 21.08.2010 4pm | 23.08.2010 4.00Pm |
| ★ பங்குடமை | ★ தனி வியாபாரக் கணக்கு |
| ★ கம்பனி | ★ வங்கி இணக்கக் கூற்று |

ஒரு பிரிவில் 10 மணவர்கள் மட்டும்
By: T.சுதர்சன் ,BBA (Fm Spl) K.கஜீபரன்
MCC 880/4, கே.கே.எஸ் வீதி, மதவடி, நாச்சிமார் கோயிலடி.
T.P: 0772534325, 0778448622

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre for International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
குறிப்பு: ஒக்ரோபர் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
GOV. Reg. No W/A 76795
T.P-: 077 4842464, 021 3216928, 0779927117

**இலவசக் கருத்தரங்கு**

- UK இல் தற்போதைய நிலைமை.
- உங்கள் கல்வித் தகைமையும் அதற்கேற்ற விண்ணப்பங்களும்
- ENGLISH AND IELTS முக்கியத்துவம்
- அங்கீகாரமான University or College என்பவற்றின் விண்ணப்ப ஆலோசனை
- தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளும் அவற்றைக் கையாளும் முறையும்
- SPONSOR ஆலோசனை
- VFS and UCAS அனுமதி பெறல்

போன்ற அனைத்து ஆலோசனைகளும் தரப்படும்.
(அனுபவம் உள்ள ஆலோசகர்களால்)
காலம் : 16.08.2010 Monday 10.30 a.m.
இடம் : Niru Business College, No : 451, Kandy Road, Nunavil Center, Chavakachcheri.
Contact : 0777491163
E.mail : sk.haran@yahoo.com

**SM Consultant Services**

இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.



இலண்டனில் உயர்கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

G.C.E O/L English: B அல்லது IELTS உடன் இலகுவாக உடனடியாக விசாக்கள் பெற்றுத்தரப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்புகொண்டு தேவையான விவரங்களைச் சமர்ப்பித்து விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**STUDY IN UKRAINE**

வேறு எங்கும் இல்லாதவாறு மிகக்குறைந்த கட்டணத்தில் Lugansk & Crimea State Medical University - (Ukaraine) இல் இணைந்து சிறீலங்கா Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக வர விரும்பினால் உடன் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

**STUDY IN INDIA**

இந்தியாவில் பிரபலமான SRM University, Bangalore University, Madras University என்னும் இது போன்ற பிரபலமான கல்லூரிகளில் கற்பதற்கு உடன் அனுமதிகள் பெற்றுத்தரப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

பாடநெறிகள்: B.E., B.Sc., B.Ed., BBM, B.Com, B.PT, BA, LL.B., M.Sc., MBBS, MBA

அனைத்து விவரங்களுக்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம். அனைத்துச் சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

SM Consultant services
148, கோவில் வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.
Mobile: 0774528818, Tel: 0215673818, Fax: 0212223818.
E-mail: mg1404_2009@yahoo.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org